REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2023 ஜனவரி 2 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

1932 - 2022

வரு. 91 இல. 01 | Monday 02, January, 2023 | 12பக்கங்கள் | 50/-


மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கைகளுக்காக

## பாடசாலைகள் இன்று மீண்டும் ஆரம்பமாகிறது



நாடளாவிய ரீதியிலுள்ள சகல பாடசாலைகளும் இன்று திங்கட்கிழமை முதல் 2022ஆம் ஆண்டுக்கான மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்ட கல்வி நடவடிக்கைகளுக்காக ஆரம்பமாகவுள்ளதாக கல்வி 04

## நிவாரணத் திட்டம் அரசு தீவிர ஆராய்வு

### அமைச்சர் பிரசன்ன தெரிவிப்பு



நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டம் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

குறைந்த வருமானம் பெறும் பிரிவினர் மற்றும் 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்கு சில திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அமைச்சரவையில் விவாதிக்கப்பட்டுள்ளது. 04

## ஜனாதிபதி மாளிகையிலிருந்து 39 ஓவியங்களை காணவில்லை

### அனைத்தும் மிகப்பெறுமதியானவை எனவும் தெரிவிப்பு



போராட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகையில் பிரவேசித்த பின்னர் அங்கிருந்த 39 மர மற்றும் கேன்வாஸ் ஓவியங்கள் காணாமல் போயுள்ளன.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போதே இந்த தகவல் வெளியாகியுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி மாளிகையின் 209 ஓவியங்கள் மற்றும் சித்திரங்கள் பாதுகாப்பிற்காக தொல்பொருள் திணைக்களத்திடம் 04

## கறுப்புச் சந்தை வர்த்தகத்தை இல்லாதொழிக்க நடவடிக்கை

### விசேட சட்டம் விரைவில் என்கிறார் அமைச்சர்



கறுப்புச் சந்தை வர்த்தக நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தும் நோக்கில் விசேட சட்டம் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

வாடிக்கையாளர்களை ஏமாற்றி கூடுதல் விலைக்கு பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தகர்களின் வியாபார அனுமதிப்பத்திரத்தை ரத்துச் செய்யும் வகையில் புதிய சட்டமொன்று அறிமுகம் செய்யப்படவுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலைமைகளை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு நினைத்தவாறு பொருட்களின் 04

2022 இல் ஜனாதிபதி நிதியத்திற்கு கிடைக்கப்பெற்ற

# 11,000 விண்ணப்பங்களுள் 10,360 இன் பணிகள் நிறைவு

- 2022 இல் மருத்துவ உதவிக்காக 1500 மில். ரூபா செலுத்தப்பட்டுள்ளது.
- அநேகமான கொடுப்பனவுகள் ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ளன ஏனையவை ஓரிரு மாதங்களில்.
- 2023ஆம் ஆண்டில் ஜனாதிபதி நிதிய பணிகளை மிகவும் திறம்பட நிறைவேற்ற உழைக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை.

ஜனாதிபதி நிதியத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ள 11,000 விண்ணப்பங்களுள் 10,360 விண்ணப்பங்கள் தொடர்பான பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக



அதன் செயலாளர் டபிள்யூ.ஏ. சரத்குமார தெரிவித்தார்.

அநேகமான விண்ணப்பங்களுடன் தொடர்புபட்ட கொடுப்பனவுகள் ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ள நிலையில் எஞ்சிய விண்ணப்பங்களுக்கான கொடுப்பனவுகளையும் எதிர்வரும் ஓரிரு வாரங்களில் செலுத்துவதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

அதற்கமைய, இவ்வருடத்தில் மருத்துவ உதவிக்காக சுமார் 1500 மில்லியன் ரூபா தற்போது வரை செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

2022.08.01 ஆம் திகதி வரை ஜனாதிபதி நிதியத்தில் குவிந்து கிடந்த 8,210 விண்ணப்பங்கள் தொடர்பில் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து அதற்கான பணிகளை நிறைவு செய்யுமாறு ஜனாதிபதி 04

## அமரர் சந்திரசேகரன் அனைவராலும் நினைவு கூரப்படத்தக்க மாமனிதர்

### மலையக மக்கள் முன்னணி தலைவர் இராதாகிருஷ்ணன் MP



ஹற்றன் சுழற்சி நிருபர்

அமரர் பெ. சந்திரசேகரனின் நினைவு தினத்தை இந்த நாட்டில் இருக்கின்ற அனைவருமே நினைவு கூர வேண்டும். அவர் 1994ம் ஆண்டு தனி ஒருவராக அரசாங்கத்தை உருவாக்கினார். வட, கிழக்கு மக்களுடன் நல்லுறவை பேணினார். மலையக மக்களின் வாழ்வில் மாற்றத்தை கொண்டு வர அபிவிருத்தியை தோட்டங்களுக்கு கொண்டு வந்தார். எனவே அவரை நினைவு கூர வேண்டியது அனைவருடையதும் பொறுப்பாகுமென மலையக மக்கள் முன்னணி மற்றும் மலையக தொழிலாளர் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பெ. இராதாகிருஷ்ணன் 04

## 2022 ஆம் ஆண்டில் இலங்கைக்கு 240 மில். டொலர் உதவிகள்

### அமெரிக்க தூதுவர் ஜூலி சுங் தெரிவித்துள்ளார்



2022 ஆம் ஆண்டில் மட்டும் இலங்கைக்கு 240 மில்லியன் டொலருக்கும் அதிகமான உதவிகளை அமெரிக்கா வழங்கியுள்ளதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சுங் தெரிவித்துள்ளார்.

புதிய உதவி அடிப்படையில் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துகிறது. அத்துடன் பாடசாலை மதிய உணவுகளுக்கான நிதி, சிறு விவசாயிகளுக்கு உரம் மற்றும் புதிய மற்றும் கர்ப்பிணி தாய்மார்களுக்கு பண உதவி உள்ளிட்ட 04

## முட்டை விலை குறைக்காவிடின் பேக்கரி விலைகள் அதிகரிக்கும்

### பேக்கரி உற்பத்தியாளர் சங்கம் எச்சரிக்கை



முட்டை பிரச்சினைக்கான தீர்வு கிடைக்கப்பெறாவிட்டால் பாண் உள்ளிட்ட ஏனைய பேக்கரி உற்பத்திகளின் விலைகள் அதிகரிக்கப்படும் என அகில இலங்கை பேக்கரி உற்பத்தியாளர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதன் தலைவர் என்.கே ஜயவர்தன ஜாஎலயில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

முட்டையொன்று 55 ரூபாவுக்கு விற்பனை 04

## தீர்வுப் பேச்சு வெற்றிபெற கடவுளைப் பிரார்த்திக்கின்றேன்

### கூட்டமைப்பின் தலைவர் புதுவருட வாழ்த்து



அரசு ஆரம்பித்துள்ள தீர்வுக்கான பேச்சு நல்லபடியாக நிறைவேற வேண்டும் என இந்தப் புத்தாண்டில் கடவுளை நான் பிரார்த்திக்கின்றேன் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

தமது புதுவருட வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் தெரிவித்துள்ளதாவது,

"பிறக்கின்ற புத்தாண்டு தமிழ் மக்களுக்கு சிறந்த 04

## 'கஞ்சிபான இம்ரான்' இந்தியா சென்றுள்ளார்?

### தமிழகத்திற்குள் நுழைந்துள்ளதாக தகவல்



போதைப்பொருள் கடத்தல்காரர்களின் தலைவனென அழைக்கப்படும் 'கஞ்சிபான இம்ரான்' எனும் முகமது நஜீம் முகமது இம்ரான் இலங்கையிலிருந்து தமிழகத்திற்குள் நுழைந்துள்ளதாக 'தி இந்து' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

டிசம்பர் 25 ஆம் திகதி ராமேஸ்வரம் ராமநாதபுரம் மாவட்ட கடற்கரையில் கஞ்சிபான இம்ரானும் அவரது சகாவும் இறங்கியதாகவும், இது தொடர்பாக அவதானமாக இருக்குமாறு 04

பாதிக்கப்பட்டோரது கூற்றுக்கே பெறுமதி அதிகம்;

## கூட்டமைப்பின் முடிவை தமிழர் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்

### காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகள் நேற்று தெரிவிப்பு



புதுவருட தினமான நேற்றும் (ஜன. 1) காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் வவுனியாவில் போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

வவுனியா, ஏ9 வீதியில், வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு முன்பாக 2142ஆவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தாய்மாரால் குறித்த கவன யீர்ப்பு போராட்டம், அவர்களது போராட்ட 04

## பொலிஸ் OIC வீட்டுக்குள் நுழைந்த கொள்ளையர்கள்

### களுத்துறையில் மூவர் அதிரடியாக கைது



வடக்கு களுத்துறை பொலிஸ் நிலையத்தின் பல்வேறு முறைப்பாடுகள் பிரிவின் நிலையப் பொறுப்பதிகாரியின் வீட்டுக்குள் புகுந்து கொள்ளையிட்ட குழுவைச் சேர்ந்த மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அண்மையில், வெலிப்பன்ன, பொந்துபிட்டிய பிரதேசத்தில் உள்ள பொலிஸ் அதிகாரியின் வீட்டுக்குள் 04

தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவது?

## 07ஆம் திகதி மத்திய குழு கூட்டத்திலேயே இறுதி முடிவு

### தமிழரசு கட்சியின் தலைவர் மாவை தெரிவிப்பு



தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவது என்பது தொடர்பில் எதிர்வரும் 7ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில்தான் முடிவு எடுக்கப்படும் என கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியில் உள்ள ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து 04



போதைப்பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டு;

### சுற்றுலா பயணிகள் எண்மர் அதிரடி கைது

03



### பிறப்பு சான்றிதழை இலகுவாக பெற ஏற்பாடு

திருத்தம் கொண்டுவரவும் அரசு திட்டம்

03

## தெற்கு அதிவேக பாதையில் விபத்து

### சாரதி வைத்தியசாலையில் அனுமதி



தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பஸ் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது. கதிர்காமத்தில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த பஸ் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது. விபத்தில் காயமடைந்த சாரதி வைத்தியசாலையில் 04

## அரசாங்க ஊழியருக்கு விசேட கொடுப்பனவு

### நேற்று முதல் நடைமுறைக்கு வந்தது



அரசாங்க ஊழியர்களுக்கு விசேட முற்பணம் வழங்குவது தொடர்பில் பொது நிர்வாக அமைச்சு விசேட சுற்றறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. இந்த நடவடிக்கை நேற்று முதல் நடைமுறைக்கு வருகின்றது. இதன்படி, 2023 ஆம் ஆண்டில் அரசாங்க 04

கிழக்கில் எல்லை நிர்ணய நடவடிக்கை;

## சமூகங்களிடையே பிளவை ஏற்படுத்திவிடக் கூடாது

### த.ம.வி.பு செயலாளர் பிரசாந்தன் எச்சரிக்கை



உள்ளூராட்சி மன்றத் தேர்தலை மையப்படுத்தியதாக எல்லை நிர்ணயங்கள் மேற்கொள்ளப்படுகின்றபோது அது தமிழ்-முஸ்லிம் மக்களிடையே இனப் பிரச்சினைகளை ஏற்படுத்திவிடக்கூடாது என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் பொதுச் செயலாளரும் முன்னாள் கிழக்கு மாகாண 04

வவுனியாவில் பாவனைக்கு உதவாத அரிசி மீட்பு சம்பவம்;

## இந்திய அரசின் நிவாரண அரிசி பதுக்கல் தொடர்பில் CID விசாரணை



வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஆசிகுளம் கிராம அலுவலர் பிரிவு மதுராநகர் பகுதியில் பாவனைக்கு உதவாத நிலையில் மீட்கப்பட்ட இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட நிவாரண அரிசி தொடர்பாக CID விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வவுனியா ஆசிகுளம் கிராம சேவகர் பிரிவில் உள்ள மதுராநகர் கிராமத்தில் அரச கட்டடமொன்றின் அறையினுள் இந்தியாவின் தமிழ்நாடு அரசினால் வழங்கப்பட்ட 1272 கிலோ நிவாரண அரிசிகள் பதுக்கி வைக்கப்பட்ட நிலையில் அப்பகுதி மக்களால் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. இவ் விடயம் தொடர்பாக வவுனியா பிரதேச 04

# நகர்வலம்



# அமைச்சர் பந்துல குணவர்தன பிரபல நடிகர் சிறில் விக்ரமவின் வீட்டுக்கு விஜயம்



வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன பிரபல நடிகர் சிறில் விக்ரமவை நேற்று(1) கல்கிசை, கலாபுரயில் அமைந்துள்ள அவரது வீட்டில் சந்தித்து புது வருட வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

91 வயதான அவர் தனது மனைவி பிள்ளைகளுடன் ஓய்வு காலத்தை மகிழ்ச்சியுடன் கழித்து வருகின்றார். மேடை நாடகம், சினிமா, டெலிட் டிராமா போன்ற மூன்று கலைத்துறைகளிலும் சிறந்த நடிகராக பரிணமித்துள்ள சிறில் விக்ரம, பம்பரு எவித், கருமக் காரயோ, செயிலம, வெஸ்கத்தோ, சுந்திலாகே கதாவ, மற்றும் சிறிமதுர போன்ற படங்களில் பல பாத்திரங்களில் நடித்துள்ளார்.




பழைய சிங்களத் திரைப்படங்களுடன் தொடர்புடைய கலைஞர்களுடன் குறுகிய உரையாடல் ஒன்றை நடத்தி அவர்களின் திரைப்படங்களை தொலைக்காட்சி ஊடகம் மூலம் மீண்டும் ஒளிபரப்புவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு அங்கு அமைச்சர் சுயாதீன ரூபவாஹினி சேவையின் தலைவர் சுதர்சன குணவர்தனவிற்கு ஆலோசனை வழங்கினார்.

வெகுசன ஊடக அமைச்சருடன் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் அனுஷ பெலபிட்ட, சுயாதீன ரூபவாஹினி சேவையின் தலைவர் சுதர்சன குணவர்தன, தேசிய திரைப்பட கூட்டத்தாபனத் தலைவர் தீபால் சந்திரரத்ன மற்றும் லேக் ஹவுஸ் ஆசிரிய பீடப் பணிப்பாளர் சிசிர பரணதந்திரி ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

# நகர பிதா மஸாஹிம் மொஹம்மட்டின் சகோதரர் காலமானார்

**அஜ்வாத் பாஸி, பி.எம். முக்தார்**



பேருவளை மருதானையை பிறப்பிடமாகவும் தர்கா நகர், இஸ்னாபுள்ள வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மஸ்ஜிதுல் அப்ரார் பள்ளிவாசலின் முன்னாள் தர்மகர்த்தா அல்ஹாஜ் முனவ்வர் (வயது 73) நேற்று தர்கா நகர் இல்லத்தில் காலமானார்.

இவர் ஹாஜியானி ரிப்காவின் கணவரும் அல்ஹாபிழ் அர்க்கமின் அன்புத்தகப்பனாருமான இவர், பேருவளை நகர சபைத்தலைவர் மஸாஹிம் மொஹம்மதின் மூத்த சகோதரரும் முன்னாள் சபாநாயகர் மர்ஹூம் எம்.ஏ. பாக்கீர் மாக்காரின் மருமகனும் முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான இம்தியாஸ் பாக்கீர் மாக்காரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஜனாஸா நேற்று அஸர் தொழுகையைத் தொடர்ந்து தர்கா நகர் ஜும்ஆப் பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

ஜனாஸா நல்லடக்கத்தில் உலமாக்கள், ஊர் பிரமுகர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பள்ளிச்சங்க நிர்வாகிகள், அரசியல் பிரமுகர்கள், முக்கியஸ்தர்கள், ஏனைய சமூகங்களைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் உட்பட பெருந்திரளானோர் கலந்து கொண்டனர். பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல், அமைப்பாளர் இப்திகார் ஜெமீல், முன்னாள் எம்.பி அஸ்லம் ஆகியோர் அன்னாரின் மறைவு குறித்து அனுதாபச் செய்திகளையும் வெளியிட்டுள்ளனர்.



பலாங்கொடை அப்துல் ஹசன் அறக்கட்டளை மற்றும் கொலன்னாவை மத்ரஸதுன் நூர் அரபு பாடசாலையும் இணைந்து நடாத்திய வருடாந்த பரிசளிப்பு விழா நிகழ்வு கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் (31) சனிக்கிழமை மாலை நடைபெற்றது. அதில் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் பிரிவு ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர் தெமட்டகொட யுனைட்டட் விளையாட்டு கழக செயலாளர் எம்.இசட்.எம். ஜபாருக்கு பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிப்பதையும் அருகில் முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவி புர்கான் பீ. இப்திகாருடன் ஏனைய பிரமுகர்களையும் படத்தில் காணலாம்.

# அநுராதபுரத்தில் வறுமை நிலையிலுள்ள 13,597 குடும்பங்களுக்கு நிவாரணம்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அநுராதபுரம் மாவட்டத்தில் 13,597 குடும்பங்கள் கடுமையான உணவு பற்றாக்குறையுடன் வாழ்வதாக வடமத்திய மாகாண திட்டமிடல் குழு கூட்டத்தின் போது மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சுகத் நயனாநந்த தெரிவித்தார்.

மேற்படி மாவட்டத்தில் 22 பிரதேச செயலக பிரிவுகளிலும் 2 இலட்சத்து 48 ஆயிரம் குடும்பங்கள் உள்ளனர்.

அதில் 13,597 குடும்பங்கள் இவ்வாறு கடுமையான உணவு பற்றாக்குறையினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த குடும்பங்களுக்கு பிரதேச செயலாளர்களினால் பல்வேறு வகையில் உணவு வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இவர்களுக்கு கிராம மட்டத்தில் குழுக்கள் மூலமாக வாரத்தில் இரண்டு தடவைகளில் உலர் உணவுப் பொருட்கள் அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அதற்கு மேலதிகமாக விஹாரைகள் மூலமாகவும் உணவு வங்கி மூலமாகவும் நிவாரணம் வழங்கவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அநுராதபுரம் மாவட்டத்தில் கடுமையான போஷாக்கு குறைபாட்டினால் தொள்ளாயிரம் சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் தலைமையில் கடந்த (28) மாகாண சபை கூட்ட மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## வலம்புரி கவிதா வட்ட 83 ஆவது கவியரங்கு

வலம்புரி கவிதா வட்டத்தின் 83 ஆவது கவியரங்கு எதிர்வரும் 06ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கொழும்பு, பழைய நகர மண்டபத்தில் நடைபெறவுள்ளதோடு நிகழ்வுகள் நண்பகல் 12 மணிக்கு நிறைவுபெறும்.

கவிஞர் கவிநேசன் நவாஸ் தலைமையில் நடைபெறும் இக்கவியரங்கு நிகழ்வில் நான்கு நிமிடங்களுக்கு உட்பட்ட கவிதை பாட விரும்புவோர் பின்வருவோரை தொடர்பு கொள்ளவும்.

இளநெஞ்சன் முர்ஷிதீன் (செயலாளர்) 077 738 8149 அல்லது ஈழ கணேஷ் (பொருளாளர்) 071 756 3646 அல்லது நஜ்முல் ஹுசைன் (தலைவர்) 071 4929 642 வட்ஸ் அப் உடன் தொடர்பு கொள்ளவும்.

# 30 வருட ஆசிரிய சேவையிலிருந்து நூறுல் ஹுஸைமா ஓய்வு



**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

கெக்கிராவ கல்வி வலயத்திற்குட்பட்ட இஹலபுளியங்குளம் முஸ்லிம் வித்தியாலயத்தில் சுமார் 30 வருடங்களாக ஆரம்பகல்வி ஆசிரியையாக கடமையாற்றிய நூறுல் ஹுஸைமா தனது 60 ஆவது வயதில் அப்பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

1992 ஆம் ஆண்டு ஆசிரிய நியமனம் பெற்று இஹலபுளியங்குளம் முஸ்லிம் வித்தியாலயத்தில் தனது கல்விப் பணியை ஆரம்பித்த அவர், தெமட்டகம முஸ்லிம் வித்தியாலயத்தில் சிறிதுகாலம் கடமையாற்றியதுடன் 30 வருடகாலமாக ஆசிரியையாக கடமையாற்றியுள்ளார்.

இந்நிலையில் கடந்த (22) ஆம் திகதி ஓய்வுபெற்ற அவருக்கு இஹலபுளியங்குளம் முஸ்விம் வித்தியாலய அதிபர் உள்ளிட்ட ஆசிரியர் குழாம், மாணவர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் உட்பட முழு கிராமமும் இணைந்து மலர் கொத்து வழங்கி கௌரவித்து பிரியாவிடையளித்தனர்.

# அவுஸ்திரேலிய தூதுவர் ஹம்பாந்தோட்டைக்கு விஜயம்

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**




அவுஸ்திரேலியா நாட்டின் இலங்கைத் தூதுவர் போல் ஸ்டிபென்ஸ் அண்மையில் ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்திற்கு விஜயம் செய்து துறைமுக செயற்பாடுகளை பார்வையிட்டார்.

இவருடன் தூதரக அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

அதிதிகள் துறைமுகத்தைச் சுற்றிப் பார்வையிட்டதோடு துறைமுக அதிகாரிகளுடன் துறைமுக செயற்பாடுகள், எதிர்காலத் திட்டங்கள் மற்றும் துறைமுக நடவடிக்கைகள் தொடர்பாக இரு தரப்பினருக்கும் இடையில் கலந்துரையாடல்களும் இடம் பெற்றன.

அவுஸ்திரேலியா நாட்டின் இலங்கைத் தூதுவர் போல் ஸ்டிபென்ஸ் இலங்கையின் தெற்குப் பிரதேசம் துறைமுகத்திற்கும் விஜயம் செய்துள்ளமை இதுவே முதல் தடவையாகும்.

## ஆயுர்வேத சிகிச்சை நிலையம் என்ற பேரில் விபச்சார விடுதி

### இரு பெண்கள் உட்பட முகாமையாளரும் கைது

**மொறட்டுவை மத்திய விசேட நிருபர்**

ஆயுர்வேத சிகிச்சை நிலையம் எனும் பெயரில் இயங்கி வந்த விபச்சார விடுதி ஒன்றினை முற்றுகையிட்ட கல்கிசை குற்றத்தடுப்பு பிரிவினர் அதன் முகாமையாளரையும் அங்கு பணியாற்றிய இரண்டு பெண்களையும் கைது செய்துள்ளனர்.

முகாமையாளர் குருநாகலையைச் சேர்ந்தவரென்றும் பெண்கள் இருவரும் கோப்பாய், பயாகலை பகுதிகளைச் சேர்த்தவர்கள் என்றும் இவர்கள் இருவரும் 23, 32 வயதுகளை உடையவர்கள் என்றும் ஆரம்ப விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலைக்கொண்டு நீதிமன்ற உத்தரவுடன் இச்சுற்றிவளைப்பை மேற்கொண்டதாகவும், பொலிஸ் அதிகாரி ஒருவர் இந்நிலையத்தின் சேவையை பெற்றுக் கொள்ள மாறுவேடம் பூண்டு இந்த ஆயுர்வேத நிலையத்திற்கு சென்றதன் மூலம் இவர்களை முறையாக கைது செய்ய முடிந்ததாகவும் பொலிஸார் தெரித்தனர்.

சந்தேக நபர்களை மாஜிஸ்திரேட் முன் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

# தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலையத்தில் புத்தக கண்காட்சி

**பேருவளை விசேட நிருபர்**

தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஸ்தாபகர் கலாநிதி நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிமின் ஆலோசனைக்கமைய தர்கா நகர் மர்ஹபா வரவேற்பு மண்டபத்தில் மாபெரும் புத்தக கண்காட்சியும் விற்பனையும் சிறப்பாக நடைபெற்றது.

கண்காட்சி அங்குரார்ப்பண நிகழ்வில் பன்னூலாசிரியர் ஹாபிஸ் இஸ்ஸதீன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். இதன்போது பாடசாலை மாணவர்களுக்கு தேவையான கற்றல் உபகரணங்களும் மலிவான விலையில் விற்பனை செய்யப்பட்டது. பாடசாலை சிறார்களின் ஆற்றல்களை வளர்க்கும் விதத்தில் கலை, கல்வி, சித்திரம் போன்ற போட்டி நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

தர்கா நகர் லோடஸ் வீதியில் உள்ள மர்ஹபா வரவேற்பு மண்டபத்தை நோக்கி பிரதேசவாசிகள் காலை முதல் இரவு வரை படையெடுத்து இக்கண்காட்சியை பார்வையிட்டதோடு பெறுமதியான நூல்களையும் கொள்வனவு செய்தனர்.



ஸ்ரீ ஜயவர்தனபுர ஆஸ்பத்திரி வைத்தியர் ரஹ்மத்துல்லாஹ் நஜீப், பிரபல சமூக சேவையாளர் அப்துல் காதர், வர்த்தகர் எம். லியாஸ் ஹாஜியார், முகத்த முஷ் ஷாதுலி முஹம்மத் ஹுஸைன், துன்துவை முஸ்லிம் மகா வித்தியாலய முன்னாள் அதிபர் ஏ.எச்.எம். ஸம்ஸதீன், நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய பணிப்பாளர் ஏ.ஜே.எம்.அக்பர் உட்பட பலரும் பங்குபற்றினர். வாசிப்பின் முக்கியத்துவம் பற்றி பிரதம அதிதி விசேட உரையாற்றியமையும் குறிப்பிடத்தக்கது.

# போதை மாத்திரை விற்பனை செய்த பெண் கைது

### வலானை பொலிஸ் பிரிவில் சம்பவம்

**மொறட்டுவை மத்திய விசேட நிருபர்**

பாணந்துறை நகரில் உள்ள பிரதான மகளிர் கல்லூரிக்கு அருகில் போதை மாத்திரைகளை விற்பனை செய்துவந்த பெண் ஒருவரை வலானை குற்றத்தடுப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து இப் பெண் கைது செய்யப்பட்டதாகவும், கைது செய்த பெண்ணிடமிருந்து 300 போதை மாத்திரைகள் காணப்பட்டதாகவும் பொலிஸார் கூறினர்.

பெண் பொலிஸ் அதிகாரியொருவர் பாடசாலை சீருடையுடன் போதை மாத்திரை வாங்குவதுபோல் குறித்த பெண்ணின் வீட்டுக்குச் சென்று மாத்திரை வாங்குவதுபோல் பாசாங்குசெய்து சந்தேக நபரை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

தினகரன்
THINAKARAN
2023 ஜனவரி 2 திங்கட்கிழமை

தொழுகை நேரம்
சுபஹ் - 05.00
லுஹர் - 12.15
அஸர் - 03.36
மஃரிப் - 06.06
இஷா - 07.21

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் மார்கழி 18
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



## சென்னை – யாழ்ப்பாணம் விமான சேவை குறித்து சுற்றுலாத்துறையினர் மகிழ்ச்சி

சென்னைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையேயான விமான சேவைகள் கடந்த மாதம் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் அது சிறந்த பலனை தந்துள்ளதாக சுற்றுலாத்துறையினர் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர்.

குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் முதலீட்டு நடவடிக்கைகளுக்கான வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு விமான சேவையின் போதும் 90 சதவீதத்திற்கும் அதிகமான ஆசன பதிவு செய்யப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

வாரத்திற்கு நான்கு சேவைகள் மேற்கொள்ளப்படும் நிலையில், அதிக அளவில் இந்தியாவில் இருந்து சுற்றுலா பயணிகள் யாழ்ப்பாணத்துக்கு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### துறைமுகத்தை ஆழப்படுத்தும் அபிவிருத்தி திட்டம்;

# அமைச்சரின் தலையீட்டால் மீண்டும் பணிகள் ஆரம்பிப்பு



துறைமுகங்கள், கப்பற்றுறை, மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால த சில்வாவின் தலையீட்டாலும் மற்றும் ஆலோசனையின் பேரிலும் துறைமுகங்களை ஆழமாக்கும் நடவடிக்கையை நிறுத்தியிருந்த இரண்டு படகுகளான தியகொவ்லா மற்றும் ஹன்ஸகாவா படகுகளின் நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கை துறைமுக அதிகார சபைக்கு சொந்தமான மேற்குறிப்பிட்ட இரண்டு படகுகளும் பயிற்சி ஊழியர்களின் தட்டுப்பாடு காரணமாக துறைமுகத்தை ஆழப்படுத்தல், சேற்று மண் அகழ்தல் போன்ற நடவடிக்கைகள் நிறுத்தியிருந்தன என அதிகாரிகளாலும் மற்றும் ஊழியர்களாலும் அமைச்சருக்கு தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் தனிப்பட்ட ரீதியில் இது குறித்து ஆராய பண்டாரநாயக்க இறங்குத்துறையில் நிறுத்தப்பட்டிருந்த படகுகளை பார்வையிடுவதற்காக சென்ற அமைச்சர், அங்கு தற்போது துறைமுகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதோடு 'ஹன்ஸகாவா' படகுமூலம் துறைமுக கண்காணிப்பு விஜயம் ஒன்றையும் மேற்கொண்டார்.

அங்கு தற்போது தொழில்சார் ஊழியர்களை இணைத்துக் கொள்வது நிறுத்தப்பட்டுள்ள பின்னணியில்

04

### புத்தாண்டு தினத்தில்

## 67 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதி

புத்தாண்டு பிறந்ததில் இருந்து ஏற்பட்ட அனர்த்தங்களால் 67 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவ்வாறு பதிவான அனர்த்தங்களில், வீதி விபத்துக்களால் 17 பேரும், பட்டாசு உள்ளிட்ட கேளிக்கை வெடி விபத்தினால 4 பேரும் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் 18 பேரும் வாய்த்தகராறு காரணமாக ஏற்பட்ட மோதலில் காயமடைந்த 3 பேரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அதன் பணிப்பாளர் விசேட வைத்தியர் குமார விக்ரமசிங்க தெரிவித்தார்.

நேற்றைய தினம் மாத்திரம் வாகன விபத்துக்களினால் 42 பேரும் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் 64 பேரும் வாய்த்தகராறு காரணமாக ஏற்பட்ட மோதலில் காயமடைந்த 37 பேரும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# குருசெத்த கடன் வட்டி வீதம் அதிகரிப்பு

## ஆசிரியர் சேவை சங்கம் எதிர்ப்பு!

அதிபர் ஆசிரியர்களுக்கான குருசெத்த கடனுக்கான கடன் மற்றும் வட்டி தவணைகளை செலுத்தும் போது 9.5 சதவீதமாக இருந்த வட்டியை 15.5 சதவீதம் வரை அதிகரிக்க எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அந்த சங்கத்தின் தேசிய அமைப்பாளர் சுந்தரலிங்கம் பிரதீப் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ள இந்த சந்தர்ப்பத்தில், அரச வங்கிகள் மூலம் குருசெத்த கடன் திட்டத்தின் கீழ் குருசெத்த கடனுக்கான வட்டியை அதிகரிக்க வங்கிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்ட பாதீட்டு திட்டத்தில் அதிபர் ஆசிரியர்களுக்கு எவ்விதமான கொடுப்பனவுகளும் அதிகரிக்கப்படவில்லை என இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் தேசிய அமைப்பாளர் சுந்தரலிங்கம் பிரதீப் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அந்த சங்கத்தின் செயலாளர் மஹிந்த ஜயசிங்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

### போதைப்பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டு;

# சுற்றுலா பயணிகள் எண்மர் அதிரடி கைது



ஹட்டன் பகுதிக்கு வருட இறுதி விடுமுறையினை கழிப்பதற்காக பெரும் எண்ணிக்கையிலான சுற்றுலா பயணிகள் படையெடுத்துள்ளனர்.

இவ்வாறு போதைப் பொருட்களுடன்சுற்றுலா வந்த எட்டு பேர் ஹட்டன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பெரும்பாலான உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலா பிராயாணிகள் நுவரெலியா, எல்ல, சிவனொளிபாதமலை, பதுளை உள்ளிட்ட பல பகுதிகளுக்கு வருகை தருவதாக தெரிவிக்கப்படுகிறது. அதிகமான சுற்றுலா பிராயாணிகள் புகையிரதங்களின் மூலமே வருகை தருகின்றனர். இதனால் புகையிரதங்களில் அதிக எண்ணிக்கையிலான சுற்றுலா பிராயாணிகள் செல்வதனால் புகையிரதங்களில் நெரிசல் நிலை காணப்படுகின்றன. மலையக பகுதிகளுக்கு போதைப்பொருட்களை கொண்டு வருவதனை தடுக்கும் நோக்கில் ஹட்டன் பொலிஸ் கோட்டத்தில் பல்வேறு இடங்களில் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

புகையிரதங்களில் வருபவர்களை ஹட்டன் புகையிரத நிலையத்திலும் வாகனங்களில் வருபவர்களை கினிகத்தேனை கலுகல தியகல உள்ளிட்ட பல பகுதிகளிலும் சோதனை

04

# பிறப்பு சான்றிதழை இலகுவாக பெற ஏற்பாடு

## திருத்தம் கொண்டுவரவும் அரசு திட்டம்



பிறப்புச் சான்றிதழைப் பெறுவதில் பொதுமக்களுக்கு ஏதேனும் சிரமம் ஏற்பட்டால் எதிர்காலத்தில் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படும் என்று உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக் பிரியந்த தெரிவித்துள்ளார்.


அரச நிறுவனங்களால் பொது மக்களுக்கு வழங்கப்படும் சேவைகளை நெறிப்படுத்துவதே தற்போதைய அரசாங்கத்தின் நோக்கமாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், பதிவாளர் நாயக திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவைகளை நெறிப்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கம் என்றும் தெரிவித்துள்ளார்.

டிசம்பர் 31ஆம் திகதி முதல் அரச சேவையில் இருந்து 30,000 அரச உத்தியோகத்தர்கள் ஓய்வு பெற்ற நிலையில் அரச நிறுவங்களினால் வழங்கப்படும் சேவைகளுக்கு எந்த இடையூறும் ஏற்படாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

04

# மின் கட்டண திருத்த யோசனையை புத்தாண்டின் முதல் அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்க ஏற்பாடு



2023ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள மின் கட்டண திருத்தம் தொடர்பான யோசனை எதிர்வரும் அமைச்சரவைக் கூட்டத்தில் முன் வைக்கப்படவுள்ளது.

இதன் அடிப்படையில், இலங்கை மின்சார சபையினால் அறவீட்டு முறைமை தயாரிக்கப்பட்டு, பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இதனையடுத்து, குறித்த அறவீட்டு முறைமை நியாயமானதா என்பது தொடர்பில் ஆராய்ந்து பின்னர் தேவையேற்படின் பொதுமக்களின் கருத்து கோரப்படும்.

மானியங்கள் வழங்கப்பட்டால், அது தொடர்பில் திறைசேரியிடம் கருத்துகளை கேட்டறிந்த பின்னர் அதனை கருத்திற்கொண்டே மின்கட்டணதிருத்தத்திற்கு அனுமதி வழங்கப்படுகின்றது.

இந்த முறைமையின் ஊடாக இலங்கை மின்சார சபை பாதுகாக்கப்படும் அதேவேளை, நுகர்வோருக்கு நியாயமான விலையில் மின்சாரம் கிடைக்கின்றமையும் உறுதிப்படுத்தப்படுகின்றது.

பொதுமக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுவை கவனத்திற்கொள்ளாது மின்கட்டணம் தொடர்பான தீர்மானத்தை மேற்கொள்ள அரசாங்கம் முயற்சிக்கின்றது. டிசம்பர் மாதம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில், 2022 ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட மின் கட்டணத் திருத்தம் போதுமானதாக இல்லையென மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், தற்போதைய நிலையில் மின்சார கட்டணத்தை அதிகரிக்க வேண்டிய தேவையில்லை என பொது பயன்பாடுகள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

உத்தேச மின்கட்டணதிருத்தங்களுக்கு அமைவாக, தற்போது 0 முதல் 30 அலகுகளுக்காக 08 ரூபாவாக இருந்த கட்டணம் 30 ரூபாவாகவும், 120 ரூபாவாக இருந்த நிலையான கட்டணம் 400 ரூபாவாகவும் அதிகரிக்கப்படவுள்ளது.

04

# இலங்கை பணியாளர்களை துபாய்க்கு அனுப்பும் நடவடிக்கை மீள ஆரம்பம்

தொழில்வாய்ப்புக்காக இலங்கை பணியாளர்களை துபாய்க்கு அனுப்பும் நடவடிக்கை எதிர்வரும் 5ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

எமிரேட்ஸில் உள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்கள் சங்கம் இதனைத் தெரிவித்துள்ளது. சுற்றுலா விசா மூலம் இலங்கைத் தொழிலாளர்கள் பணிக்கு செல்வதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை அடுத்து, துபாய்க்கு தொழிலாளர்களை அனுப்பும் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தன.




# நாடளாவிய ரீதியில் விசேட பஸ் சேவைகள்

## போக்குவரத்து பிரச்சினைக்கு 1955 க்கு அழையுங்கள் !

புத்தாண்டை முன்னிட்டு கிராமங்களுக்கு செல்லும் மக்களுக்காகவும் மேலும் கிராமங்களுக்குச் சென்று மீளவும் கொழும்பு திரும்பும் மக்களுக்காகவும் நாடளாவிய ரீதியில் மேலதிக பஸ்களை சேவையில் ஈடுபடுத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி நிலன் மிராண்டா தெரிவித்துள்ளார்.

அதன்படி, புத்தாண்டுக்காக ஊர்களுக்குச் சென்ற மக்கள் மீண்டும் கொழும்புக்கு வருவதற்கு பஸ் சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

பயணிகளின் தேவைகளை எவ்வித அசௌகரியமும் இன்றி நிறைவேற்றும் வகையில் கொழும்பில் இருந்து வெளி மாகாணங்களுக்கு பஸ் சேவை அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் பயணிகள் 1955 என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பதன் மூலம் பயணிகளின் போக்குவரத்து பிரச்சினைகள் குறித்து ஆணைக்குழுவிற்கு அறிவிக்க முடியும் எனவும் இதன் மூலம் பயணிகள் தேவையான தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, புத்தாண்டை முன்னிட்டு இலங்கை போக்குவரத்து சபை விசேட பஸ் சேவையையும் ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அதன் பிரதி பொது முகாமையாளர் பண்டுக ஸ்வர்ண ஹன்ச, கொழும்பு பிரதான பஸ் நிலையத்தில் இருந்து நேற்று முதல் 03 ஆம் திகதி வரை இந்த விசேட பஸ் சேவை இடம்பெறவுள்ளது.

அதன்படி, கிராமங்களுக்குச் சென்று கொழும்பு திரும்பும் மக்களுக்காக நாடளாவிய ரீதியில் மேலதிக பஸ்களை சேவையில் ஈடுபடுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.




## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 231.31 | 242.45 |
| கனடியன் டொலர் | 265.08 | 277.22 |
| யூரோ | 358.78 | 373.86 |
| ஜப்பான் யென் | 2.4417 | 2.5454 |
| சிங்கப்பூர் டொலர் | 255.60 | 266.39 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 412.93 | 429.30 |
| சுவிஸ் பிராங்க் | 360.91 | 378.36 |
| அமெரிக்க டொலர் | 360.88 | 371.68 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 964.12 | கட்டார் ரியால் | 99.42 |
| குவைத் டினார் | 1,174.43 | சவூதி ரியால் | 96.73 |
| ஓமான் ரியால் | 944.10 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.96 |

## பொலிஸ் OIC வீட்டுக்குள்...

புகுந்த ஆயுதம் தாங்கிய கொள்ளையர்கள், அவரது மனைவியின் கைகளைக் கட்டி, இரண்டு கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் தங்க நகைகளை கொள்ளையிட்டுச் தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் அலுபோமுல்ல, குடா அருக்கொட மற்றும் அநுராதபுரம் பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறை குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் அதிகாரிகளினால் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## கறுப்புச் சந்தை வர்த்தகத்தை...

விலைகளை உயர்த்தி வாடிக்கையாளர்களை நெருக்கடிக்கு உள்ளாக்கி வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். முட்டை, கோழி இறைச்சி, அரிசி, பால் மா, இனிப்பு பண்டங்கள் உள்ளிட்ட பல பொருட்களின் விலைகள் இவ்வாறு உயர்த்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

நியாயமின்றி பொருட்களின் விலைகளை உயர்த்தும் வர்த்தகர்களை தண்டிக்கும் சட்டங்கள் விரைவில் அறிமுகம் செய்யப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 2022 ஆம் ஆண்டில்...

மிகவும் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களின் தேவைகளை நிவர்த்தி செய்கிறது என்று அவர் ட்வீட் செய்துள்ளார்.இலங்கையில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறையினருக்கான கடன்கள், பயிற்சிகள் மற்றும் உதவிகளை அமெரிக்கா வழங்கியுள்ளது.நெருக்கடியான காலங்களில் அவர்கள் அதிக சுமையை எதிர்கொள்வதன் காரணமாகவே அந்த உதவி வழங்கப்பட்டது என்று அவர் ட்வீட் செய்துள்ளார்.

## நிவாரணத் திட்டம்...

எவ்வாறாயினும், பொருளாதார நெருக்கடியின் முக்கிய சிக்கலைத் தீர்த்த பிறகு, இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

## தெற்கு அதிவேக ...

அனுமதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பத்தேகம மற்றும் பின்னதுவ இடையே 88 ஆவது கிலோ மீற்றருக்கு அருகில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. யாத்திரிகர் குழுவொன்றை ஏற்றிச் சென்ற பஸ்ஸொன்றே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

குறித்த பஸ் வீதியை விட்டு விலகி சுமார் 100 மீற்றர் தூரம் பயணித்து அருகில் இருந்த தடுப்பு சுவரில் மோதி விபத்துக்குள்ளானதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாரதிக்கு ஏற்பட்ட நித்திரைக் கலக்கமே விபத்துக்கு காரணமாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

## முட்டை விலை குறைக்காவிடின்...

செய்யப்படுவதாக அரசாங்கம் அறிவித்துள்ள போதிலும் 70 ரூபாவுக்கே முட்டையை கொள்வனவு செய்து வருகின்றோம்.

நாட்டில் முட்டைக்கான தட்டுப்பாடு பாரியளவில் உள்ளது. எனவே நாட்டில் முட்டைக்கான தட்டுப்பாடு நீங்கும் வரையில் இந்தியா அல்லது பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் இருந்து முட்டையினை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இல்லையெனில் பாண் தவிர்ந்த ஏனைய அனைத்து பேக்கரி உற்பத்திகளினதும் விலைகளை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அகில இலங்கை பேக்கரி உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் என்.கே ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

## அமைச்சரின் தலையீட்டால்...

ஊழியர்களுக்கான தட்டுப்பாடு காரணமாக இந்த இரண்டு அத்தியாவசிய படகுகளின் நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டுள்ளமை குறித்து அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

## சுற்றுலா பயணிகள்...

செய்யப்படுகின்றன. இவ்வாறு சோதனை நடவடிக்கையின் போது நேற்று முன்தினமும் நேற்றும் 08 பேர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்நிலையில் குறித்த நபர்களிடமிருந்து ஏஸ், கேரளகஞ்சா, மதனமோதனம், மாவா, ஐஸ், போதை மாத்திரைகள் உள்ளிட்ட போதை பொருட்கள் மீட்கப்பட்டதாகவும் இவர்கள் ஹட்டன் நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## பிறப்பு சான்றிதழை...

இதேவேளை, இலங்கையில் பல திருத்தங்களுடன் பிறப்புச் சான்றிதழை வழங்க பதிவாளர் நாயகம் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதன்படி, ஒருவருக்கான தேசிய அடையாள அட்டை இலக்கம் பிறக்கும் போதே புதிய பிறப்புச் சான்றிதழில் பதியப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.மேலும், தற்போது காணப்படும் பெற்றோரின் திருமணம் தொடர்பான தகவல்களை பதிவு செய்யும் பகுதியும் நீக்கப்படவுள்ளதாக அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## மின் கட்டண திருத்த...

31 முதல் 60 அலகுகளுக்காக 10 ரூபாவாக இருந்த கட்டணத்தை 37 ரூபாவாகவும், 240 ரூபா நிலையான கட்டணத்தை 550 ரூபாவாகவும் அதிகரிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

91 முதல் 120 அலகு வரையான மற்றும் 121 முதல் 180 அலகு வரையான கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்பட மாட்டாதென்பதுடன், இதற்காக 960 ரூபாவாக இருந்த நிலையான கட்டணம் 1500 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது.

181 அலகிற்கு மேல் பயன்படுத்தும் வாடிக்கையாளர்களுக்கு 75 ரூபாவாக இருந்த அலகொன்றுக்கான கட்டணத்தில் மாற்றமில்லை என்பதுடன், 1500 ரூபா நிலையான கட்டணம் 2000 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது.மத வழிபாட்டுத்தலங்கள் உள்ளிட்ட முக்கிய இடங்களுக்கு 0 முதல் 30 அலகு வரையில், அலகொன்றுக்கான கட்டணம் 8 ரூபாவிலிருந்து 30 ரூபா வரை அதிகரிக்கப்படவுள்ளது.

## 07ஆம் திகதி மத்திய குழு...

போட்டியிடுவதில்லை என கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவித்துள்ளார்.

இதனை தொடர்ந்தே கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தற்போதுள்ள கட்சிகளைத் தவிர்த்து வேறு கட்சிகளுடன் தேர்தல் உடன்படிக்கைக்குச் செல்வதில்லை என முடிவு எதுவும் எடுக்கவில்லை.

தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவது,

இது தொடர்பில் மற்றக் கட்சிகளுடன் எவ்வாறு பேச வேண்டும் என்ற கருத்துப் பரிமாற்றங்கள் மாத்திரமே இடம்பெற்றன.

தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியாகத் தனித்துப் போட்டியிடாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகவே போட்டியிடும்.

யாழ்ப்பாணத்தில் விக்னேஸ்வரனின் வீட்டில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கட்சிகளின் சந்திப்பில் தேர்தல் உடன்பாடு தொடர்பில் பேசியுள்ளோம்.

கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளைத் (தமிழரசு, ரெலோ, புளொட்) தவிர வெளியில் உள்ள ஏனைய மூன்று கட்சிகளையும் (சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எப்., என். ஸ்ரீகாந்தா தலைமையிலான தமிழ்த் தேசியக் கட்சி) இணைத்துக்கொண்டு தேர்தலைச் சந்திப்பதா என்பது தொடர்பில் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில்தான் முடிவு எடுப்போம்.

இந்த விவகாரம் தொடர்பில் செல்வம் அடைக்கலநாதன் (ரெலோ), தர்மலிங்கம் சித்தார்த்தன் (புளொட்) ஆகியோர் என்னை வந்து சந்தித்துப் பேசியுள்ளார்கள்.

அதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் இந்த விவகாரம் தொடர்பில் என்னுடன் வந்து பேசியுள்ளார்.

தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில்தான் தேர்தல் உடன்பாடு தொடர்பில் முடிவெடுப்போம். இந்த விவகாரத்தை நாம் மிகவும் பக்குவமாகக் கையாள வேண்டும்.

அவசரப்பட்டு கருத்துக்களை எவரும் வெளியிடக்கூடாது என தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி மாளிகையிலிருந்து...

கையளிக்கப்பட்டுள்ளதுடன், அதிகாரிகள் குழுவொன்று அரண்மனைக்குச் சென்று தற்போது அடிப்படை பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக தெரியவருகின்றது.

தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் (இரசாயனப் பாதுகாப்பு) திருமதி கீதானி குருப்புஆராச்சி இது குறித்து தெரிவிக்கையில்;

ஓவிய ங்களின் சிதைவு நிலைமைகளை ஆராய்ந்து, பாதுகாப்பு தொடர்பான பூர்வாங்க சிபாரிசு அறிக்கையை தயாரிப்பதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

## இந்திய அரசின் நிவாரண...

செயலாளருக்கு கிராம மக்களால் அறிவிக்கப்பட்ட நிலையில் மாவட்ட செயலக கணக்காய்வு உத்தியோகத்தர்கள், அனர்த்த முகாமைத்துவ பிரிவு உத்தியோகத்தர்கள், உதவி பிரதேச செயலாளர் தலைமையில் குறித்த பகுதிக்கு சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதேவேளை குறித்த அரிசியின் நிலை குறித்தும் அது பாவனைக்கேற்றதா என்பதனை ஆராயவும் பொது சுகாதார பரிசோதகர்களும் அங்கு பிரசன்னமாகி பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

குறித்த அரிசியினை மேலதிக பரிசோதனைகளுக்காக கொண்டு செல்ல வேண்டியிருப்பதனால் அரிசி முழுவதனையும் பிரதேச செயலகத்திற்கு கொண்டு செல்ல வேண்டுமென பொதுமக்களிடம் பொது சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்ததுடன் குறித்த அரிசி தற்போது பயன்படுத்தும் நிலையில் இல்லை எனவும் தெரிவித்தனர்.

இதேவைளே அப்பகுதி மக்களுக்கு கருத்து தெரிவித்த உதவி பிரதேச செயலாளர், கிராம உத்தியோகத்தரின் பக்கம் இதில் பிழைகள் இருந்தாலும் கூட பொது அமைப்புகளுக்கு தெரியாமல் இருக்கவில்லை எனவும் தனியே அரச உத்தியோகத்தர்கள் வைத்து மட்டும் கிராமத்தை நடத்தவில்லை.

அதற்காகவே பொது அமைப்பக்களை தெரிவு செய்கின்றோம். பொது அமைப்புக்களுக்கும் அதற்கான பொறுப்புள்ளது. தங்கள் மக்களின் பிரச்சினையை உரிய தரப்புக்கு எடுத்து கூறியிருக்க வேண்டும். இதற்கான பொறுப்பை பொது அமைப்புக்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

புகையிரத நிலையத்திற்கு வந்த பொருட்களை வாகனங்களில் கிரமங்களுக்கு அனுப்பிய போது மழை காரணமாக அரிசிகள் சில நனைந்தமையால் இந்த இடத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததாக கிராம சேவகர் மற்றும் கிராம அபிவிருத்தி சங்கத்தினர் தற்போது தெரியப்படுத்தியுள்ளனர்.

பொது சுகாதார பரிசோதகர்களின் அறிக்கையின் பிரகாரம் குறித்த அரிசி உடனடியாக பயன்படுத்தக் கூடிய நிலையில் இல்லை எனவும் தெரிவித்தார்.

இதேவேளை இவ்விடயம் தொடர்பாக வவுனியா பிரதேச செயலாளர் நா. கமலதாசனிடம் கேட்டபோது, இவ்விடயம் தொடர்பாக முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது.

சம்பந்தப்பட்ட இடத்திற்கு உத்தியோகத்தர்கள் அனுப்பட்டு குறித்த விடயம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

## அரசாங்க ஊழியருக்கு...

ஊழியர்களுக்கு அதிகபட்சமாக 4,000 ரூபாவுக்குட்பட்ட தொகையை முற்பணமாக செலுத்துமாறு அனைத்து அமைச்சுக்களுக்கும் உள்ளூராட்சி மற்றும் திணைக்களங்களின் தலைவர்களுக்கும் பொது நிர்வாக அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

2015 டிசம்பர் 29 ஆம் திகதியிட்ட சுற்றறிக்கையின்படி, முற்பணத்தை ஏற்பாடு செய்யுமாறு பொது நிர்வாக அமைச்சு, நிறுவனங்களின் தலைவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

முற்பணம் வழங்கல் நேற்று முதல் எதிர்வரும் பெப்ரவரி 28 ஆம் திகதிக்குள் நிறைவு செய்ய வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

28.02.2023 ஆம் திகதிக்கு பின்னர் முற்பணம் செலுத்தக் கூடாதென்றும், 2023ஆம் ஆண்டுக்குள் இந்த முற்பணம் முழுமையாக அறவிடப்பட்ட வேண்டுமென்றும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது

## தீர்வுப் பேச்சு வெற்றிபெற...

முடிவுகளை எடுக்கக் கூடிய ஆண்டு. தமிழர் அபிலாஷைகளை வென்றெடுக்கும் வகையில் அரசியல் தீர்வு கிடைக்கவேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். அதற்கான பேச்சும் ஜனாதிபதி ரணிலுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நாம் விரும்பும் திருப்திகரமான தீர்வை இந்த அரசு முன்வைக்காவிடின் அந்தத் தீர்வை நாம் ஒருபோதும் ஏற்கமாட்டோம்.எனவே, தமிழர்களின் கோரிக்கைகளை கவனத்திற்கொண்டு அரசியல் தீர்வை விரைந்து இந்த அரசு காணவேண்டும்.

## கூட்டமைப்பின் முடிவை...

பந்தலுக்கு முன்பாக இடம்பெற்றது.

இதன்போது தமது பிள்ளைகளுக்கு நீதி தேவை என்பதோடு அவர்களை விடுவிக்க வேண்டும் எனவும் தெரிவித்த போராட்டத்தில் ஈடுபட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், இறையாண்மையுடனான தீர்வே பாதிக்கப்பட்டோருக்கு தேவை என தெரிவித்து, மாதிரி வாக்களிப்பையும் மேற்கொண்டிருந்தனர்.இது தொடர்பில் அவர்கள் மேலும் கூறுகையில்,

காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் பிள்ளைகளின் தாய்மார்கள் உட்பட பாதிக்கப்பட்ட தமிழ் மக்களால் முன்வைக்கப்பட்ட தீர்வை மட்டும் தான் தமிழர்கள் ஏற்றுக்கொள்வார்கள். தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முன்வைக்கும் தீர்வை எந்தத் தமிழரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் பிள்ளைகளின் தாய்மார்கள் உட்பட பாதிக்கப்பட்ட தமிழ் மக்களால் முன்வைக்கப்பட்ட தீர்வை மட்டும் தான் தமிழர்கள் ஏற்றுக்கொள்வார்கள். அரசியல் தீர்வை எவ்வாறு காண்பது?

தெற்கு சூடான், எடிட்ரியா, கொசோவா, கிழக்கு திமோர் ஆகிய நாடுகளில் கடந்த காலங்களில் நடந்த ஐ.நா.வின் கண்காணிப்பு வாக்கெடுப்பு ஒன்றே சிறந்த வழி.

நோர்வே தூதர் எரிக் சொல்ஹெய்ம், ஒரு மத்தியஸ்த பாத்திரத்தை வகிக்க விரும்புவதை இப்போது நாம் காண்கிறோம்.

தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் மத்தியஸ்தராக மீண்டும் வருவதற்கு இரகசியமாக செயற்பட்டு வருகின்றார். நாங்கள் அதை எதிர்க்கவில்லை. ஆனால், மேற்கு தேச அரசியல் கட்டமைப்பை மேசைக்கு கொண்டு வர விரும்புகிறோம்.

ஐ.நா. கண்காணிக்கும் வாக்கெடுப்பை நடத்துவதற்கு எங்களிடம் 3 சாத்தியமான அரசியல் தீர்வுகள் உள்ளன. தமிழர் இறையாண்மை, மேற்கத்திய பாணி ஜனநாயகம், ரணில் சம்பந்தன் ஒப்பந்தத்தில் இருந்து தீர்வு... இதைத்தான் எங்கள் பதாகையில் எழுதியுள்ளோம்.

முழு உலகமும், குறிப்பாக, இலங்கை கண்காணிப்பு குழுக்கள் மற்றும் அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நாடுகள் பெரும்பங்கை ஐ.நா. கண்காணிக்கும் வாக்கெடுப்பினை நடத்துவதில் பங்கு வகிக்கும் என நம்புகிறோம்.

புலம்பெயர் தமிழ் மக்கள், எமது தமிழ் இறையாண்மை மிக்க தேசத்தில் முதலீடு செய்து, அபிவிருத்தி செய்ய ஆவலுடன் காத்திருக்கின்றமையால், அரசியல் தீர்வு விடயத்தில் எமது நேரத்தை வீணடிக்க நாம் விரும்பவில்லை என்றனர்.

## பாடசாலைகள் இன்று ...

அமைச்சு தெரிவித்துள்ளது.

நத்தார் பண்டிகையை முன்னிட்டு கடந்த டிசம்பர் 23ஆம் திகதி முதல் நேற்று வரை சகல பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய இன்று திங்கட்கிழமை மூன்றாம் தவணைக்கான இரண்டாம் கட்ட கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகவுள்ளன.

அதனைத் தொடர்ந்து, கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சை நிமித்தம் எதிர்வரும் ஜனவரி 21ஆம் திகதி முதல் பெப்ரவரி 19ஆம் திகதி வரை மீண்டும் விடுமுறை வழங்கப்படவுள்ளது.

உயர்தர பரீட்சைகள் நிறைவடைந்தன் பின்னர், பெப்ரவரி 20ஆம் திகதி மூன்றாம் தவணையின் மூன்றாம் கட்ட கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகி, மார்ச் 24ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளன.

2022ஆம் ஆண்டுக்கான இறுதித் தவணை கல்வி நடவடிக்கைகள் மார்ச் 24ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் 2023ஆம் ஆண்டுக்கான முதலாம் தவணை ஆரம்பமாகும் தினம் குறித்து, பின்னர் அறிவிக்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

## அமரர் சந்திரசேகரன்...

தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்து தெரிவிக்கையில், மலையக மக்கள் முன்னணியின் உண்மையான விசுவாசிகளே இங்கு இருக்கின்றார்கள். அவருடைய இறுதி சடங்கின் போது அவருடைய கொள்கையை கட்டிக் காப்போம் என சத்தியம் செய்தவர்கள் கொள்கையை காட்டிக் கொடுத்து மலையக மக்கள் முன்னணிக்கு எதிராக செயற்படுகின்றார்கள்.

இது தான் அமரர். பெ.சந்திரசேகரனுக்கு செய்யும் நன்றிக் கடனா என அவர் கேள்வி எழுப்பினார்.

மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபக தலைவரும், முன்னாள் அமைச்சருமான அமரர் பெ.சந்திரசேகரனின் 13ஆவது சிரார்த்த தினம் நேற்று (01) ஹட்டனில் மலையக மக்கள் முன்னணியின் தலைமை காரியாலயத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

மலையக மக்கள் முன்னணி மற்றும் மலையக தொழிலாளர் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே. இராதாகிருஸ்ணன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முன்னணியின் செயலாளர் நாயகம் பேராசிரியர் விஜேசந்திரன், தேசிய அமைப்பாளரும், முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான ஆர்.இராஜாராம், நிதி செயலாளர் புஷ்பா விஷ்வநாதன், பிரதி தலைவர் ஏ.லோறன்ஸ், மலையக தொழிலாளர் முன்னணியின் பொது செயலாளர் கே.சுப்பிரமணியம், மாவட்ட அமைப்பாளர்கள், தோட்ட கமிட்டி தலைவர்கள் உள்ளிட்ட ஆதரவாளர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது மேடையில் வைக்கப்பட்டிருந்த அமரர். சந்திரசேகரனின் உருவப்படத்திற்கு மலர் அஞ்சலியை முன்னணியின் தலைவரும், எம்.பியுமான வே.இராதாகிருஷ்ணன் செலுத்தினார்.

இதனையடுத்து முன்னணியின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்ட பொது மக்களும் நினைவுச்சுடர்களை ஏற்றியமையும் குறிப்பிடத்தக்கது.

## 'கஞ்சிபான இம்ரான்'...

மாநிலம் முழுவதும் உள்ள சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளை உளவுத்துறை எச்சரித்துள்ளதாகவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.கொலை, கொலை அச்சுறுத்தல் விடுத்தமை உள்ளிட்ட பல்வேறு குற்றங்களுக்காக தேடப்பட்டு வந்த இம்ரான், கடந்த 2019ம் ஆண்டு டுபாயில் கைது செய்யப்பட்டு, நாடு கடத்தப்பட்டு, தலா 5 மில்லியன் ரூபாய் மதிப்பிலான இரண்டு சரீரப் பிணைகளில் கடந்த 20ம் திகதி நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டார்.

பிணையில் வெளிவந்த இம்ரான், இந்தியாவுக்குள் நுழையத் திட்டமிட்டுள்ளதாக உளவு அமைப்புகள் மற்றும் நம்பகமான ஆதாரங்களில் இருந்து தமிழக உளவுத்துறைக்கு தகவல் கிடைத்துள்ளதாக த ஹிந்து தெரிவித்துள்ளது.

கஞ்சிபான இம்ரான் இந்தியாவுக்குத் தப்பிச் சென்றது குறித்து இலங்கை இன்னும் குறிப்பிட்ட பதிலை அளிக்கவில்லை என்றும், இந்திய புலனாய்வு அமைப்புகள் கஞ்சிபான இம்ரான் தங்கள் நாட்டுக்குள் நுழைந்தமை குறித்த உண்மைகளை நம்பகமான ஆதாரங்கள் மூலம் உறுதி செய்துள்ளதாகவும் 'தி இந்து' சுட்டிக்காட்டுகிறது.

## 11,000 விண்ணப்பங்களுள் ...

ரணில் விக்கிரமசிங்கவும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவும் ஜனாதிபதி நிதியத்தின் புதிய செயலாளர் டபிள்யூ.ஏ. சரத்குமார வுக்கு வழங்கிய பணிப்புரைக்கமைய அதற்கான பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

அதற்கமைய இதுவரை 10,360 விண்ணப்பங்கள் தொடர்பான பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. எனினும், வருட இறுதியில் கிடைக்கப்பெற்ற மற்றும் பல்வேறு காரணங்களால் பணிகளை பூர்த்திச் செய்ய முடியாமல் போன 642 விண்ணப்பங்களுக்கு அவசியமான நிதியை திரட்டும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் எதிர்வரும் சில வாரங்களில் அப்பணிகளைப் பூர்த்திச் செய்ய முடியுமென்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

ஆதரவற்ற நோயாளர்களுக்கு மருத்துவ உதவிகள் வழங்குவதை துரிதப்படுத்துமாறும் குவிந்துள்ள விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை வழங்குமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்திருப்பதாக சுட்டிக்காட்டிய அவர், 2023 ஜனவரி மாதம் முதல் அதற்கான பணிகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுத்திருப்பதாக கூறினார்.

அதற்கமைய, மருத்துவ உதவிகளுக்கான விண்ணப்பங்களுக்கு மிக குறுகிய காலத்துக்குள் கொடுப்பனவுகளை வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தொலைவிலுள்ள நோயாளிகள் மருத்துவ உதவித் தொகையைப் பெறுவதற்காக நகரங்களுக்கு வருவதை குறைப்பதற்காக ஜனாதிபதி நிதியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள மருத்துவமனைகளுக்கு மேலதிகமாக, புதிய மருத்துவமனைகளைப் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

சத்திரசிகிச்சை மற்றும் ஏனைய சிகிச்சைகளுக்காக தற்போது வழங்கப்பட்டு வரும் நிதியுதவியை மேலும் அதிகரிப்பதற்கு தேவையான பரிந்துரைகளை பெற்றுக்கொள்வதற்கென நியமிக்கப்பட்டுள்ள விசேட வைத்திய நிபுணர்கள் அடங்கிய குழுவின் பரிந்துரைக்கமைய மருத்துவ உதவித் தொகையை உடனடியாக அதிகரிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் பணிப்புரை விடுத்துள்ளார். இதற்கமைய, 2023 ஆம் ஆண்டின் முதல் சில மாதங்களில், மருத்துவ உதவிக்காக வழங்கப்படும் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்படும்.

அத்துடன் உதவி வழங்குவதற்கான மருத்துவப் பட்டியலை புதுப்பிக்கும் வகையில் தற்போது உதவி வழங்கப்படும் நோய்களுக்கு மேலதிகமாக மேலும் சில நோய்களை பரிந்துரைக்குமாறும் மேற்படி குழுவுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில் ஜனாதிபதி நிதியச் சட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட விதிமுறைகளுக்கமைய அறக்கட்டளை மற்றும் மத நடவடிக்கைகளுக்காக 20 மில்லியன் ரூபாவும் ஜனாதிபதி நிதியத்திற்கு கிடைக்கும் நிதியிலிருந்து 1300 மில்லியன் ரூபா மஹபொல உயர்கல்வி புலமைப் பரிசில்களுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

மேலும், 2023 ஆம் ஆண்டு ஜனவரி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 2024 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பொருளாதார நெருக்கடிக்குள்ளான 3000 மாணவர்களுக்கு மாதாந்தம் 5,000 ரூபா வீதம் இரண்டு வருடங்களுக்கு வழங்குவதற்கு ஜனாதிபதியின் பணிப்புரையின்பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு தகுதியுடைய மாணவர்களை தேர்ந்தெடுக்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி இன்றுடன் (30) நிறைவடைகிறது.

மருத்துவ உதவி பெறுவதற்காக ஜனாதிபதி நிதியத்திற்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் பொதுமக்கள் எதிர்கொள்ளும் போக்குவரத்து மற்றும் ஏனைய பொருளாதாரச் சிரமங்களைக் கருத்தில் கொண்டு, விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டதிலிருந்து பணம் செலுத்தப்படும் வரை ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்குமாக 06 தடவைகளுக்கு குறுந்தகவல்கள் (SMS) அனுப்பப்படும். இந்நடவடிக்கைகளை 2023 ஆம் ஆண்டு முதல் மேலும் சிறந்த முறையில் முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## சமூகங்களிடையே பிளவை ...

சபை உறுப்பினருமான பூ. பிரசாந்தன் தெரிவித்தார்.

தேசிய எல்லை நிர்ணயம் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் தேசிய எல்லைகள் நிர்ணய ஆணைக் குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவின் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தென்பகுதி மக்களுடன் கிழக்கு மாகாணத்தினையும் ஒப்பிட்டுப் பார்க்க முடியாது. கிழக்கு மாகாணம் யுத்தத்தினால் மிக மோசமாக பாதிக்கப்பட்டு பல்வேறு எச்ச குன்றுகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மாகாணமாகும்.

அத்தோடு வாகரை, கிரான் மண்முனை மேற்கு, மண்முனை தென்மேற்கு, ஏறாவூர் பற்று, போரதீவுப் பற்று ஆகிய பிரதேசங்கள் அதிக நிலப்பரப்புகளைக் கொண்ட பிரதேசங்களாகவும், மக்கள் தொகை ஐதாக வாழ்கின்ற பிரதேசமாகவும் உள்ளன.

இப்பிரதேசத்தில் சனத்தொகையினை மையமாக வைத்து எல்லைகளை நிர்ணயிக்கின்ற போது அங்கு தெரிவு செய்யப்படுகின்ற மக்கள் பிரதி ஊடாக பூரணத்துவமான உள்ளூராட்சி அதிகாரங்களை மக்கள் நுகர முடியாத சூழல் ஏற்படுகின்றது.

இங்கு வட்டாரங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும்.

மண்முனைப் பற்று, ஏறாவூர் பற்று, கோறளைப் பற்று மண்முனை வடக்கு பிரதேசங்களில் தமிழர்களும் முஸ்லிம்களும் எல்லைப்புறங்களில் வாழ்வதன் காரணமாக அங்கு அடிக்கடி எல்லைப் பிரச்சினைகளும் ஏற்படுகின்றன.

ஆகவே இங்கு இன வீதாசாரம், நில அமைப்பு என்பவற்றைக் கருத்தில் கொண்டே வட்டார எல்லைகள் அதிகரிக்கப்பட்டு வடிவமைக்கப்பட வேண்டும்.

# வவுனியாவில் மோட்டர் சைக்கிள் தீயில் எரிந்து நாசம்:

## திருத்தும் நிலையம் மீது ஏற்பட்ட தீப்பரம்பல் கட்டுக்குள்

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியில் திடீரென தீப்பற்றிய மோட்டர் சைக்கிள் ஒன்று முழுமையாக எரிந்து நாசமாகியுள்ளதுடன், மோட்டர் சைக்கிள் திருத்தும் நிலையம் மீது ஏற்பட்ட தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

புதுவருட தினமான நேற்று (01.01) இடம்பெற்ற இவ் அனர்த்தம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பிளசர் ரக மோட்டர் சைக்கிள் ஒன்று இயங்கவில்லை எனத் தெரிவித்து வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியில் உள்ள மோட்டர் சைக்கிள் திருத்துமிடம் ஒன்றின் முன்பாக குறித்த மோட்டர் சைக்கிளை நிறுத்தி அதனை இயங்க செய்த போது அம் மோட்டர் சைக்கிள் திடீரென தீ பிடித்து எரிந்துள்ளது.

இதன்போது தீ பிடித்த மோட்டர் சைக்கிளில் இருந்து மோட்டர் சைக்கிள் திருத்தும் நிலையத்திற்கும் தீ பரவிய நிலையில் அங்கு நின்றவர்கள் அதனை கட்டுப்படுத்தியதுடன், தீப்பிடித்த மோட்டர் சைக்கிளை வீதியில் இழுத்துப் போட்டனர். அத்துடன் அங்கு நின்றவர்கள், வீதியால் சென்றவர்கள் இணைந்து நீர் ஊற்றியும், மண் போட்டும் மோட்டர் சைக்கிள் மீதான தீயை கட்டுப்படுத்த முயன்ற போதும் அது பயனளிக்கவில்லை.

# மன்னாரில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் ஆயர் தலைமையில் புத்தாண்டு நள்ளிரவு திருப்பலி

## பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்கேற்பு

**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார் மறை மாவட்டத்தில் புத்தாண்டு நள்ளிரவு திருவிழா திருப்பலி மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் சனிக்கிழமை (31) இரவு 11.45 மணிக்கு கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. மாவட்டத்தில் உள்ள பல ஆலயங்களிலும் நள்ளிரவு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. பல ஆயிரக்கணக்கான மக்கள் புத்தாண்டு நள்ளிரவு திருப்பலியில் கலந்து கொண்டிருந்தனர். புத்தாண்டு நள்ளிரவு திருப்பலியின் போது மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தனது உரையில் தெரிவிக்கையில், சென்ற ஆண்டிலே பல்வேறு பிரச்சினைகளால் நாங்கள் துன்பப்பட்டோம். இனப் பிரச்சினைகள், மொழிப் பிரச்சினைகள் என மக்களை பல விதத்திலும் தாக்கிக் கொண்டிருந்தது. அரசியலிலும், பொருளாதாரத்திலும் பெரிய நெருக்கடிகள் இருந்து வந்தது. புத்தாண்டிலே உங்களுக்கு விடுதலை கிடைத்து நீங்கள் சுபிட்சமாக வாழவும் இறை ஆசீர் நிரம்ப



கிடைக்கப் பெற்று மகிழ்ச்சியாக வாழவும் இறைவன் உங்களுக்கு அருள வேண்டும்.

இந்த ஆண்டிலேயே நீங்கள் விடுதலை பெற்ற மக்களாக ஒரு சுதந்திரத்தை கொண்டாடக் கூடும் மக்களாக வாழ இறைவன் உங்களுக்கு அருள வேண்டும்.

# யாழில் முன்னெடுக்க வேண்டிய விடயங்கள் தொடர்பாக கூடிய கவனம்



யாழ் மாவட்டப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுவர்ணா போதோட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை (31.12.2022) சந்தித்துக் கலந்துரையாடினார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில், அண்மைக்காலமாக அதிகரித்துள்ள மாட்டுத் திருட்டு, போதைப் பொருள் பாவனை, வாள் வெட்டு உட்பட்ட சமூக விரோதச் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தாத வகையில், உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருக்கின்ற காணிகளை விடுவித்தல் மற்றும் பாடசாலை மைதானம் போன்ற பொது இடங்களை புனரமைப்பதற்கு இராணுவத்தினரின் ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் இச்சந்திப்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் பிரஸ்தாபிக்கப்பட்டது.





கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் கோரிக்கைக்கு அமைய ISRC தனியார் நிறுவனத்தின் அனுசரணையில் கூலாங்குளம், தம்பட்ட முசலி, சிலாவத்துறை ஆகிய பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தலா 18 இலட்சம் ரூபாய் பெறுமதியான 16 வீடுகளை கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் உரிய பயனாளிகளுக்கு அண்மையில் கையளித்து வைத்தார். இதன்போது ISRC நிறுவனத்தின் பணிப்பாளர் ஜனாப் மொஹமட் சயாப், ISRC நிறுவனத்தின் ஸ்தாபகரும் முஸ்லிம் ஹேன்ட்ஸ் (Muslims hands) நிறுவனத்தின் பணிப்பாளருமான ஜனாப் மிஹ்லார் உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர்கள் ஆதரவாளர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி

# விநாயகபுரத்தில் 26 வயது இளைஞன் கொலை

**கிளிநொச்சி குறூப் நிருபர்**

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விநாயகபுரம் கிராமத்தில் 26 வயது இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று (01) அதிகாலை 4 மணியளவில் வீடு புகுந்த நபர்கள் விநாயகபுரத்தைச் சேர்ந்த தவக்குமார் சுரேஸ் (வயது 26) என்ற இளைஞனை கத்தியால் குத்தியும், பலமாக தாக்கியும் உள்ளனர்.

இவர்கள் படுகாயமடைந்த நிலையில் அயலவர்கள் மற்றும் உறவினர்களால் மீட்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோதும் அவர் வழியிலேயே இறந்துவிட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொலை தொடர்பாக மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சைவ மகா சபையின் திருவெம்பாவை பாதயாத்திரை

**கோப்பாய் குறூப் நிருபர்**

அகில இலங்கை சைவமகா சபையினரால் வருடாவருடம் திருவெம்பாவை விரதத்தை முன்னிட்டு முன்னெடுக்கப்படும் பாதயாத்திரை (01) ஞாயிற்றுக் கிழமை மாதகல் சம்பில்துறை சம்பு நாதஈஸ்வரத்திலிருந்து காரை நகர் ஈழத்து சிதம்பரத்தை நோக்கி 10வது வருடமாக இடம்பெற்றது.

நந்திக்கொடியுடன் அடியவர்கள் சிவனுடைய நாமங்களை உச்சரித்தும் பாராயணம் செய்தும், ஆன்மீக கீர்த்தனைகளை பாடிய வண்ணம் பாதயாத்திரையில் ஈடுபட்டனர்.

சாந்தை சிதம்பரேஸ்வரர் ஆலயம், சாந்தை வீரபத்திரர் ஆலயம், பனிப்புலம் முத்து மாரியம்மன் ஆலயம், சுழிபுரம் பறாளாய் பிள்ளையார் முருகன் ஆலயங்கள், சுழிபுரம் மத்தி கறுத்தனாத்தோட்டம் துர்க்கையம்மன் ஆலயம், சுழிபுரம் மேற்கு ஹரிகர புத்திர ஐயனார் ஆலயம், சுழிபுரம் மேற்கு கதிர்வேலாயுத சுவாமிகள் ஆலயம், சுழிபுரம் பெரியபுலோ வைரவர் ஆலயம், மூளாய் வதிரன்புலோ பிள்ளையார் முருகன் ஆலயங்கள், மூளாய் இராவணேசுவரர் ஆலயத்தினை தரிசித்து பொன்னாலை நாராயணன் தாகசாந்தி நிலையத்தினரின் அன்னதானத்தை தொடர்ந்து வலந்தலை மடத்துக்கரை முத்துமாரியம்மன் ஆலயம் முதலான திருத்தலங்களை தரிசித்தவாறு இந்த பாதயாத்திரை காரைநகர் ஈழத்து சிதம்பரத்தை சென்றடைந்து நிறைவுபெற்றது. யாத்திரையில் வடக்கு, கிழக்கு, மலையகம் என நாடாளாவிய ரீதியில் அதிகளவான சிவனடியார்கள் கலந்துகொண்டர்.



# கட்டைக்காடு கப்பலேந்தி மாதா ஆலய திருப்பலி

**கரவெட்டி தினகரன் நிருபர்**

கட்டைக்காடு கப்பலேந்தி மாதா ஆலய வருடத் திருப்பலி நேற்று அருட்தந்தை அல்ரீன் அடிகளார் தலைமையில் ஆரம்பமானது.

முழுமையாக கத்தோலிக்க கிராமமாக திகழும் கட்டைக்காட்டு மக்கள் நூற்றுக்கணக்கானோர் குறித்த திருப்பலியில் பங்கெடுத்தனர். 2022 ஆம் ஆண்டிற்கு மன நிறைவுடன் நன்றி கூறி வழிபட்டு பிறந்திருக்கும் புதிய ஆண்டை பெருமகிழ்வுடன் வரவேற்று வழிபட்டுச் சென்றதையும் காணக்கூடியதாக இருந்தது.

திருப்பலி நிறைவு பெற்றதும் அருட்தந்தையால் கடல் ஆசிர்வதிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.









லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தமிழ் வெளியீடுகளான தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் ஊடக அனுசரணையில் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன தென்றல் எப்.எம். மின் அறிவிப்பாளரும், இலங்கையின் முன்னணி பாடகருமான முஹம்மட் இர்பானின் ஏற்பாட்டில் பொன்மாலை பொழுது இசை நிகழ்ச்சி இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன ஆனந்த சமரகோன் கலையகத்தில் நடைபெற்றபோது பிடிக்கப்பட்ட படங்கள்.






தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் மார்கழி மாதம் 18ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஜுமாதல் ஆகிராஹ் பிறை 08

## குறள் தரும் சிந்தனை



பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்றல் இனிது

*நல்ல பண்பு இல்லாதவர்கள் அன்பு வெள்ளத்தில் நம்மை மூழ்கடிப்பதுபோல் தோன்றினாலும் அவர்களது நட்பை, மேலும் வளர்த்துக் கொள்ளாமல் குறைத்துக் கொள்வதே நல்லது.*

# முக்கியத்துவம் மிகுந்த ஆண்டில் காலடி வைத்திருக்கும் இலங்கை

உலகம் புதுவருடத்தில் நேற்று பிரவேசித்தது. உலகோடு சேர்த்து இலங்கையும் புதிய ஆண்டில் காலடி எடுத்து வைத்திருக்கிறது. இந்நாடு ஒரு வித்தியாசமான சூழலுக்கு முகம் கொடுத்த பின்னர் புதுவருடத்தில் பிரவேசித்திருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

அதாவது இந்நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் முன்னொருபோதும் முகம்கொடுத்திராத பொருளாதார நெருக்கடிக்கு கடந்த வருடம் முகம்கொடுத்தது. அந்நிய செலாவணிப் பற்றாக்குறையினால் தோற்றம் பெற்ற இந்நெருக்கடியினால் மக்கள் பல விதமான அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்தனர். குறிப்பாக அந்நிய செலாவணி பயன்படுத்தப்படுகின்ற பொருட்களை பெற்றுக் கொள்வதில் மக்கள் பெரிதும் நெருக்கடிகளை எதிர்கொண்டனர்.

எரிபொருள், எரிவாயுவைப் பெற்றுக் கொள்வதற்காக நாட்கணக்கில் நீண்ட வரிசைகளில் காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருந்தது. இதன் விளைவாக வீதிகளில் வாகனங்களின் போக்குவரத்து பெரிதும் ஸ்தம்பிதமடைந்திருந்தது. சிற்றுண்டிச்சாலைகளையும் கூட நடத்திச் செல்ல முடியாத அசௌகரியம் ஏற்பட்டிருந்தது.

அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட அனைத்து பொருட்களதும் விலைகளும் அதிகரித்தன. அந்நிய செலாவணி பயன்படுத்தப்படும் பெரும்பாலான பொருட்களின் இறக்குமதியும் கட்டுப்படுத்தப்பட்டது. இவ்வாறான சூழலில் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வையும் நிவாரணத்தையும் கோரி மக்கள் ஆர்ப்பாட்டங்களையும் ஊர்வலங்களையும் முன்னெடுக்கலாயினர். இதன் விளைவாக கடந்த வருட முற்பகுதியில் முதலில் அமைச்சரவையில் மாற்றம் செய்யப்பட்டது. ஆனால் அம்மாற்றம் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்கவில்லை.

அதனால் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் சொற்ப காலத்தில் பதவி விலகும் நிலைக்கு தள்ளப்பட்டது. அதுவும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வைக் கொண்டு வரவில்லை. இந்நிலையில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நாட்டை விட்டு வெளியேறி இருந்தபடி ஜனாதிபதி பதவியை இராஜிநாமா செய்தார்.

பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் கொதிநிலைக்கு மத்தியில் எவரும் முன்வராத சூழலில் நாட்டைப் பொறுப்பெடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான வேலைத்திட்டங்களையும் நடவடிக்கைகளையும் விரிவான அடிப்படையில் முன்னெடுக்கலானார்.

அதன் பயனாக கடந்த வருடம் ஏப்ரல், மே, ஜுன், ஜுலை ஆகிய மாதங்களில் நிலவி வந்த தீவிர பொருளாதார நெருக்கடி கட்டம் கட்டமாகத் தணிவடையத் தொடங்கியது. அதன் பிரதிபலன்கள் மக்களைச் சென்றடையவும் ஆரம்பித்தன. குறிப்பாக எரிபொருள், எரிவாயுவை முன்பு போன்றல்லாது பெற்றுக் கொள்ளக்கூடிய நிலைமை ஏற்பட்டது. இப்பின்னணியில் வீதி வாகனப் போக்குவரத்து குறுகிய காலப்பகுதிக்குள் வழமை நிலைக்கு திரும்பும் நிலைமை உருவானது. அத்தோடு எரிபொருள் மற்றும் எரிவாயுக்கு பல தடவைகள் விலைக் குறைப்பு செய்யவும் வாய்ப்பு கிடைக்கப் பெற்றது. அதனை அடிப்படையாகக் கொண்டு அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட பல பொருட்களின் விலைகளையும் அவ்வப்போது குறைக்கப்படக்கூடிய வாய்ப்பும் நாட்டில் ஏற்பட்டுள்ளது.

இதன் விளைவாக பொருளாதார நெருக்கடிக்கு தீர்வும் நிவாரணமும் கோரிய ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் பெரிதும் குறைவடைந்து விட்டன. கடந்த காலங்களில் நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடிகளைக் கையாண்ட அனுபவங்களைப் பயன்படுத்தி இப்பொருளாதார நெருக்கடியையும் ஜனாதிபதி முகாமைத்துவம் செய்தன் பிரதிபலன்களை நாடு அனுபவிக்க ஆரம்பித்திருக்கிறது. ஜனாதிபதி தலைமையில் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெற்றுக் கொண்டிருக்கும் சூழலில்தான், நாடு புதிய வருடத்திற்குள் பிரவேசித்திருக்கின்றது.

இந்நிலையில் இப்புத்தாண்டின் நிமித்தம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், 'முன்னொரு போதும் இல்லாதவாறு நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சிக்கு மத்தியில் நம் அனைவர் மீதும் சுமத்தப்பட்டுள்ள பாரிய மற்றும் நம்மில் பெரும்பாலானோர் சந்தித்த பின்னடைவு ஆகியவற்றை நான் நன்கறிவேன். எனினும், நாம் ஏற்கனவே நெருக்கடியான நிலையைக் கடந்துவிட்டதாகவே கருதுகிறேன். 2023 புதிய ஆண்டு நாட்டின் பொருளாதாரத்தில் ஒரு புதிய திருப்புமுனையைக் குறிக்கும் ஒரு தீர்க்கமான ஆண்டாக இருக்கும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

உண்மையில் கடந்த வருடம் ஏப்ரல் முதல் ஜுலை வரையான காலப்பகுதியில் முகம் கொடுத்திருந்த பொருளாதார நெருக்கடியை நாடு கடந்து விட்டது என்பதில் ஐயமில்லை. இப்பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெற்றுவரும் இந்நாட்டுக்கு புதிய வருடம் முக்கியத்துவம் மிக்க தீர்க்கமான ஆண்டாகவே இருக்கும். அதனால் பொருளாதார ரீதியில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக அரசியல் பேதங்களுக்கு அப்பால் சகலரும் ஒன்றுபட்டு ஒத்துழைக்க வேண்டும். அப்போதுதான் வளமானதும் சுபீட்சமானதுமான தேசத்தைக் கட்டியெழுப்பக் கூடியதாக இருக்கும். அதுவே நாட்டு மக்களின் எதிர்பார்ப்பு ஆகும்.

editor.tkn@lakehouse.lk

# ஆரிஹாமம் தர்காவில் சிறப்பாக நடைபெற்ற உரூஸ்தின நிகழ்வுகளும் கந்தூரி வைபவமும்

குருநாகல் மாவட்டம் ஆரிஹாமம் தர்காவில், ஷேகுணா அவர்களின் பெயரால் அகில இலங்கை ஸூபிஸ ஆன்மீகப் பேரவையின் ஆயுட்காலத் தலைவர் கலாநிதி தேசமான்ய, தேசபந்து அல் ஹாபிழ், அல் ஆலிம், அப்துல்லாஹ் முஹ்ஸின் நூரி ஸூபி காதிரி தலைமையில் பேரவையின் செயலாளர், தேசமானிய அல் ஹாபிழ் தாரிக் முஹம்மது நூரி ஸூபி காதிரி அவர்களது முயற்சிகளுடனும், அகில இலங்கை மஜ்லிஸுல் உலமாவின் செயலாளர், அல் ஹாபிழ் அல் ஆலிம் ஸிராஜுதீன் நஜாஹி அவர்களது முழுமையான ஒத்துழைப்புடனும், நாட்டின் நாலா பக்கங்களிலும் உள்ள சுன்னத் வல் ஜமாஅத் சகோதரர்கள் அகில இலங்கை ஸூபிஸ ஆன்மீகப் பேரவையின் முஹிப்பீன்கள் மற்றும் ஊர் ஜமாஅத்தினர்கள் அபிமானிகள் ஆகியோரது ஒத்துழைப்புடன் அண்மையில் ஆரிஹாமம் தர்காவில் ஆரிபு நாயகத்தின் கந்தூரி நிகழ்வுகளும் சுன்னத் வல் ஜமாஅத்தைச் சேர்ந்த பிரபல மார்க்க மேதைகளின் பயான் சொற்பொழிவுகளும் இடம்பெற்றன.



முதல்நாள் ஆரம்ப நிகழ்வாக முத்துப்பேட்டை வாழும் முத்தொளிநாதர் ஹக்கீம் சேகுதாவூத் காமில் வலியுல்லாஹ் நாயகத்தின் மௌலூது மஜ்லிஸ் நடைபெற்றது. அடுத்ததாக சுன்னத்து வல் ஜமாத்தினரின் ஆன்மீகப் பேச்சாளர், அல் உஸ்தாத், அல் ஆலிம், ஸபா முஹம்மது நஜாஹி தமது ஆன்மீக உரையில், தர்ஹாக்கள் பற்றிய விமர்சனங்களுக்கு தெளிவான முறையில் பதில் அளித்தார்.

மேமன் சமூகத்தினரின் மார்க்க மேதையான அல்ஹாபிழ், அல் ஆலிம், இஹ்ஸான் இக்பால் காதிரி தமதுரையில், ஸியாரங்களை தரிசிப்பது பற்றியும் மௌலிது மஜ்லிஸ்களில் ஓதுவது பற்றியும் விளக்கமளித்தார்.

முதல் நாள் இறுதி நிகழ்வாக அகில இலங்கை மஜ்லிஸுல் உலமாவின் செயலாளரும் அகில இலங்கை ஸூபிஸ ஆன்மீகப் பேரவையின் ஆலோசகருமான அல்ஹாபிழ் அல் ஆலிம் ஸிராஜுதீன் நஜாஹி தலைமையில் நடைபெற்ற ரிபாய் றாத்திப் மஜ்லிஸ் வந்திருந்த அனைவரையும் கவர்ந்தது. இரவு அன்னதானமும் வழங்கப்பட்டது.

இரண்டாம் நாள் காலை 9 மணிக்கு ஸுபுஹான மௌலூது மஜ்லிஸுடன் ஆரம்பமானது.

மருதானை ஸாஹிரா கல்லூரி ஆசிரியர் தேசமான்ய பைஸல் காரி ஹிழ்ரி தனது உரையில் ஆரிஹாமம் தர்காவின் சிறப்புகளை பற்றி சிங்கள மொழியில் மிகத்தெளிவாக எடுத்துரைத்தார்.

விசேட அதிதியாக கலந்து கொண்ட பேராதனை பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் சுமேத வீரவர்தன தமது ரையில், இலங்கையில் குடியேறிய முஸ்லிம்கள், சிங்கள மன்னர்களுடன் விசுவாசமாகவும் மக்களுடன் இன ஐக்கியத்துடன் ஒற்றுமையாக வாழ்ந்து வந்ததை கூறினார்.

அதனைத் தொடர்ந்து நாவலப் பள்ளியின் பிரதான இமாம் அல் ஆலிம் பாஸில் நஜாஹி அவர்கள் உரையாற்றினார்.

பேராதனை பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் முபீஸால் அபூபக்கர் உரையாற்றும்போது, இஸ்லாமிய வாழ்வியல் தடயங்களை அழித்தொழிப்பதன் மூலமாக தலைமுறையினர் முகம் கொடுக்கப் போகும் சிக்கல்கள் பற்றி எடுத்துக் கூறினார்.

சட்டத்தரணி அஸ்ஸையது ஸாதாத் மர்ஸூம் மௌலானா உரையாற்றும் போது சிங்கள மன்னர்கள் காலத்தில் முஸ்லிம்களுக்கு கிடைக்கப்பெற்ற வரப் பிரசாதங்களை விபரித்தார்.

அகில இலங்கை மஜ்லிஸுல் உலமாவின் செயலாளர், அல் ஹாபிழ் அல் ஆலிம் ஸிராஜுதீன் நஜாஹி , சுன்னத் வல் ஜமாத் கொள்கையை பாதுகாத்தல் சம்பந்தமாக எடுத்துரைத்தார்.

இறுதியாக தேசபந்து அல்ஹாபிழ், அல் ஆலிம், அப்துல்லாஹ் முஹ்ஸின் நூரி ஸூபி காதிரி உரையாற்றுகையில், விழாவினை சிறப்பாக கொண்டாடுவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவர்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

கலாபூசணம்
மலாய்க் கவி டிவங்சோ...

# உள்ளூராட்சிசபைத் தேர்தல் முக்கியத்துவம் பெறுவது ஏன்?

நாட்டின் அரசியல் நிலைவரங்களை நோக்கும் போது தேர்தலொன்றுக்கு சந்தர்ப்பம் இருப்பதாகவே தெரிகின்றது. புதுவருடத்தில் (2023) ஏதாவதொரு தேர்தலை எதிர்கொண்டேயாக வேண்டும். இவ்வாறு எதிர்கொள்ள நேரும் தேர்தலில் எவ்வாறு நடந்து கொள்வது? இதுதான் கட்சிகளுக்குள்ள சிக்கல். பொருளாதாரம் அடியோடு வீழ்ந்துள் ள நிலையில்,வாக்களிக்கும் விருப்புகள் மக்களிடம் இருக்குமா?

இதனால்,விருப்புக்களை ஏற்படுத்தும் வியூகங்கள், பிரசாரங்களையே கட்சிகள் சிந்திக்கின்றன. ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தலில் வகுக்கும் வியூகங்கள் உள்ளூராட்சித் தேர்தலுக் கு உதவுமா? இல்லை ஊர்ப்பிரச்சினையை உசுப்பேற்றுவதா? உள்ளூராட்சித் தேர்தலுக்கான களச்சாத்தியங்கள் தென்படுவதால்,சுயேச்சைக் குழுக்க ள் கூட உஷாரடையும் சூழலிது.

சமூகம்,உரிமை, மற்றும் இருப்பு உள்ளிட்டவற்றுக்கு முக்கியத்துவமளிக்கும் தேர்தலில்லை உள்ளூராட்சி தேர்தல். பாரிய கூட்டணிகள் அமைத்து எதிரிகளை வீழ்த்துமளவுக்கு முக்கியமானதும் இல்லை. இந்தளவு இலட்சணமுள்ள இத்தேர்தலைத்தான் நடத்துமாறு எதிரணிகளும், இதற்கேற்ற சூழலில்லை என அரச அணிகளும் அடம்பிடிக்கின்றன.

உள்ளூராட்சித் தேர்தலை நடத்த தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உத்தரவிடுமாறு,எதிரணிகள் வழக்கும் தாக்கல் செய்துள்ளன. ஜனவரி 18 இல்தான், இந்த வழக்கு விசாரிக்கப்ப ட உள்ளது. இதனால்,எதை எதிர்வு கூறுவதெனத் தெரியாத குழப்பமே உள்ளது.




நிதியில்லை,நேரமில்லை மற்றும் பணவீக்கம் எனக் கூறப்படும் வியாக்கியானங்களுக்கு, ஏற்கனவே ஒதுக்கிய நிதி உள்ளதாக புஞ்சிஹேவா பதிலளித்திருக்கிறார். மார்ச் 10க்கு முன்னர் தேர்தல், 20க்குள் வெற்றியீட்டியோர் விபரம் என்றும் அறிவித்து விட்டார் புஞ்சிஹேவா.

மலையேறுவது போன்ற ஒரு பலப்பரீட்சைதான் இது. எல்லாத் தரப்புக்கும் இதுதான் நிலை. ஆனாலும், எதிரணி எதைப்பற்றியும் சிந்திப்பதாயில்லை. ஏறினாலே வெற்றிப்படிதான் எனக் குதிக்கிறது.

கட்சிகளின் உட்கட்டமைப்புக்களைப் பரீட்சிக்கும் தேர்தலாக இது இருக்கப் போவதுமில்லை. ஆட்சிக்கு ஆருடம் கூறப்போகும் தேர்தலாகவே நடக்கப் போகும் தேர்தலாக இருக்கும். முஸ்லிம் தலைமைகள் என்ன செய்யும்? பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மூன்று முஸ்லிம் தலைமைகள் உள்ளன. எதைச் சொல்லி முஸ்லிம்களை இத்தலைமைகள் ஒன்றுசேர்க்கும்?

வடக்கு,கிழக்கு மாகாண முஸ்லிம்களும் பட்டதெல்லாம் போதும்,தொட்டதையே தொடர்வோம் என்றெண்ணுகின்றனர். பெரும்பான்மைச் சமூகத்துடன் பொருந்திப்போக முயலுமளவுக்கு, தமிழ் சமூகத்துடன் புரிந்துபோகும் போக்குகள் முஸ்லிம்களிடம் குறைவுதான்.

வடக்கு,கிழக்கில் ஒரே மொழியைப் பேசும் இரண்டு சமூகங்களும் ஒரு தாய் பிள்ளைகள்தானா? அவ்வாறானால், தாய்,பிள்ளைச் சண்டைகள் தண்ணீரில் எழுத்து என்பார்களே! இதுவோ,கல்லறைச் சுவரில் எழுதிய கல்வெட்டுக்களாக உள்ளதே!

எதுவானாலும், உள்ளூராட்சி தேர்தல் நடைபெறுமா னால், இந்தப் பகைகளை மேலும் கூர்மையாக்கும் பிரசாரங்கள் தமிழ், முஸ்லிம் தரப்பு மேடைகளில் மேடையேறக் கூடாது. சிறுபான்மைச் சமூகங்களின் மோதல்கள் கூர்மையடைந்தால், அதிகாரங்களை, கையேந்திக் கேட்கும் நிலையே ஏற்படும்.

சுஐப் எம்.காசிம்...

# பாலேந்திராவின் அரங்கக் கட்டுரைகள்; கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நூல் அறிமுகம்

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் வினோதன் மண்டபத்தில் 'பாலேந்திராவின் அரங்கக் கட்டுரைகள்' நூல் அறிமுக நிகழ்வு எதிர்வரும் ஜனவரி 7ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறும்.

கடந்த நான்கு தசாப்தங்களாக லண்டனில் வசித்து வரும் பாலேந்திரா, இலங்கையில் 1972_1982 காலப்பகுதியில் தீவிரமான அரங்க செயற்பாடுகளை மேற்கொண்டு, நூற்றுக்கு மேற்பட்ட ஆற்றுகைகளை இலங்கையின் பல பாகங்களிலும் நிகழ்த்தினார்.

அவரது நாடக இயக்கத்தின் ஒரு பகுதியாக 1979_1982ஆண்டு காலப்பகுதியில் அவர் எழுதிய கட்டுரைகளே பெரும்பாலும் இந்த நூலில் உள்ளன. நவீன நாடகத் துறையில் தீவிரமாக இயங்கிய காலங்களில் அனுபவச் செறிவுடன் அரங்கு பற்றி அவர் எழுதிய கருத்துக்கள் இன்றும் பொருந்தும் என்று கூறியுள்ளார் பிரபலமான இந்திய நாடக ஆளுமை இந்திரா பார்த்தசாரதி.

இலங்கைப் பத்திரிகைகளில் பிரசுரமாகிய அவரது கட்டுரைகளே முழுமையாக இந்த நூலை அலங்கரிக்கின்றன. ஒரு காலத்தைப் பதிவு செய்யும் ஒரு வரலாற்று ஆவணமாக இந்த நூலைப் பார்க்க முடியும். அரங்கியல் கற்கும் மாணவர்களுக்கு ஒரு அரிய பொக்கிஷம் இந்த நூல். இந்த நூலில் விவாதிக்கப்படும் அரங்கம், திரைப்படம், வானொலி போன்ற விஷயங்கள் மாணவர்களுக்கு பயன்படும் .

ஈழத்து நவீன தமிழ் நாடக உலகில் 50




வருடங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக இயங்குபவரும், லண்டனை வசிப்பிடமாகக் கொண்டவருமான முன்னோடி நாடக நெறியாளர் க. பாலேந்திரா எழுதிய இந்த நூல் குமரன் புத்தக இல்லம் வெளியீடாக இலங்கையில் வெளியாகிறது. நான்கு உபதலைப்புகளில் கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன.

மேடைப் பிரச்சினைகள், நாடக சர்ச்சை, பாலேந்திரா தமிழுக்கு அறிமுகப்படுத்திய பிறமொழி நாடகாசிரியர்கள், புலம்பெயர் நாடக அனுபவங்கள் ஆகிய பிரிவுகளில் கட்டுரைகள் உள்ளன. நவீன நாடகம் தொடர்பான பல அம்சங்கள் இந்த நூலில் விவாதிக்கப்படுகின்றன.

பிரபலமான மூத்த இந்திய நாடக ஆளுமை இந்திரா பார்த்தசாரதி அவர்களது அணிந்துரையுடன் இந்த நூல் வெளிவருவது சிறப்பாகும்.

நூலாசிரியர் பாலேந்நிரா பற்றி நூலகவியலாளர் என். செல்வராஜா எழுதிய குறிப்பு மற்றும் நாடக நெறியாளர் பற்றிய பல தகவல்களை இந்நூல் அடக்கியுள்ளது.




# மக்கள் வங்கியின் பொதுமுகாமையாளராக கிளைவ் பொன்சேகா

மக்கள் வங்கியின் தற்காலிக பிரதம நிறைவேற்று அதிகாரியான கிளைவ் பொன்சேகா 01.01.2023 பொதுமுகாமையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் திறைசேரி நடவடிக்கைகளில் நிபுணத்துவம் பெற்றவரும் உள்நாட்டு மற்றும் உலகளாவிய வங்கிகளில் 30 வருடங்களுக்கும் மேலான அனுபவமும் உள்ள ஒரு மூத்த வங்கியாளர் ஆவார்.

மக்கள் வங்கியில் இணைவதற்கு முன்பு அவர் ஸ்டாண்டர்ட் சார்ட்டர்ட் வங்கி மற்றும் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் வங்கி ஆகியவற்றில் பணியாற்றியுள்ளார். பொன்சேகா இலங்கை மத்திய வங்கியினால் பலதடவை வங்கி மற்றும் நிதிச் சேவைகள் துறையை அபிவிருத்தி செய்வதற்கான பல முக்கிய சபைகளின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டுள்ளார். பொன்சேகா இலங்கையின் வங்கியாளர்கள் கற்கைநிறுவகத்தின் உறுப்பினராவார். ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக முகாமைத்துவ மேற்பட்டப்படிப்பு நிலையத்தில் வணிக நிர்வாக முதுமாணி பட்டம் பெற்றவர். அவர் அவுஸ்திரேலியாவின் சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவனத்தின் சான்றளிக்கப்பட்ட உறுப்பினராகவும் உள்ளார். பொன்சேகா மொரட்டுவை புனித செபஸ்தியன் கல்லூரியின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.



# 'வைகுண்ட ஏகாதசி'



மாதம் தோறும் இரண்டு ஏகாதசிகள் வரும். ஒரு வருடத்தில் 25 ஏகாதசிகள் வருகின்றன. 'மாதங்களில் நான் மார்கழி' என்று சொன்ன மகாவிஷ்ணுவுக்குப் பிடித்தமான மார்கழி மாத வளர்பிறையில் வரும் ஏகாதசி எல்லா ஏகாதசிகளிலும் முக்கியமானது. இதைத்தான் 'வைகுண்ட ஏகாதசி' விரதம் என்று மக்கள் அனுஷ்டித்து வருகிறார்கள்.

ஏகாதசிக்கு சமமான விரதம் இல்லை. அதிலும் மார்கழி மாதம் வளர்பிறை ஏகாதசி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. விஷ்ணுவை வேண்டி வழிபடும் விரதங்களில் முதன்மையானதாக இருப்பது 'ஏகாதசி விரதம்' இந்த விரதத்தை கடைப்பிடிப்பது 'அஸ்வமேத யாகம்' செய்த பலனைக் கொடுக்கும் என்கிறது புராணங்கள்.

பெருமாளுக்கு உகந்த பண்டிகையான வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு அனைத்து பெருமாள் ஆலயங்களிலும் சொர்க்க வாசல் எனப்படும் பரமபதவாசல் திறப்பு நிகழ்ச்சி நடைபெறும். பரமபத வாசல் வழியாக சென்றால் முக்தி கிடைப்பதோடு இம்மை வாழ்வுக்கு தேவையான அனைத்து செல்வங்களும் கிடைக்கும்.

வைகுந்தத்தில் வாசம் செய்யும் பெருமாள் வைகுண்ட ஏகாதசி தினத்தில் விரதமிருந்து வழிபடும் பக்தர்களுக்கு மூன்று கோடி தேவர்கள் சூழ வந்து அருளும் தினம் வைகுண்ட ஏகாதசி எனப்படுகிறது.

திருமாலின் சக்தி ரூபத்தை ஏகாதசி திதியில் மார்கழி மாதத்தில் வணங்கினால் வைகுந்த பதவிக்கு நிகரான அளவில்லா செல்வம், புகழ், கல்வி, ஞானம், இன்பம் பெற்று வாழ்வார் என்பது நம்பிக்கை.

ஓம் சைவ மஞ்சரி

## மானுடவியல்
(தொடர்)

### கோச் செங்கட் சோழ நாயனார்



99

(சென்ற வார தொடர்ச்சி...)

அவ் வருத்தம் பொறாத யானை தன் துதிக்கையினை நிலத்தில் மோதி அறைந்து வீழ்ந்திறந்தது. அதன் துதிக்கையினுள்ளே புகுந்த கடித்த சிலந்தியும் உயிர் துறந்தது. ஆனைக்கா இறைவர் அருள் புரியும் நெறியால் அவ்வெள்ளை யானைக்கு வீடுபேறடைய அருளினார். அக்காலத்தில் சோழ மன்னாகிய சுபதேவன் என்பான் தன் பட்டத்தரசி கமலவதி என்பவளுடன் திருத்தில்லை சார்ந்து கூத்தப்பெருமானை வழிபட்டிருந்தனன். நெடுங்காலமாக மக்கட் பேறில்லாத அவ்விருவரும் இறைவரை வழிபட்டுப் போற்றிய நிலையில் இறைவர் அவர்கட்கு அருள் புரிந்தார். அதன் பயனாகக் கமலவதி கருவுற்றாள். திருவானைக்காவிற் பெருமானுக்கு பந்தரிழைத்த சிலந்தி மகவாய்ச் சார்ந்தது. கருமுதிர்ந்து மகவு பெறும் வேளை வந்த போது, 'இன்னும் ஒரு நாளிகை கழித்துப் பிறக்குமானால் இக்குழந்தை மூன்றுலகமும் அரசாளும்' எனச் சோதிடர்கள் கூறினர். அவ்வாறு ஒருநாளிகை கழித்துப் பிறக்கும் படி என்காலைப் பிணித்துத் தலைகீழாக மேலே தூக்கி நிறுத்துங்கள்' என்று சொல்ல அவ்வாறே செய்தனர்.



குறித்த வண்ணம் ஒரு நாளிகை கழித்து ஆண்குழந்தை பிறந்தது. கால நீடிப்பால் அக்குழந்தையின் கண்கள் சிவந்திருந்தன, ஈன்ற தாய் அக்குழந்தையைக் கண்டு 'என் கோச் செங்கணானனே' என அருமை தோன்ற அழைத்து உடனே உயிர் நீங்கினாள். மன்னன் தன் குழந்தையைத் தன் உயிரெனக் காத்து வளர்த்து உரிய பருவத்தில் நாடாள் வேந்தனாக முடிசூட்டித் தன் தவநெறியைச் சார்ந்து சிவலோகங் சார்ந்தான். கோச்செங்கோட் சோழர், சிவபெருமானது திருவருளினாலே முன்னைப்பிறப்பின் உணர்வோடு பிறந்து சைவத்திருநெறி தழைக்கத் தம் நாட்டில் சிவாலயங்கள் பலவற்றைக் கட்டுந் திருப்பணியினை மேற்கொண்டார்; திருவானைக்காவில் தாம் முன்னைப் பிறப்பில் சிலந்தியாக இருந்து இறைவர் திருவடிமேல் நூலாற் பந்தரிழைத்து அருள் பெற்ற வரலாற்றினை அறிந்தவராதலால் அங்கு இறைவன் வீற்றிருக்கும் ஞானச் சார்புடைய வெண்ணாவல் மரத்தினுடனே கூத்தம்பெருமான் வீற்றிருந்தருளும் அதனைப் பெருந்திருக்கோயிலாக அமைத்தார். அமைச்சர்களை ஏவிச் சோழ நாட்டின் உள்நாடுகள் தோறும் சிவபெருமான் அமர்ந்தருளும் அழகிய திருக்கோயில்கள் பலவற்றை அமைத்து அக்கோயில்களில் நிகழும் பூசனைக்கு வேண்டிய அமுதுபடி முதலான படித்தரங்களுக்குப் பெரும்பொருள் வகுத்துச் செங்கோல் முறையே நாட்டினை ஆட்சிபுரிந்தார். பின்னர் இறைவன் திருநடம் இயற்றும் தில்லைப்பதியை அடைந்து பொன்னம்பலத்தே ஆடல்புரியும் பெருமான் திருவடிகளை வணங்கிப் போற்றி அங்குத் தில்லை வாழந்தணர்களுக்குத் திருமாளிகைகள் கட்டுவித்துப் பின்னும் பல திருப்பணிகள் செய்துகொண்டிருந்து தில்லையம்பலவாணர் திருவடிநீழலை அடைந்தார்.

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்




அகில இலங்கை ஸ்ரீ சாந்தஸ்வரூபன் யாத்திரை குழுவின் மஹா மண்டல பூஜையும் குருசாமிமார் கௌரவிப்பும் முகத்துவாரம் ஸ்ரீ வெங்கடேஸ்வர மஹா விஷ்ணு ஆலயத்தில் யாத்திரை குழுவின் தலைவர் குரு சாமி ஜெயமுருகன் வீரமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் பூஜை பஜனை இடம்பெறுவதையும் கௌரவிக்கப்பட்ட குருசாமிமார்களையும் கலந்துகொண்ட பக்தர்களையும் படங்களில் காணலாம்.

## அறநெறி அறிவுநொடி



கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

### பல்லி விழும் பலன்கள்

19404) கண்ணின் இடது பக்கம் பல்லி விழுந்தால் என்ன பலன்?
பயம்.
19405) கண்ணின் வலது பக்கம் பல்லி விழுந்தால் என்ன பலன்?
சுகம்.
19406) புருவத்தில் பல்லி விழுந்தால்என்ன பலன்?
ராஜபதவியில் இருப்பவர்களிடமிருந்து உதவி கிடைக்கும்.
19407) உங்கள் கன்னம் அல்லது கண்களில் பல்லி விழுந்தால் என்ன பலன்?
ஏதோ ஒன்றிற்காக நீங்கள் தண்டிக்கப்படுவீர்கள் என்று அர்த்தமாகும்.
19408) இடது கை அல்லது இடது காலில் பல்லி விழுந்தால்என்ன பலன்?
அன்றைய நாள் முழுவதும் மகிழ்ச்சி கிடைக்கும் என்று அர்த்தமாகும்.
19409) வலது கை அல்லது வலது காலில் பல்லி விழுந்தால்என்ன பலன்?
உங்களுக்கு ஏதேனும் உடல் நல கோளாறுகள் ஏற்படும் என்ற அர்த்தமாகும்.
19410) பாதத்தில்பல்லிவிழுந்தால்என்ன பலன்?
வரும் காலங்களில் வெளிநாடு பயணங்கள் மேற்கொள்வீர்கள் என்று அர்த்தமாகும்.
19411) தொப்புள் பகுதியில் பல்லி விழுந்தால்என்ன பலன்?
விலைமதிப்பு மிக்க பொருட்களான வைர வைடூரியங்கள், இரத்தின கற்கள் கிடைக்கப் பெருமாம்.
19412) தொடையில் பல்லி விழுந்தால்என்ன பலன்?
பெற்றோர்களுக்கு வருத்தத்தை ஏற்படுத்துவீர்களாம்.
19413) இடது பக்க மார்பில் பல்லி விழுந்தால் என்ன பலன்?
சுகம் கிடைக்கும்.
19414) வலது பக்க மார்பில் பல்லி விழுந்தால் என்ன பலன்?
இலாபம் கிடைக்கும்.
19415) கழுத்து பகுதியில் பல்லி விழுந்தால் என்ன பலன்?
செய்யும் காரியங்களில் வெற்றி உண்டாகும்.
19416) வலது பக்க கழுத்தில் பல்லி விழுந்தால் என்ன பலன்?
மற்றொருவருடன் பகை உண்டாகும்.
19417) மூக்கின் இடது பக்கம் பல்லி விழுந்தால் என்ன பலன்?
கவலை.
19418) மூக்கின் வலது பக்கம் பல்லி விழுந்தால் என்ன பலன்?
வியாதி.
19419) பல்லி விழுந்து விட்டால் என்ன செய்ய வேண்டும்? உடனே குளித்து விடுங்கள்.
குளித்த பின்பு என்னசெய்யலாம்?
19420) அருகில் உள்ள கோவிலுக்கு சென்று வரலாம் அல்லது வீட்டில் உள்ள பூஜை அறையில் விளக்கேற்றுங்கள்.

## ஆருத்திரா தரிசனம்

புராண காலத்தில் பாற்கடலில் திருமால் ஆதிசேஷன் மீது பள்ளி கொண்டிருந்த போது, திடீரென்று இறைவனின் பாரம் அதிகமாயிற்று. அதனை உணர்ந்த சேஷன் பகவானிடம், நாராயணா !! திடீரென்று தங்கள் உடல்பாரம் அதிகமாகக் காரணம் என்ன என்று வினவினார். அதற்கு இறைவன், "ஆதிசேஷா !! நான் ஈசனின் திருதாண்டவ அழகை நினைத்துப் பார்த்தேன். அந்தப் பூரிப்பின் காரணமாகத் தான் எனது உடல் பாரம் அதிகமாயிற்று என்று கூறி அந்த அழகை அவரிடம் வர்ணித்தார் திருமால்.

இதனைக் கேட்டு மகிழ்ந்த ஆதிசேஷன், கேட்கும் போதே இவ்வளவு பேரானந்தமாக இருக்கும் இந்த அழகை நேரில் காண விரும்பி அதற்கான மார்க்கத்தை உரைக்கும்படி திருமாலிடம் வேண்டினார். அதற்கு அவர் ஆதிசேஷனை பூலோகத்திற்கு சென்று தில்லையில் தவம் புரிந்தால் அவனுக்கும் அது சித்தியாகும் என்றார். அதன்படி, ஆதிசேஷன் பூலோகத்தில் ஒரு ரிஷி தம்பதியருக்கு மகனாகப் பிறந்து, வளர்ந்து உரிய பருவத்தில் தில்லையில் தவம் இயற்றத் தொடங்கினார். அவரோடு வியாக்ரபாதர் என்னும் புலிக்கால் முனிவரும் இறைவனின் திருத்தாண்டவ தரிசனம் வேண்டி அவரோடு சேர்ந்து தவம் செய்தார்.



இருவருக்கும் அருள்புரிய எண்ணிய ஈசன் திருவாதிரை நன்னாளில் அவர்களுக்கு தரிசனம் அளித்து, தாண்டவம் ஆடி மகிழ்ந்து, அனைவரையும் மகிழச் செய்தார். சிவனின் அழகில் மயங்கிய முனி பத்தினிகள்...ஆருத்த்ரா தரிசனம் தொடர்பாக இன்னொரு கதையும் கூறப்படுகிறது :

தாருகா வனத்து முனிவர்கள் சிவபெருமானை நிந்தித்து ஒரு பெருவேள்வி நடத்தினர். சிவனார் பிட்சாடனர் வேடமேற்று பிச்சை எடுக்க முனிவர்களின் இல்லங்களுக்குச் சென்றார். முனிபத்தினிகள் தம்மை மறந்து பிட்சாடனராகிய சிவபெருமான் பின்னே செல்லலாயினார். இதனால் வெகுண்ட முனிவர்கள் வேள்வித் தீயில் மத யானை, முயலகன், உடுக்கை, மான், தீப்பிழம்பு என் பவற்றைத் தோற்றுவித்து சிவன் பால் ஏவினர்.

சிவனார் மதயானையைக் கொன்று, அதன் தோலை அணிந்தார். மற்றவைகளைத் தானே தரித்துக் கொண்டு முயலகன் மீது வலது காலை ஊன்றி இடது காலைத் தூக்கி நடனமாடி, முனிவர்களுக்கு உண்மையை உணர்த்தினார். இதுவே ஆருத்திரா தரிசனம் என்றும் சொல்லப்படுகின்றது.

## "யுகரிஷியின் ஆன்மீகச் சிந்தனைகள் - 15



எவனொருவன் உகந்த செயல்களை செய்கிறானோ, கடவுளின் நோக்கத்திற்கிணங்க வாழ்க்கை நடத்துகிறானோ, அவனுக்குத் தான் தெய்வ கடாக்ஷம் கிட்டும். தூங்கிக் கொண்டு பொழுதை போக்கும் சோம்பேறிகளை தெய்வமும் வெறுக்கும். மனிதன் தெய்வ சக்திகள் அனைத்தும் பெற்றிட விரும்ப வேண்டும் என்று கடவுள் நினைக்கிறார்.

தெய்வ நம்பிக்கை இழந்தவனுக்காக இந்த உலகம் இயங்கவில்லை. அசுர எண்ணம் கொண்ட அவர்களை இந்த பூமித்தாய் தன் மடியில் தாங்கிக் கொண்டுள்ளார். அவர்கள் வெளியேறும் காலம் வந்து விடும். அப்படி அவர்களை இயற்கை வெளியேற்றும் காலம் வெகு தொலைவில் இல்லை. அனலிடைப்பட்டவர்கள் போல் அவர்கள் துடிப்பது உறுதி. மயக்கம், பிரமை, சோம்பேறித்தனம் அறியாமை ஆகியவைகளை கைவிட்டு, விழிப்புணர்வை வரவழைத்துக் கொள்ளுங்கள். புனிதமான வெளிச்சத்தை நோக்கி முன்னேறுங்கள். அதன் மூலம் மனிதர்களாகிய நமக்கு சித்தி கிடைக்கும். மேலும் ஆன்ம லாபமும் உண்டாகும்.

இந்த தெய்வீக விழிப்புணர்வு எங்ஙனம் அமையும்? முதலில் நாம் நம் இயல்புகளை ஏற்றுக் கொள்வோம். நம்மை அந்த பரமபிதா, பராமத்மாவின் மைந்தர்கள், அவரின் பிரதிநிதிகள் என அனுபவ பூர்வமாக உணர்வோம். நம்மிடமுள்ள தீயகுணங்கள் அனைத்தையும் தூக்கி எறிவோம். தீயகுணங்கள் அகன்றதும் நம் உள்ளத்தில் தெய்வீக தீப ஒளி பிரகாசித்து சுடர்விடும். உலகமே ஒளியமாக விளங்கும். தாம் எங்கும் பரவி அழகுற விளங்குகிறோம் என்ற உணர்வு மேம்படும். நாலாபுறமும் ஆனந்தம் சூழும். அமரத்தன்மை பெறும். வாழ்க்கை தெய்வீகத்தை நோக்கி முன்னேறும். கடவுள் படைப்பில் மனிதனை விட சிறந்த படைப்பு ஏதுமில்லை.

மனித ஆற்றல்களில் எண்ணத்தின் ஆற்றலுக்கு மிகுந்த வலிமையுண்டு. எண்ணத்தின் ஆற்றல் பெற்ற ஒருவன் லட்சக் கணக்கான மனிதர்களுக்கு தலைமை தாங்கி வழி நடத்த முடியும். எண்ணத்தின் ஆற்றல் கொண்ட ஒருவன். எவ்வித பயன்பாட்டு சாதனங்கள் இல்லாமலும் அவனால் முன்னேறக்கூடிய பாதையினை உருவாக்க முடியும், எண்ண ஆற்றலின் மூலமே பல மாமனிதர்கள் சமூகத்தையும் தேசத்தையும் நிர்மாணித்தனர். எண்ண ஆற்றல் கொண்டவனே வாழ்க்கை பந்தங்களிலிருந்து விடுபட்டு ஆன்மீகவாதியாக வலம் வர முடியும். எண்ணத்தின் ஆற்றலின் மூலம் தான் மகான்கள் பராமாத்வை உணர்ந்துள்ளனர்.

மனிதனின் வாழ்வை உருவாக்குவதற்கான வசதி செய்வதிலும் உருக்குலைய வைப்பதிலும் அவனது எண்ண ஆற்றல் முக்கிய பங்கு வகிக்கிறது. மனித வாழ்வு எண்ணங்களின் அடிப்படையில் தான் அமைகிறது. கெட்ட எண்ணங்களைக் கொண்டு ஒருவன் தன் வாழ்வை முன்னேற்றிக் கொள்ள முடியாது.

அவர்கள் வெற்றி பெறுவது போல் காணப்பட்டாலும் வீழ்ச்சி அடைந்தே தீருவர். இது உண்மையான உண்மை. எனவே, உங்கள் எண்ணங்களை ஆய்வு செய்யுங்கள். உங்கள் எண்ணங்களை வலுவாக்கிக் கொள்ளுங்கள். தவறான எண்ணங்களை அகற்றுங்கள். நல்லெண்ணங்களை வளர்த்து கொள்ளுங்கள். உங்களின் நல்லெண்ணங்களுக்கேற்ப வாழ்க்கையை உருவாக்கிக் கொள்ளுங்கள்.





கம்பளை நகரத்தின் அருகாமையிலுள்ள ஜயமாலபுர என்னும் இடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் சங்காபிஷேகம் அண்மையில் இடம்பெற்றது. படம்: நாவலப்பிட்டி சுழற்சி நிருபர் டி.வசந்தகுமார்



அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம் கொழும்பு மாவட்டத்தில் நடத்திய ஆடற் கலைப் போட்டியில் அரையிறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்ட முகாத்துவாரம் ஸ்ரீ பத்மாவதி அறநெறி பாடசாலை மாணவ மாணவிகளையும் ஆசிரியர்களையும் படத்தில் காணலாம்.



# கிழக்கின் குரல்

# மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் எல்லைகள் நிர்ணய கூட்டம்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் எல்லைகள் நிர்ணயம் தொடர்பான குழுக் கூட்டம், மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் தலைமையில் (29) மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

எல்லை நிர்ணயம் மேற்கொள்ளும்போது ஏற்படும் நிர்வாக எல்லை பிரிப்புக்கள் தொடர்பான பிரச்சினைகளை இனம் கண்டு அவற்றை தீர்ப்பதற்கான ஆலோசனை மற்றும் கருத்துக்கள் என்பவை இதன்போது கோரப்பட்டன.

அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் இது தொடர்பான கருத்துக்களை முன்வைத்தனர்.



தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய இதன்போது, எல்லை நிர்ணயம் தொடர்பாக விளக்க மளித்தார்.

இந்நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், முன்னாள் இராஜாங்க அமைச்சர் அமீர்அலி, முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பூ.பிரசாந்தன், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவரின் தனிப்பட்ட செயலாளர் த.தஜிவரன், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. சுதர்சினி ஸ்ரீகாந்த், மாவட்ட புள்ளிவிபரவியலாளர் ஜெய்தன், பிரதேச செயலாளர், உதவி பிரதேச செயலாளர்கள், மட்டக்களப்பு மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் சுபியான், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பிரகாஷ், துறைசார் நிபுணர்கள் மற்றும் உயரதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

## ஐஸ் போதைப் பொருளுடன் கல்லடியில் ஒருவர் கைது

மாளிகைக்காடு குறூப் நிருபர்

கல்முனை விஷேட அதிரடிப் படை அதிகாரிகளால் காத்தான்குடி பொலிஸாரின் உதவியுடன், 22வயதுடைய சந்தேக நபரொருவர் ஒரு கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்முனை விஷேட அதிரடிப் படை முகாமிற்கு கிடைத்த இரகசிய தகவலின்பிரகாரம், கல்லடி விவேகானந்தா பெண்கள் பாடசாலை முன்பாக வைத்து இச்சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்த ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. இவ்விடயமாக காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சாய்ந்தமருது பிரதேசத்தின் வட்டாரங்களை குறைப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது

### முன்னாள் நகர பிதா சிராஸ் மீராசாஹிப்

ஒலுவில் விசேட நிருபர்

புதிதாக அமைக்கப்பட்டுள்ள தேர்தல் எல்லைகள் நிர்ணய ஆணைக்குழுவின் சிபாரிசின் அடிப்படையில், கல்முனை மாநகரசபைக்குட்பட்ட சாய்ந்தமருது பிரதேசத்திலுள்ள வட்டாரங்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் 06 ஆக இருக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளதாக, கல்முனை மாநகர முன்னாள் முதல்வர் கலாநிதி சிராஸ் மீராசாஹிப் தெரிவித்தார்.

பிரதமரும், உள்நாட்டலுவல்கள் அமைச்சருமான தினேஷ் குணவர்தனவுக்கு அவர், அனுப்பி வைத்துள்ள கடிதத்திலே இதுபற்றி அவர் தெரிவித்துள்ளார். அக்கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளதாவது,


புதிதாக அமைக்கப்பட்டுள்ள தேர்தல் எல்லைகள் நிர்ணய ஆணைக்குழுவின் சிபாரிசின் அடிப்படையில், கல்முனை மாநகரசபைக்குட்பட்ட சாய்ந்தமருது பிரதேசத்திலுள்ள 06 வட்டாரங்கள் நான்காக குறைத்துள்ளமையை ஏற்க முடியாது.

அதிக வாக்காளர்களையும், அதிக சனத்தொகையையும் கொண்ட சாய்ந்தமருத்துக்கு 04 வட்டாரங்கள் என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. அங்கு 06 வட்டாரங்களே தொடர்ந்தும் இருக்க வேண்டும். பொலிவேரியன் கிராமத்தை தனியான வட்டாரமாக பிரிக்கவேண்டிய தேவைகள் உள்ளன.

இக்காலகட்டத்தில் இப்படி வட்டாரங்களை குறைப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

கல்முனையில் 05 வட்டாரங்களும், இஸ்லாமாபாத்தை தனி வட்டரமாகவும் நிர்ணயித்துள்ளமை போன்று சாய்ந்தமருத்துக்கான வட்டாரங்களும் 06ஆக இருக்க நடவடிக்கை எடுப்பது அவசியம் இவ்வாறு பிரதமருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் சிராஸ் மீராசாஹிப் தெரிவித்துள்ளார்.

## புத்தாண்டை வரவேற்று அம்பாறை மாவட்ட ஆலயங்களில் வழிபாடுகள்



வாச்சிக்குடா விஷேட நிருபர்

புத்தாண்டை வரவேற்கும் விசேட பூஜை வழிபாடுகள் மற்றும் கொண்டாட்டங்களில் கலந்து கொண்ட அம்பாறை மாவட்டல் வாழும் தமிழ் மக்கள், நாட்டுக்கும், மக்களுக்கும் நல்லாசியையும் வேண்டிக் கொண்டனர்.

நாடு சுபீட்சமடைய வேண்டும் என்ற வேண்டுதலுடன் புத்தாண்டு வழிபாட்டு நிகழ்வுகளில் கலந்து கொண்ட இவர்கள், அதிகாலை நீராடி, புத்தாதடையணிந்து ஆலயங்களுக்குச் சென்றனர். இவர்கள் அங்கு, பாரம்பரிய நிகழ்வுகளிலும் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

அக்கரைப்பற்று வாச்சிக்குடா பஞ்சமுக ஆஞ்சநேயர் ஆலயம் மற்றும் அக்கரைப்பற்று வீர மகா காளியம்மன், ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் மற்றும் தாமரைக்குளம் சீரடி சாயிபாபா ஆலயங்களிலும் பூஜைகள் இடம்பெற்றன. இறைவழிபாட்டில் ஈடுபட்ட மக்கள் ஒருவருக்கொருவர் வாழ்த்துகளை பரிமாறிக்கொண்டதுடன் பெரியோர்களின் ஆசியினையும் பெற்றுக்கொண்டனர்.

இதன் பின்னர் ஆலயம் சென்ற அடியவர்கள் அனைவருக்கும் ஆலய பிரதமகுருமார்களின் ஆசிர்வாதம் மற்றும் புதுவருட கைவிசேடமும் வழங்கி வைக்கப்பட்டன.

## கல்முனையின் எதிர்கால திட்டங்கள்; சமூக முன்னோடிகள் கலந்துரையாடல்

மருதமுனை தினகரன் நிருபர்





கல்முனை பிரதேச எல்லை நிர்ணயம் மற்றும் எதிர்கால திட்ட முன்மொழிவுகள் தொடர்பான கலந்துரையாடல் கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலியின் நெறிப்படுத்தலில் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி கேட்போர் கூடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை(30) மாலை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் முன்னாள் இராஜாங்க அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் கலந்துகொண்ட கல்முனை பிராந்தியவிடயங்கள், அரசினால் முன்னெடுக்கப்படும் நடைமுறைகள், கொள்கை பிரகடனங்கள்,கல்முனையின் எதிர்கால நடவடிக்கைகள் வட்டாரப்பிரிப்புக்கள் தொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் கருத்து வெளியிட்டார்.

மேலும் இந்நிகழ்வில் கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றக்கீப், கல்முனை நாகூர் ஆண்டகை தர்ஹா ஷரீப் மற்றும் கல்முனை முஹையத்தீன் ஜும்மா பெரியபள்ளிவாசலின் தலைவர் டாக்டர் எஸ்.எம்.ஏ. அஸீஸ், கல்முனையான்ஸ் போரம் அமைப்பின் பிரதிநிதிகளான இப்திகார் றிசாத் செரீப், எம். முபாரிஸ், கல்முனை மறுமலர்ச்சி மன்ற தலைவர் எம்.எம். நஸீர் ஹாஜி போன்ற பலரும் கருத்து வெளியிட்டனர்.

## புல்மோட்டையில் காரியாலயம் திறந்துவைப்பு

கந்தளாய் தினகரன் நிருபர்

திருகோணமலைத் தொகுதி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அமைப்பாளரும் குச்சவெளி பிரதேச சபைத் தலைவருமான ஏ.பி. முபாறகின் வேண்டுகோளின் பேரில், திருகோணமலைத் தொகுதிக்கான கட்சிக் காரியாலயம் நேற்று (01) திறந்துவைக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக், இக்காரியாலயத்தை புல்மோட்டையில் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் குச்சவெளிப் பிரதேச சபையின் உறுப்பினர்களான பளீல் அமீன், நஸார், முஜீப், முன்னாள் உறுப்பினர் றஸ்மின், உலமாக்கள், கட்சி முக்கியஸ்தர்கள், ஆசிரியர்கள், பிரதேச பிரமுகர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.

## நூல் வெளியீடு

கிண்ணியா தினகரன் நிருபர்

மகறு கிராம உத்தியோகத்தர்ப் பிரிவை உள்ளடக்கியதாக சேகரிக்கப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அப்பிரதேச கிராம உத்தியோகத்தர் எம், அஸ்லம் நூலொன்றை எழுதியுள்ளார்.இவரால் எழுதப்பட்ட மகறு கிராம தகவல் மஞ்சரி எனும் நூல், கிண்ணியா பிரதேச செயலாளர் எம். எச்.எம்.கனி தலைமையில் மகறு கிராம உத்தியோகத்தர் காரியாலய வளாகத்தில் சனிக்கிழமை (31) வெளியிடப்பட்டது.

இந்நிகழ்வில், பிரதேச முக்கியஸ்தர்கள், இலக்கிய ஆர்வலர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

## சோபகிருது வருடம் அனைவரது வாழ்விலும் சுபீட்சத்தை உண்டு பண்ணட்டும்

### அகில இலங்கை சித்தர்கள் குழு தலைவர் ஆதித்தன் வாழ்த்து

ஆரையம்பதி தினகரன் நிருபர்



பிறந்த இந்த புத்தாண்டு சித்தர்களின் பரிபூரண ஆசி நிறைந்த ஆண்டாக மலர்ந்து அனைத்து இன மக்களும் அவர்கள் தான் விரும்பும் இயல்பு வாழ்க்கைக்கு மாறி சுபீட்சம் நிறைந்த ஆண்டாகவும் நாட்டிலே ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடிகள் பஞ்சம், பசி, பட்டினி அனைத்தும் நீங்கி வளம் கொழிக்கும் ஒரு நாட்டில் நாம் வாழ்கின்றோம் என்கின்ற மனநிறைவுடனும் மனோ தைரியத்துடனும் வாழ்வதற்கு இந்த ஆண்டு வழி வகுக்க வேண்டும். அகில இலங்கை சித்தர்கள் குழு தலைவர் துரைராஜ சிங்கம் ஆதித்தன் தனது புத்தாண்டு செய்தியான தமது வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த பிரபஞ்சத்தில் நடக்கின்ற அனைத்து இயற்கை நியதிகளுக்கும் மக்கள் முகம் கொடுத்து மனோ தைரியத்தை இழக்காமல் முயற்சியை வாழ்க்கையில் ஒரு மூலதனமாக்கி வாழப் பழகுவதுடன் முடிந்தவரை பிறருக்கு நம்மால் முடிந்த உதவிகளை செய்து பரஸ்பரம் புரிந்துணர்வுடன் காருண்ய சீலர்களாக நோய் நொடி அற்றவர்களாக தீய பழக்க வழக்கங்களுக்கு அடிமையாகாதவர்களாக வாழ்ந்து இறை சிந்தனை நிறைந்த மனிதர்களாக நாம் எடுத்த பிறவிப் பயனை புனிதப் பயணமாக மாற்றிக் கொள்ள வேண்டும் எனவும் அவரது புத்தாண்டு செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## பாண்டிருப்பு ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் திருவாசக முற்றோதல்



பாண்டிருப்பு தினகரன் நிருபர்

சமயக் குரவர்களில் ஒருவரான மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த திருவாசகம் முற்றோதல் நிகழ்வு, பாண்டிருப்பு பிரதேசத்திலுள்ள இந்து ஆலயங்களில் நடைபெற்றுவருகின்றன.

இதற்கமைய பாண்டிருப்பு ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் சிவசங்கரி திருமுறை ஓதுவோர் சங்கத்தினர் திருவாசக முற்றோதல் நிகழ்வை நடாத்தினர்.

திருவாசகத்திற்கு உருகாதோர் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்று சொல்லப்படுகின்றது. அத்துடன் திருவாசகமானது பிறவிப்பயனை தீர்த்து முக்தி தரக்கூடிய அரும்மருந்தாக உள்ளதாகவும் இந்துக்கள் நம்புகின்றனர்.



மண்முனைப்பற்று கிரான்குளம் பிரதேச விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன், விழிப்புணர்வுக் கூட்டம் இடம்பெற்றது. உலகத் தமிழர் மகுடம் அமைப்பினர் இதை ஏற்பாடு செய்திருந்தனர். அமைப்பின் தலைவர் ஆர். நடேசபதி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரமுகர்கள் மற்றும் உதவி பெறும் நூற்றுக்கும் அதிகமான பயனாளிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

படம்: ஆரையம்பதி தினகரன் நிருபர்

## சிகிச்சை பலனின்றி காட்டு யானை உயிரிழப்பு

கந்தளாய் தினகரன் நிருபர்

தம்பலகாமம் பிரதேச சபைக்குட்பட்ட புலி ஊற்று குளம் காட்டு பகுதியில், காயங்களுக்குள்ளான நிலையில் நோய்வாய்ப்பட்டிருந்த காட்டு யானை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக வனஜீவராசி அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். நோயுடன் கிடந்த இந்த யானை பற்றி பிரதேச மக்கள், கந்தளாய் வனஜீவராசி அதிகாரிகளுக்கு தகவல் வழங்கினர். இதையடுத்து இந்த யானைக்கு சிகிச்சையளிக்கப்பட்டது.

எனினும், சிகிச்சை பலனளிக்காமல் இந்த யானை உயிரிழந்ததாக ஜீவராசி அதிகாரியொருவர் தெரிவித்தார்.

முப்பது வயது மதிக்கத்தக்க ஆண் யானையே, இவ்வாறு உயிரிழந்தது. உயிரிழந்த யானைக்கு பிரேத பரிசோதனை நடாத்தப்படவுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## அரசாங்க அதிபர் முன்னிலையில் வீட்டுத்தோட்ட பயிர்கள் வழங்கி வைப்பு

மட்டக்களப்பு குறூப் நிருபர்



வீட்டுத்தோட்ட பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு பயனாளிகளுக்கு பயிர்க்கன்றுகள் வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் இவற்றை வழங்கி வைத்தார். மாவட்ட செயலக வளாகத்தில் இடம்பெற்ற இந்நகிழ்வில்,வீட்டுத்தோட்ட பயிர்களான மிளகாய், கத்தரி, தக்காளி போன்ற பலன்தரும் கன்றுகள் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு குறைந்த விலையில் வழங்கி வைக்கப்பட்டன.இதன் போது எச்.ஆர். ஒருங்கிணைந்த விவசாய பண்ணையின் உரிமையாளர் நாகராஜா, வீட்டு தோட்ட பயிர்களுக்கு எற்ப்படும் நோய்களிலிருந்து அவற்றை பாதுகாப்பது பற்றியும் விழிப்பூட்டினார்.

நாட்டின் உணவு பாதுகாப்பு மற்றும் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில், அரசாங்கம் இத்திட்டத்தை முன்னெடுத்து வருகிறது.

## கிழக்கு மாகாண மேலதிக கல்வி பணிப்பாளராக புவனேந்திரன்

காரைதீவு குறூப் நிருபர்



கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய செல்லத்துரை புவனேந்திரன் கிழக்கு மாகாண மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கை கல்வி நிருவாக சேவை தரம்1 அதிகாரியான புவனேந்திரனுக்கான நியமனக் கடிதம் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்டுள்ளது.

காரைதீவைச் சேர்ந்த இவர் 2009.09.09 இல் காரைதீவு விபுலாநந்த மத்திய கல்லூரியில் ஆசிரிய நியமனம் பெற்றதும் கல்விச்சேவையில் இணைந்து கொண்டார். அரச சேவை ஆணைக்குழுவின் தீர்மானத்தின்படி இலங்கை கல்வி நிருவாக சேவையின் முதலாம் வகுப்புக்கு 2021.03.23 முதல் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இவர் 2009 இல் இலங்கை கல்வி நிருவாக சேவையில் இணைந்து கல்முனை கல்வி வலயத்தில் கடமையாற்றிய பின்னர் 2010 முதல் 2018 வரை சம்மாந்துறை கல்வி வலயத்தில் கல்வி அபிவிருத்தி திட்டமிடல்நிர்வாகம் போன்ற பிரிவுகளில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி, 2019 இல் மீண்டும் கல்முனை வலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்று 2020.04.16 முதல் கல்முனை கல்வி வலயத்தின் வலயக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி வந்தார்.

இவர் கிழக்கு பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானப் பட்டதாரியாகி பிரான்சில் தனது கல்வித் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவத்தில் முதுநிலைமாணி பட்டத்தை பெற்றுக் கொண்டார்.

இவர் நாளை மறுதினம் புதன்கிழமை திருகோணமலை கிழக்கு மாகாண கல்வி திணைக்களத்தில் கடமையை பொறுப்பேற்கவிருக்கிறார்.

# அமரர் சந்திரசேகரனின் அரசியல் வழிகாட்டல்களே மலையக சமூகத்துக்கு விடிவைப் பெற்றுத் தரும்





**ஹற்றன் சுழற்சி நிருபர்**

அமரர் பெ.சந்திரசேகரனை நாட்டு மக்கள் அனைவரும் நினைவு கூர வேண்டுமென வும்,1994 இல்,தனியாக நின்று அரசாங் கத்தை அமைத்த அவரது வியூகம் பாராட்டுக் குரியது எனவும்

மலையக மக்கள் முன்னணி மற்றும் மலையக தொழிலாளர் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளு மன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஸ் ணன் தெரிவித்தார்.

மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபக தலைவரும், முன்னாள் அமைச்சருமான அமரர் பெ.சந்திரசேகரனின் 13ஆவது சிரார்த்த தினம்,நேற்று (01) மதியம் 2 மணிக்கு, ஹற்றனில் உள்ள மலையக மக்கள் முன்னணியின் தலைமை காரியால யத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.இங்கு உரை யாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது,

வட, கிழக்கு மக்களுடன் நல்லுறவைப் பேணியதுடன், மலையக மக்களின் வாழ்வில் மாற்றத்தை கொண்டு வந்த முன் னணித் தலைவர் அமரர் சந்திரசேகரன். அவரது வழிகாட்டல்களையே,

மலையக மக்கள் முன்னணி கடந்த 13 வரு டங்களாக தொடர்ந்து முன்னெடுத்து வருகி றது. மலையக மக்கள் முன்னணியின் உண் மையான விசுவாசிகளே இங்கு உள்ளனர். அவருடைய இறுதி சடங்கின் போது அவ ருடைய கொள்கையை கட்டிக் காப்போம் என சத்தியம் செய்தவர்கள், கொள்கையை காட்டிக் கொடுத்து மலையக மக்கள் முன்ன ணிக்கு எதிராக செயற்படுகின்றனர். .

அமரர்.சந்திரசேகரன் இந்த நாட்டுக்கும் மலையக மக்களுக்கும் செய்த சேவையை யாராலும் மறக்க முடியாது. இன்று அவர் உயிரோடு இருந்திருந்தால் நிச்சயமாக அர சாங்கத்திற்கு எதிராக வீதியில் இறங்கிப் போராடியிருப்பார்.

தொடர்ந்தும் மின்சார கட்டணம் அதிக ரிக்கவுள்ளதாக தகவல்கள் வெளிவருகின் றது. அப்படி அதிகரிக்கப்பட்டால் மலையக மக்கள் இருளில் மூழ்க வேண்டிய நிலைமை ஏற்படும். மண்ணெண்ணெய் விலையும் அதிகரித்துள்ளது. மலையக மக்களின் வரு மானம் குறைவடைந்துள்ளது. வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது.

எனவே,விடிவு தேடிய பயணத்துக்கு மலையக மக்கள் தயாராக வேண்டும் என்றார்.



பிறந்துள்ள புது வருடத்தை வரவேற்று, உடப்புஸலாவையில் சர்வ மதத்தவரையும் ஒன்றிணைத்து ஒளி விழா இடம்பெற்றது. கிராம சேவை அதிகாரி சிவநேசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், மத குரு மார்கள்,உடப்புஸலாவை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, சமூக சேவையாளர்கள் மற்றும் பிரதேச பொது மக்கள் எனப் பலர் கலந்துக்கொண்டனர். (ஆ.ரமேஸ்)

# இரண்டு வேன்கள் மோதி 12 பேர் காயம்



**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

இரண்டு வேன்கள் நேருக்கு நேர் மோதி இடம்பெற்ற விபத்தில், 12 பேர் காய மடைந்து வைத்திய சாலையில் அனும திக்கப்பட்டனர்.கேகாலை மொரகொட பிரதேசத்தில் நேற்று (01) இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தோரில் மூன்று குழந்தைக ளும் உள்ளடங்குகின்றனர்.சிலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

கொழும்பிலிருந்து தெல்தோட்டை வரையில் பயணித்த வேன் ஒன்றும், கண் டியிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த வேனுமே விபத்துக்குள்ளா னது.

# ஜெய்லானி தேசிய பாடசாலையில் இரவு நேர மேலதிக வகுப்புக்கள்

**பலாங்கொடை தினகரன் நிருபர்**

பலாங்கொடை ஜெய்லானி தேசிய பாடசாலையின் கல்வி வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருட்டு, பலாங் கொடை பள்ளிவாசல்கள் பரிபாலன சபையின் வழிகாட்டலின் கீழ், உயர்தர வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு இரவு நேர மேலதிக வகுப்புகள் நடாத்தப்பட வுள்ளன.

பாடசாலை ஆசிரியரான எம். எஸ். எம். நதீர் தலைமையில் கல்வி மேம் பாட்டு குழுவின் அனுசரணையில், இவ் வகுப்புக்கள் நடாத்தப்படவுள்ளன.

இந்த மேலதிக வகுப்புக்கள், இன்று ஜனவரி மாதம் இரண்டாம் தேதி முதல் நடைபெற உள்ளதாக பாடசாலையின் ஆசிரியரான ஏ. எம். சாதிக் தெரிவித் தார். இந்த வேலை திட்டத்திற்கு எம். ஜே. எம்.பாஹிம் தலைமையில் இயங் கும் ஜெய்லானி தேசிய பாடசாலையில் பழைய மாணவர் சங்கமும் பூரண ஒத்து ழைப்பை வழங்கி வருகிறது.

2021 ஆம் ஆண்டின் கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சை முடிவுக ளின்படி, ஜெய்லானி தேசிய பாடசாலை நூற்றுக்கு 40 வீத சித்திகளை மாத்திரமே பெற்றுள்ளது. இந்தப் பெறு பெற்றினை 2022 ஆம் ஆண்டின் கல்விப் பொது தராதர சாதாரண தர பரிட்சையில், நூற் றுக்கு 60 வீதமாக அதிகரிக்க நடவ டிக்கை எடுக்கப்படவுள்ளது.


## பொது மக்களிடம் விடுக்கப்படும் தயவான வேண்டுகோள்

தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் செல்லுபடியாகும் இறக்குமதி அனுமதிப்பத்திரமின்றி, தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பதிவு செய்யப்படாத மருத்துவ உபகரணங்கள் மற்றும் ஔடதங்கள் சார்பாக கம்பஹா ஔடதங்கள் பரிசோதகரால் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு இல. எம்/6781 இன் கீழ் வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது. அக் குற்றச்சாட்டில் குற்றத்தை ஒப்புக்கொண்ட காரணமாக எனக்கு ரூபா நான்கு இலட்சம் தண்டத் தொகை விதிக்கப்பட்டுள்ளது.

2015 இல 05 தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபை சட்டத்தின் 106(1) பிரிவின் கீழ் 131(1)(எ)(1) மற்றும் 131(1)(இ) பிரிவிற்கு பொருந்தும் குற்றத்தைப் புரிந்துள்ளதாகவும் மேலும் அவ்வாறான குற்றத்தை மேற்கொள்ளமாட்டேன் என நினைவில் நிறுத்தி சகல மக்களிடமும் மன்னிப்பை கோருவதற்காக இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கு கௌரவமாக அறிவித்துக் கொள்கிறேன்.

**அப்துல் ராசிக் மொஹமட் வாஜித்**
**கொன்டச்சி**
**சிலாவத்துறை**

## புளூ டயமன்ட் ஜுவலரி வேர்ள்ட்வைட் பீஎல்சீ (PQ 94)

புளூ டயமன்ட் ஜுவலரி வேர்ள்ட்வைட் பீஎல்சீ (Blue Diamonds Jewellery Worldwide PLC) இன் மேலதிக சாதாரண பொதுக்கூட்டம் ("EGM") மற்றும் பின்வரும் தீர்மானத்தை சிறப்புத் தீர்மானமாக மாற்றியமைத்தோ அல்லது மாற்றாமலோ நிறைவேற்றுவதற்கு 2023 ஜனவரி 19ஆம் திகதி வியாழன் அன்று காலை 10.00 மணிக்கு ஒரு மெய்நிகர் கூட்டமாக (Virtual meeting) நடைபெறும்.

இதன் மூலம் நிறுவனத்தின் 88,000,000 சாதாரண வாக்குரிமை பங்குகளை அம்ப்ரோசியா மெனேஜ்மன்ட் பிரைவேட் லிமிடெடிற்கு (இதன் பின்னர் 'அம்ப்ரோசியா' அல்லது 'முதலீட்டாளர்' என்று குறிப்பிடப்படுகிறது) ஒரு பங்கிற்கு 0.29 இல. ரூபா என்ற கருத்தில் ஒரு தனியார் இட ஒதுக்கீடு மூலம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. 25,520,000 ரூபாய் தொகையை திரட்டுவதற்கு, இது நிறுவனம் மற்றும் நிறுவனத்தின் தற்போதைய பங்குதாரர்கள் அனைவருக்கும் நேர்மையானது மற்றும் நியாயமானது என்பது சபையின் கருத்தாகும்.

மேற்கூறப்பட்ட வகையில் புதிய சாதாரண வாக்குரிமைப் பங்குகள், அனைத்து வகையிலும் பரிபாசு (Paripassu) தரவரிசையில் வெளியிடப்பட்ட நிறுவனத்தின் தற்போதைய சாதாரண வாக்களிப்புப் பங்குகளுடன், அறிவிக்கப்பட்ட எந்த ஈவுத்தொகையிலும் பங்குபெறும் உரிமை உட்பட வழங்கப்படும்.

மேலதிக சாதாரண பொதுக்கூட்டத்தில் (EGM) பங்கேற்க விரும்பும் பங்குதாரர்கள் தங்கள் விவரங்களை https://www.bluediamondsplc.com/egm-2023-registration என்ற இணைப்பு (Link) ஊடாக 2023 ஜனவரி 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 4.00 மணிக்கு முன் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

பங்குதாரர்களுக்கான சுற்றறிக்கை, கூட்டத்தின் அறிவிப்பு மற்றும் பதிலாள் படிவம் என்பன கொழும்பு பங்குச் சந்தையின் இணையத்தளத்திலும் (www.cse.lk) நிறுவனத்தின் இணையத்தளத்திலும் (www.bluediamondsplc.com) கிடைக்கத்தக்கதாக உள்ளன.

**ஜனசக்தி கோர்ப்பரேட் சேர்விசஸ் லிமிடெட்**
**செயலாளர்கள்**

## அறிவித்தல்

### வ/ப வாரியபொல பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் 2022.12.31ம் திகதிக்கு பூர்த்தியாகியுள்ள வாக்குரிமைபெற்ற அங்கத்தவர்கள் பெயர் பட்டியலை காட்சிப்படுத்தல்

2023.01.11 முதல் 2023.01.25ம் திகதி வரை சங்கத்தின் தலைமையகத்தில் மற்றும் ஒவ்வொரு கூட்டுறவுப் பிரதேசங்களினதும் சம்மந்தப்பட்ட வளாகங்களில் காட்சிப்படுத்தப்படும் என இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் பதிப்பாளரால் விநியோகிக்கப்பட்டுள்ள இல. 2131/54 மற்றும் 2019.07.12ம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் திருத்தப்பட்ட 1981/2 2016.08.22ம் திகதிய வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்ட வடமேல் மாகாண பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் பிரதேச செயற்குழு உறுப்பினர்களை தேர்ந்தெடுத்துக் கொள்ளும் கூட்டுறவு வாக்கெடுப்பு கட்டளைத் தொகுதியின் பிரகாரம் இக் காட்சிப்படுத்தல் இடம் பெறுவதுடன் குறித்த அட்டவணையில் குறிப்பிடப்படும் பெயர்கள் அல்லது தகவல்களின் பிழையான நிலைமைகள் காணப்படின் அது பற்றி மேன்முறையீடு அல்லது திருத்தம் அல்லது உள்ளடக்கப்பட்டுள்ள வேறு தொடர்புபட்ட எதிர்ப்புக்கள் இருப்பின் காட்சிப்படுத்தல் கால எல்லைக்குள் சங்கத்தின் செயலாளருக்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறு இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

**கௌரவ பணிப்பாளர் சபையின் கட்டளைப் பிரகாரம்.**

**செயலாளர்,**
**வ/ப வாரியபொல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,**
**சிலாபம் வீதி, வாரியப்பொல.**
2023.01.02

## பொது அறிவித்தல்

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் 2017-07-26ஆம் திகதிய 2022/29ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட வாகனங்களை நிறுத்துதல் தொடர்பான துணைவிதி சட்டத்தின் II (I) அத்தியாயம் மற்றும் 21ஆம் அத்தியாயத்தின் கீழ் கொழும்பு மாநகர சபையினுள் நிறுத்தப்படும் வாகனங்களுக்கு கொழும்பு மாநகர சபையினால் அறவிடவேண்டிய வாகனத் தரிப்பிடக் கட்டணம் 2023-01-01ஆம் திகதி முதல் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

| | | மணித்தியாலம் ஒன்றிற்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கான வாகனத் தரிப்பிடக் கட்டணம் (ரூபா) | ஒரு மாதத்திற்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கான வாகனத் தரிப்பிடக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|
| I. | மோட்டார் சைக்கிள் ஒன்றிற்கு | 20.00 | |
| II. | முச்சக்கர வாகனம் ஒன்றிற்கு | 40.00 | |
| III. | மோட்டார் வாகனம் அல்லது இரட்டை நோக்க வாகனத்திற்கு | 70.00 | |
| IV. | பஸ், மோட்டார் கோச், மோட்டார் லொறி, இலகுரக மோட்டார் லொறி, கனரக மோட்டர் லொறி ஒன்றிற்கு | 100.00 | |
| V. | பாடசாலை வேன் ஒன்றிற்கு | | 600.00 |
| VI. | பாடசாலை பஸ் ஒன்றிற்கு | | 1000.00 |
| VII. | அலுவலக ஊழியர் சேவை வேன் ஒன்றிற்கு | | 1200.00 |
| VIII. | அலுவலக ஊழியர் சேவை பஸ் ஒன்றிற்கு | | 2000.00 |

01. பொது விடுமறை தினங்கள் தவிர்ந்த மாதத்தின் சகல தினங்களுக்கும் தரிப்பிட கட்டணம் ஏற்புடையதாகும்.
02. மேற்கூறப்பட்ட தரிப்பிட கட்டணம் மு.ப.6.00 மணி முதல் நள்ளிரவு 12.00 மணிவரை ஏற்புடையதாகும். எவ்வாறாயினும் வைத்தியசாலைக்கு அண்மித்த இடங்களுக்கான தரிப்பிட கட்டணம் மு.ப.6.00 மணி முதல் பி.ப.6.00 வரை ஏற்புடையதாகும் அத்துடன் பாடசாலைக்கு அண்மித்த இடங்களுக்கான தரிப்பிட கட்டணம் மு.ப.6.45 மணியிலிருந்து மு.ப.7.45 மணிவரையும் மதியம் 12.00 மணியிலிருந்து பி.ப.1.30 வரை ஏற்புடையதாக இருக்கும்.

**ஜே. எம். பத்ராணி ஜயவர்தன,**
**மாநகர ஆணையாளர்,**
**கொழும்பு மாநகர சபை (CMC)**

## விலைமனுக்களுக்கான அறிவித்தல்

### இல. 341/ 13, சரண மாவத்தை, இராஜகிரியவிலுள்ள இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்டிற்கு அலுவலக தளபாடம் மற்றும் உள்ளக இணைப்பு வேலைகளை வழங்கல் மற்றும் நிறுவுதல்

**IFB No.: LMSL/SUP/DPC/17/2022**

அலுவலக தளபாடம் மற்றும் உள்ளக இணைப்பு வேலைகளை வழங்கல் மற்றும் நிறுவுதலுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து **இராஜகிரிய, சரண மாவத்தை, 341/21 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்** ஆனது முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றது.

| தளபாடப் பொதி | விளக்கம் | விலைமனுப்பிணைத் தொகை |
|---|---|---|
| அலுவலக தளபாடம் மற்றும் உள்ளக இணைப்பு வேலைகளை நிறுவுதல். IFB No.: **LMSL/SUP/DPC/17/2022** | மரத் தளபாடம், பப்ரிக் சோபா, கப்போட்டுக்கள், தட்டுக்கள், ஏனைய மேசைகள், ஒளித்தடுப்புக்கள் மற்றும் ஏனைய நானாவித வேலைகளை வழங்கல் | 300,000 ரூபா |

2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும். மதிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த சாதகமான விலைமனுவின் அடிப்படையில் விலைமனு மதிப்பீடு மற்றும் ஒப்பந்தம் வழங்கல் ஆகியன மேற்கொள்ளப்படும்.
3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை **011-2883972 என்ற தொலைபேசி மற்றும் minsupply@sltnet.lk என்ற மின்னஞ்சலூடாக இராஜகிரிய, சரண மாவத்தை, 341/21 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட், வழங்கல் முகாமையாளரிடமிருந்து** பெற்று 2023 சனவரி 02 ஆம் திகதியிலிருந்து 2023 சனவரி 19 ஆம் திகதி வரையும் சாதாரண வேலை நேரங்களில் இராஜகிரிய, சரண மாவத்தை, 341/21 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்டில் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
4. சித்திகரமான விலைமனுதாரர் ஒப்பந்தத்தை வழங்கும் திகதியிலிருந்து 60 நாட்களுள் பண்டங்களை ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
5. 2023 சனவரி 02 ஆம் திகதியிலிருந்து 2023 சனவரி 19 ஆம் திகதியன்று வரையும் **ரொக்கப் பணத்தில் மீளளிக்கப்படாத பணக்கொடுப்பனவாகிய 8,000 ரூபாவைச்** செலுத்திய பின்னர், **இராஜகிரிய, சரண மாவத்தை, 341/21 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்டின் வழங்கல் முகாமையாளருக்கு** எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
6. 2023 சனவரி 20 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக மேலேயுள்ள முகவரியிலுள்ள **இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்டில்** விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2023 சனவரி 20 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு மேலேயுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
7. விலைமனுக்கோரல் படிவங்களின் IV ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள உருமாதிரியின் பிரகாரம் விலைமனுப்பிணையொன்றுடன் விலைமனுக்கள் இணைக்கப்படல் வேண்டும்.
8. **இராஜகிரிய, சரண மாவத்தை, 341/21 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்டின்** அலுவலகத்தில் 2023 சனவரி 13 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ள விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கு விலைமனுதாரர்கள் சமுகமளிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றனர்.

**திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவர்,**
**இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்,**
**இல.: 341/21, சரண மாவத்தை,**
**இராஜகிரிய.**

# அரச மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் பதவிகளுக்கு பெயர் குறிப்பிடப்பட்ட/ நியமிக்கப்பட்ட ஆட்களின் தகுதி பற்றி ஆராய்வதற்கான இலங்கைப் பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழு

இலங்கைப் பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழு பின்வரும் பதவிகள் தொடர்பாக பெயர் குறிப்பிடப்பட்ட/ நியமிக்கப்பட்ட ஆட்களின் தகுதிகளை ஆராயும்:-

| இல | பெயர் மற்றும் விலாசம் | பதவி |
|---|---|---|
| 1 | திரு. எம். எச். எம். என். பண்டார<br>இல. 5சி, சமிட் பிளட்ஸ், கெப்பட்டிபொல மாவத்தை, கொழும்பு05 | இஸ்ரேல் நாட்டிற்கான இலங்கையின் தூதுவராக பெயர் குறிப்பிடப்பட்டவர் |
| 2 | திரு. ரவிராஜ சிங்கசஞ்ஜீபன்<br>பெர்னாண்டோ வீதி கொழும்பு -6. | புவிச்சரிதவியல் அளவை, சுரங்கப் பணியகத்தின் தலைவராக நியமிக்கப்பட்டவர் |

மேலே பெயர்குறிப்பிடப்பட்ட / நியமிக்கப்பட்ட ஆட்கள் தொடர்பில் எவரேனும் அல்லது எந்தவோர் அமைப்பும் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்பினால் முறையாகக் கையொப்பமிட்டு, "செயலாளர், உயர் பதவிகள் பற்றிய குழு, குழுப்பணியகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே" என்ற விலாசத்திற்கு 2023 சனவரி மாதம்15ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத்தபாலில் இன்றேல் தொலைநகல் இல. 011-2777389 ஊடாக அல்லது **highposts_c@parliament.lk** எனும் மின்அஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

அவ்வெழுத்துமூல கருத்துக்களுக்கு மேலதிகமாக வாய்மூல கருத்துக்களையும் முன்வைக்குமாறு குழுவினால் பணிக்கப்படலாம். இந்த விளம்பரம் பாராளுமன்ற இணையத்தளத்திலும் இடம்பெற்றுள்ளது **(www.parliament.lk)**

**குழுச் செயலாளர்**
**பாராளுமன்றச் செயலாளர் நாயகம்,**
**இலங்கைப் பாராளுமன்றம்**

**ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே.**
**2023 சனவரி மாதம் 02ஆம் திகதி**

---

**பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்**

# பலகை மரங்களை விற்பனை செய்தல்

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் கல்பிஹில்ல, வலஹந்துவ மற்றும் ஹாகல ஆகிய தோட்டங்களில் வள முகாமைத்துவ திட்டமிடலுக்கு அமைவாக மற்றும் ஆபத்தான முறையில் அமைந்துள்ள அகற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள பலகை மரங்கள் 2499ஐ கேள்வி மூலம் விற்பனை செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தோட்டம் | மர வகைகள் | மரங்களின் எண்ணிக்கை | வேறு விபரங்கள் |
|---|---|---|---|
| கல்பிஹில்ல | யூகேலிப்டஸ் | 19 | பாதுகப்பற்ற |
| வலஹந்தூவ | இறப்பர் (புதிய தேயிலை பயிரிடும் பிரதேசம்) | 1290 | |
| வலஹந்துவ | இறப்பர் (குளம் சார்ந்த பிரதேசம்) | 1081 | |
| வலஹந்துவ | இறப்பர் (இந்திய உதவியின் கீழான வீடமைப்புத் திட்டம் | 83 | |
| ஹாகல | டர்பன்டெயின் | 26 | பாதுகாப்பு |

விலை மனுக்களுக்கான நிபந்தனைகள் மற்றும் விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான படிவங்கள் உள்ளடக்கிய கேள்வி ஆவணங்கள் இல. 21, மீரானியா வீதி, கொழும்பு -12இல் அமைந்துள்ள இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தலைமையகத்தில் 2023.01.03 மு.ப. 9.00 முதல் 2023.01.16 பி.ப. 1.00 வரையும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் கல்பிஹில்லவில் அமைந்துள்ள பிரதேச அலுவலகத்தில் 2023.01.03 மு.ப. 9.00 முதல் 2023.01.13ம் திகதி பி.ப. 3.00 வரையும் ரூ. 2000/- தொகையைச் செலுத்தி கொள்வனவு செய்யலாம்.

அக்கேள்வி ஆவணங்களை 2023.01.16 பி.ப. 1.00 இற்கு முன்பு இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் கொழும்பு -12 இல் அமைந்துள்ள தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். 2023.01.16ம் திகதி விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளும் காலம் முடிவடைந்தவுடன் அவ் விலைமனுப் பத்திரங்கள் தலைமையத்தில் திறக்கப்படும். சித்திரகமான கேள்விதாரருக்கு கேள்விகளை வழங்கி 07 நட்களுக்குள் முழுமையான தொகையைச் செலுத்த வேண்டியதுடன் அவ்வாறு செய்யாத சகல கேள்விகளும் இரத்துச் செய்யப்படும்.

ஏதேனும் விலை மனுக்களை அல்லது விலைமனுக்களின் ஒரு பகுதியை ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் முழுமையான அதிகாரம் இ. அ. பெ. கூ. பெறுகைக் குழுவிற்கு உரியது.

**தலைவர்,**
**பெறுகைக்குழு.**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்,**
**இல. 21, மீரானியா வீதி,**
**கொழும்பு -12.**

2022.12.23

---

# கட்டானை பிரதேச சபை

## ஆதன வரிகளை (வரிப்பணம்) விதித்தல் – 2023ஆம் வருடம்

1987 15ம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 134வது அத்தியாயத்தின் கீழ் சாட்டப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் 2022ஆம் வருடத்தின் நவம்பர் மாதம் 11ஆம் திகதி நடைபெற்ற கட்டான பிரதேச சபை பொதுச் சபைக் கூட்டத்தில் பின்வரும் வகையில் சோலை வரிகளை விதித்து அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறியத் தரப்படுகிறது.

(அ) ரத்தொழுகம உப அலுவலக அதிகாரப் பிரதேசத்தின் ரத்தொழுகம வீடமைப்புத் திட்டத்தில் அமைந்துள்ள நிலையான ஆதனங்களின் வருடாந்த மதிப்பீட்டுப் பெறுமதியின் 10% வரி விகிதத்தையும் அதற்கு புறம்பாகவுள்ள பிரதேசங்களில் அமைந்துள்ள நிலையான ஆதனங்களுக்கு வருடாந்த மதிப்பீட்டுப் பெறுமதியின் 06% வரி விகிதமும்

(ஆ) கட்டானை, தெமங்ஹந்திய மற்றும் ஆடிஅம்பலம உப அலுவலக அதிகாரப் பிரதேசங்களில் அமைந்துள்ள நிலையான ஆதனங்களுக்கு வருடாந்த மதிப்பீட்டுப் பெறுமதியின் 06% வரி விகிதமும்

2. 2023ஆம் வருடத்தின் பொருட்டு செலுத்த வேண்டிய வரிக் கட்டணங்களை 2023 ஜனவரி 31ஆம் திகதி அல்லது அதற்கு முன் செலுத்துவதானால் 10% (பத்து) விகிதக் கழிவும் அவ்வரிக் கட்டணங்களை காலாண்டு அடிப்படையில் செலுத்துவதானால் குறித்த காலாண்டின் முதலாம் மாதத்தில் செலுத்தப்படுமானால் 5% (ஐந்து) விகிதக் கழிவும் வழங்கப்படுமென பிரதேச சபைச் சட்டத்தின் 134(7) அத்தியாயத்தின் கீழ் இத்தால் அறியத்தரப்படுகிறது.

3. 2023ஆம் வருடத்தின் முதலாம், இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டுகளுக்கான வரிக் கட்டணங்களை முறையே மார்ச் 31, ஜூன் 30, செப்டெம்பர் 30 மற்றும் டிசம்பர் 31ம் திகதியில் அல்லது அதற்கு முன்னர் (ஏற்புடைய வகையில்) கட்டானை, தெமங்ஹந்திய, ஆடிஅம்பலம மற்றும் ரத்தொழுவை போன்ற உப அலுவலகங்களில் (ஏற்புடைய வகையில்) செலுத்தி முடிக்கப்படல் வேண்டும் எனவும் அவ்வாறு செலுத்தப்படாத அனைத்து வரிக் கட்டணங்களுக்கும் பிரதேச சபைச் சட்டத்தின் 161ம் இலக்க ''அ'' ii மற்றும் iii அத்தியாயத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் தரிசு நிலம் மற்றும் வாசஸ்தலங்களின் பொருட்டு 15% மும் மற்றும் ஏனைய ஆதனங்களின் பொருட்டு 20% மேலதிகக் கட்டணமும் செலுத்துதல் வேண்டுமென இத்தால் அறியத்தரப்படுகிறது.

4. 2023ஆம் வருடத்திற்கான வரிக் கட்டண ஆவணங்கள் தயார் செய்யப்பட்டுள்ளதெனவும் அவைகளை அலுவலக நேரத்தினுள் பொதுமக்கள் பரீட்சித்துப் பார்க்க முடியுமெனவும் பிரதேச சபைச் சட்டத்தின் 141(1) மற்றும் (2)ஆம் அதிகாரத்தின் பிரகாரம் இத்தால் அறியத்தரப்படுகின்றது.

5. உங்கள் வரிக் கட்டணங்களை செலுத்துவதற்கு வசதியாக 2023 ஜனவரி மாதத்தின் சகல சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடமாடும் சேவையொன்றை நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதால், அந்த இடத்திற்கு வருகை தந்து அல்லது வார நாட்களில் அலுவலகத்திற்கு வருகை தந்து ஜனவரி 31ஆம் திகதிக்கு முன் வரிக் கட்டணங்களைச் செலுத்தி 10% கழிவைப் பெற்றுக்கொள்ளுமாறு இத்தால் அறிவிக்கப்படுகிறது.

06. 2023 வருடத்திற்குரித்தான மதிப்பீட்டு அறிவித்தல் இதுவரை உங்களுக்குக் கிடைக்கவில்லை என்றால் இதற்கு முன் கிடைக்கப்பெற்ற மதிப்பீட்டு அறிவித்தல் அல்லது நீங்கள் ஆதன வரி செலுத்திய பற்றுச்சீட்டைக் கொண்டு வந்து உங்கள் வரித் தொகைகளைச் செலுத்தலாம் என மேலும் இத்தால் தயவுடன் அறிவிக்கப்படுகின்றது.

**கே. சிசிர குமார பர்னாந்து.**
**தலைவர்,**
**கட்டானை பிரதேச சபை.**

**கட்டானை பிரதேச சபை,**
**தெமங்ஹந்திய.**
**2023-01-02.**

---

## ஆபிரிக்க கடல் வளத்தில் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கும்
# சீன துறைமுக அபிவிருத்தி திட்டங்கள்



சீனாவின் கடல் பட்டுப்பாதைத் திட்டத்தின் கீழ் வெளிநாடுகளில் சீனா அமைத்துவரும் துறைமுக மற்றும் கடலோர அபிவிருத்தித் திட்டங்கள் காரணமாக அந்நாடுகளில் சூழல் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக வொய்ஸ் ஒப் அமெரிக்கா செய்திச் சேவை தகவல் வெளியிட்டுள்ளது. 'வன் எர்த்' என்ற சூழல் பாதுகாப்பு தொடர்பான சஞ்சிகையை ஆதாரம் காட்டி வெளியிடப்பட்டுள்ள இச் செய்தியில் ஆபிரிக்க நாடுகள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

சீன ஜனாதிபதியின் கடல் பட்டுப் பாதைத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுவரும் இந்த அபிவிருத்தித் திட்டங்கள் கடல்வாழ் உயிரினங்களும், கடலோர இயற்கை சூழலும் பாதிப்படைந்திருப்பதாகவும் அங்கோலா மற்றும் மொஸாம்பிக்கில் மாத்திரம் இரண்டாயிரத்துக்கும் அதிகமான சதுர கிலோமீட்டர் தூரத்துக்கு கடல்வாழ் உயிரினங்கள் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளதாக இச்சஞ்சிகை குறிப்பிட்டுள்ளது.

துறைமுகம் அமைப்பதென்பது எப்போதுமே சமூக மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளை ஏற்படுத்துவதுதான். கடல் வாழ் உயிரினங்கள் அழிந்து போவதற்கும் பிரச்சினைக்குரிய வெளி கடல் உயிரினங்கள் துறைமுக பகுதிக்குள் உள்நுழைவதும் வழமை என்று தெரிவித்துள்ள இந்த ஆய்வு, ஐவரி கோஸ்ட் கடற் பிராந்திய கடல்வளம் பாதிப்பு அடைந்திருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளது.

# ஐ.நா மகளிருக்கான சபையில் இருந்து ஈரான் நீக்கம்; அமெரிக்க பிரேரணை வெற்றி; இந்தியா கலந்துகொள்ளவில்லை




ஐக்கிய நாடுகள் சபையின் மகளிருக்கான அதிகார சபை உறுப்புரிமையில் இருந்து ஈரான் நீக்கப்பட்டுள்ளது. ஈரான் இச் சபையில் இருந்து நீக்கப்பட வேண்டும் என்று ஐ.நா. பொருளாதார மற்றும் சமூக கவுன்சிலில் அமெரிக்கா கொண்டு வந்த பிரேரணை வாக்கெடுப்பில் வெற்றிபெற்றதையடுத்தே ஈரானின் உறுப்புரிமை இரத்துச் செய்யப்பட்டது. 54 பேர் கொண்ட உறுப்பினர்களில் பிரேரணைக்கு ஆதரவாக 29 வாக்குகளும் எதிர்த்து எட்டு வாக்குகளும் அளிக்கப்பட்டன. 16 நாடுகள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை. கலந்து கொள்ளாத நாடுகளில் இந்தியாவும் ஒன்று.

ஈரானில் ஹிஜாப் அணிவதற்கு எதிராகப் பெண்கள் போராட்டம் நடத்தி வருகிறார்கள். கடந்த செப்டெம்பரில் ஹிஜாப் அணிய மறுத்த மஹாஸா அமின் என்ற இளம் பெண் கலாசார காவலர்களால் கைதுசெய்யப்பட்ட நிலையில் மரணமடைந்தார். இதைக் கண்டித்தும் ஹிஜாப் அணிவதை எதிர்த்தும் அந்நாட்டில் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அரசு படையினர் இந்த ஆர்ப்பாட்டங்களை மிருகத்தனமாக அடக்கி வருவதாகவும், ஆர்ப்பாட்டக்காரர்கள் கொடுமைப்படுத்தப்பட்டு கொல்லப்படுவதாகவும் கண்டனங்களை வெளியிட்டுவரும் அமெரிக்கா, இத்தகைய ஒரு நாடு பெண் உரிமைகளைப் பாதுகாக்கும் ஒரு சர்வதேச சபையில் உறுப்பு நாடாக விளங்குவதற்கான அருகதையை இழந்திருப்பதாக தெரிவித்தே இப்பிரேரணையை கொண்டுவந்தது.

பாலின சமத்துவத்தையும் பெண்களுக்கு உரிமை அளிப்பதையும் நோக்கமாகக் கொண்ட ஒரு முக்கியமான உலக அமைப்பில் ஈரான் அங்கத்துவம் வகிப்பது அமைப்பின் நோக்கத்தையே சிதறடிப்பதாக அமையும் என்றும் பொறுப்புடைமைக்கு பங்கமேற்படுத்தும் என்றும் அமெரிக்காவின் நிரந்தர உறுப்பினர் லிண்டா தோமஸ் கிறீன்பீள்ட் முன்னதாகத் தெரிவித்திருந்தார். உறுப்புரிமை வகித்துவந்த ஈரானின் பதவிக் காலம் 2026 ஆம் ஆண்டிலேயே நிறைவு பெறவிருந்தது.

---

**உள்ளூராட்சித் திணைக்களம் - கிழக்கு மாகாணம்**

## 2012ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் கீழான கூட்ட அறிவித்தல்

கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராகிய நாகராசா மணிவண்ணன் ஆகிய நான் 2012ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் 66(எ) ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 66(இ)ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைய கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்டத்திலுள்ள கிண்ணியா பிரதேச சபை தவிசாளர் பதவி வெற்றிடத்திற்கு புதிய தவிசாளரை தேர்ந்தெடுப்பதற்கான கூட்டம் 2023.01.10ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு கிண்ணியா பிரதேச சபையின் சபா மண்டபத்தில் கூட்டப்படும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன். மேலும் இக் கூட்டம் தொடர்பான அறிவித்தல் என்னால் 2312/35ஆம் இலக்க 2022.12.29ஆம் திகதிய இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் வர்தமானி பத்திரிகையில் (அதி விசேடம்) விடுக்கப்பட்டுள்ளது என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**நா. மணிவண்ணன்,**
**உள்ளூராட்சி ஆணையாளர்,**
**உள்ளூராட்சித் திணைக்களம்,**
**கிழக்கு மாகாணம்.**

---

# பெறுகை அறிவித்தல்

**இலங்கை தேசிய வைத்தியசாலை கொழும்பு -10**

இலங்கை தேசிய வைத்தியசாலைக்குத் தேவையான டோனர் வகைகள் 20ஐ வழங்குவதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன. குறித்த வழங்கலுக்காக தகைமையான பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களுக்கு இதற்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடிவதுடன் மீளளிக்கப்படாத ரூ. 3000.00 வைப்பை 2023.01.17 வரை வார நாட்களில் இலங்கை தேசிய வைத்தியசாலையின் காசாளர் பிரிவிற்குச் செலுத்திய பின்பு இலங்கை தேசிய வைத்தியசாலையின் வழங்கல்கள் பிரிவிலிருந்து இதனோடு சம்பந்தப்பட்ட கேள்வி நிபந்தனைகளுடனான விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளலாம். விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் வேளையிலேயே சாம்பிள்களை சமர்ப்பிப்பதுடன் பின்னர் சமர்ப்பிக்கப்படும் சாம்பிள் ஏற்கப்பட மாட்டாது.

2023.01.18 மு.ப. 10.00 இற்கு இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதம கணக்காளர் பணிமனையில் இவ் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**வைத்திய நிபுணர் டபிள்யூ.கே. விக்ரமசிங்க,**
**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை.**

---

# பெறுகை அறிவித்தல்

**துணிகளைக் கொள்வனவு செய்தல் – 2023**
**டி சொய்சா மகளிர் மருத்துவமனை – கொழும்பு – – 08**

டி சொய்சா மகளிர் மருத்துவமனையில் 2023ஆம் ஆண்டிற்கான துணிகளைக் கொள்வனவு செய்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன. அவ் விலை மனுக்கள் எம்மால் வழங்கப்படும் ஆவணங்கள் மூலம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2022.12.30 முதல் 2023.01.12 வரை வாரத்தில் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் மீளளிக்கப்படாத ரூபா 1000.00 தொகையை வைத்திய சாலையின் காசாளரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டு ஒன்றை நிதிப் பிரிவிற்கு சமர்ப்பித்து விலை மனுக்களை வழங்குவதற்குத் தேவையான நிதிப் பிரிவிற்கு சமர்ப்பித்து விலை மனுக்களை வழங்குவதற்குத் தேவையான ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். பற்றுச் சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

சகல விண்ணப்பங்களும் 2023.01.13 மு.ப. 10.00 இற்கு முன் கீழ்க் காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

விலைமனுக்களை உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் துணிகளை கொள்வனவு செய்தல் 2023 என்று குறிப்பிடுதல் வேண்டும். சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் 2023.01.13 மு.ப. 10.00 இற்கு திறக்கப்படும். அவ் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுமளிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்தை அழையுங்கள். (தொலைபேசி இலக்கம் 011-2697315, 2696224-25) விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பிரதேச பெறுகைக் குழுவிற்கு உரியது.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**டி சொய்சா மகளிர் மருத்துவமனை - கொழும்பு -08.**

---

afc தங்கக் கடன் சேவை
தங்க நகை ஏல விற்பனை

எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி உடன் கீழேயுள்ள நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு 31.10.2022 வரை மீட்கப்படாத ஆபரணங்கள் 17.01.2023 முற்பகல் 9.30 மணிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

தங்கக் கடன் சேவை நிலையங்கள்

அழுத்கம, அனுராதபுரம், அத்துருகிரிய, அவிசாவளை, மட்டக்களப்பு, சங்கானை, சாவகச்சேரி, சிலாபம், சுன்னாகம், கலேவெல, ஹொரண, ஜா-எல, யாழ்ப்பாணம், கதுருவெல, கடுவெல, கல்பிட்டி, தம்புள்ளை, கிளிநொச்சி, கடவத்தை, களனி, நீர்கொழும்பு, மொனராகலை, மாத்தறை, ஹோமாகம, மாலபே, ஹட்டன், பலாங்கொடை, பதுளை, பாணந்துறை, பிலியந்தலை, பருத்தித்துறை, இரத்தினபுரி, ரிகில்லகஸ்கட, திருகோணமலை, திருநெல்வேலி வவுனியா, அம்பாறை, பூகொட, அம்பலங்கொட, நிட்டம்புவ, கிரிபத்கொட, கிரிந்திவெள, வெலிமடை, நாவலபிட்டி, ராகல, தெஹியத்தகண்டி, கல்கமுவ, களுத்துறை, கேகாலை, குருணாகல், வெல்லவாய, ராஜகிரிய, கோஹவலை, நுவரெலியா, நிக்கவரெட்டியா, மாத்தளை, மதவாச்சிய, ஹிங்குரகோட, எம்பிலிபிட்டியா, அம்பாந்தோட்டை, புதுக்குடியிருப்பு, அக்குரஸ்ஸா, கிளிநொச்சி, கிரிபத்கொடை, மாலபே, மன்னார, காலி, புத்தளம், வோட் இடம், மஹியங்கனை, வென்னப்புவ, மஹரகம, உடப்புவ, கம்பளை, தெனியாய, குளியாப்பிட்டி, பராக்கிரமபுரம், தலவாக்கலை, பசறை, கணேமுல்ல, குருமன்காடு, திருகோணமலை - 2, கம்பஹா.

ஏல விற்பனை இடம் பெறும் நிலையம் மற்றும் திகதி:
722, கோட்டை வீதி இராஜகிரிய
17.01.2023

ஏலவிற்பனைக்காக வருகை தரும் அனைவரும் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வித அறிவித்தலுமின்றி ஏல விற்பனையை இரத்துச் செய்தல், பிற்போடல் மற்றும், இணைப்பதற்கான உரிமையை எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி கொண்டுள்ளது.

65 1956 இல் இருந்து
எலாயன்ஸ் பினான்ஸ்
கம்பனி பி.எல்.சி

அடகுச் சேவைத் தலைவர்
எலாயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சீ
722, கோட்டை வீதி இராஜகிரிய
தொலை : 0115 573600

---

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**

# திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2023 சனவரி 04ஆம் திகதியன்று ஏல விற்பனையினூடாக 98,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்.**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09123D078 | LKA18223G078 | LKA36424A057 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 60,000 | 20,000 | 18,000 | 98,000 |

| | |
|---|---|
| ஏல விற்பனைத் திகதி | : 2023 சனவரி 04 |
| தீர்ப்பனவுத் திகதி | : 2023 சனவரி 09 |
| வழங்கப்படும் திகதி | : 2023 சனவரி 06 |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | : 2023 சனவரி 04, புதன்கிழமை மு.ப. 11.00 |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை | : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்கள் |

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை, ஆனாலும் முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடட் | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**எம். டி. வை. சி. வீரசிங்க**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

*வழங்கும் அலுவலகம்:*
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

# நீர்கொழும்பு மாநகர சபை

## 2023 வருடத்துக்கான வரிக்கட்டண விதிப்பு

மாநகர சபை கட்டளை சட்டத்தின் 230(1) விதியின் கீழ் (252 அதிகாரம்) நீர்கொழும்பு மாநகர சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, 2022 நவம்பர் மாதம் 09ம் திகதி நடாத்தப்பட்ட மகாசபை கூட்டத்தின் தீர்மான இலக்கம்-A என்பதன் கீழ் குறிப்பிடும் விடயங்கள் சபையில் நிறைவேற்றப்பட்டதாக இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

**W.A.D. பிரபாத் லக்ஷ்மன்**
**மாநகரசபை ஆணையாளர்,**
**மாநகர சபை, நீர்கொழும்பு.**

2022 நவம்பர் மாதம் 09ம் திகதி
**நீர்கொழும்பு மாநகர சபை அலுவலகத்தில்.**

### தீர்மானம்

மேலும் மாநகர சபை கட்டளை சட்டத்தின் 230ம் பந்தியின் பிரகாரம் அதில் அடங்கியுள்ள விதிமுறைகளுக்கு அமைவாக நீர்கொழும்பு மாநகர சபையில் 2023ம் வருடத்துக்காக கீழ்கண்டவாறு வரிக்கட்டணங்களை அறவிட தீர்மானிக்கப்பட்டுள்ளதெனவும் அறிவிக்கப்படுகின்றது.

நீர்கொழும்பு நிர்வாக பிரதேசத்துக்குள் அமைந்துள்ள எல்லா வியாபார மற்றும் வர்த்தக ஸ்தாபனங்களுக்கும் வருடாந்த பெறுமதியின் பதின்மூன்று வீதமும் (13%) மற்ற எல்லா வீடுகள் மற்றும் எல்லாவிதமான கட்டிடங்கள், காணி மற்றும் சிறிய வீட்டுத் தொகுதிகளுக்கு வருடாந்த பெறுமதியில் ஆறு வீதமும் (6%) அறவிடப்படும்.

கொச்சிக்கடை நிர்வாக பிரதேசத்துக்குள் அமைந்துள்ள எல்லா வியாபார மற்றும் வர்த்தக ஸ்தாபனங்களின் வருடாந்த பெறுமதியின் பதின்மூன்று வீதமும் (13%) வீத வரியும், மற்ற எல்லா வீடுகள் மற்றும் எல்லா விதமாகவும் விபரிக்கப்படும் கட்டிடங்கள், காணி மற்றும் சிறிய வீட்டுத் தொகுதிகளுக்கு வருடாந்த பெறுமதியில் ஏழு வீதமும் (7%) வரியும் அறவிடப்படும்.

தலாஹேன நிர்வாக பிரதேசத்துக்குள் அமைந்துள்ள எல்லா வியாபார மற்றும் வர்த்தக ஸ்தாபனங்களின் வருடாந்த பெறுமதியின் பதின் மூன்று வீதமும் (13%) வீத வரியும், மற்ற எல்லா வீடுகள் மற்றும் எல்லா விதமாகவும் விபரிக்கப்படும் கட்டிடங்கள், காணி மற்றும் சிறிய வீட்டுத் தொகுதிகளுக்கு வருடாந்த பெறுமதியில் ஏழு வீத (7%) வரியும் அறவிடப்படும்.

2023ம் ஆண்டில் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது, நான்காவது தவணைகளில் வரிக்கட்டணங்கள் முறையே மார்ச் 31, ஜுன் 30, செப்டெம்பர் 30, மற்றும் டிசம்பர் 31 ஆகிய திகதிகளில் அல்லது அதற்கு முன்பு நகர சபை அலுவலகத்தில் செலுத்தி முடிக்கப்பட வேண்டுமெனவும் அவ்வாறு செலுத்தப்படாத எல்லா வரிக்கட்டணங்களுக்கும் மாநகர சபை கட்டளை சட்டத்தின் 255 ii, iii பந்திகளின் பிரகாரம் சொத்தின் தன்மைக்கேற்ப (15%) வீத மற்றும் வீத கட்டணங்களும் மேலதிகமாக அறவிடப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மாநகர சபை கட்டளை சட்டத்தின் 230 (1) மற்றும் (4) விதியின் கீழ் அமைச்சரால் ஏற்றப்படுத்தப்பட்ட சட்டதிட்டங்களுக்கு அமைவாக வருடாந்த வரிக்கட்டணம் 2023 ஜனவரி 31ம் திகதி அல்லது அதற்கு முன்பு செலுத்தப்பட்டால் 10% கழிவும் மூன்று மாத கட்டணங்கள் முதலாவது மாதத்திலேயே செலுத்தப்பட்டால் 5% கழிவும் வழங்கப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

உங்களால் செலுத்தப்படும் வரிக்கட்டணம் உங்கள் நன்மைக்காகவே உபயோகிக்கப்படுவதனால், உங்கள் வரிக்கட்டணங்களை உரிய நேரத்தில் செலுத்தி உங்களது பங்களிப்பை சபைக்கு வழங்குமாறு தயவாய்வே வண்டுகின்றேன்.

**W.A.D. பிரபாத் லக்ஷ்மன்,**
**மாநகர சபை ஆணையாளர்,**
**மாநகர சபை, நீர்கொழும்பு.**

# கடுகண்ணாவ நகர சபை

## பெறுகை விலைக்கோரல் அழைப்பு – 2023

- பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஆதனங்களை குத்தகைக்கு வழங்கும் பொருட்டு பெறுகை விலைமனுக்கள் என்னால் கோரப்படுகின்றன.
- விண்ணப்பப் படிவங்களை 2023-01-02ஆம் திகதி முதல் 2023-01-11ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையான வேலை நேரங்களில் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
- விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி தினம்: 2023-01-12ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரையாகும். விலைமனுக்கள் 2023-01-12ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்குத் திறக்கப்படும்.
- நிபந்தனைகள் மற்றும் மேலதிக விபரங்களை கடுகண்ணாவ நகர சபை அலுவலகத்திலிருந்து அல்லது 0812571275 எனும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

| 01ஆம் இலக்க அட்டவணை பழைய சந்தைக் கட்டிடத்தொகுதி இறைச்சி, மீன் தவிர்ந்த ஏனையவை (01 வருடம்) | 02ஆம் இலக்க அட்டவணை புதிய சந்தைக் கட்டிடத்தொகுதி (01 வருடம்) | 03ஆம் இலக்க அட்டவணை கம்ளை வீதி 1458ஆம் இலக்க வரைபடத்திலுள்ள 10 காணித் துண்டுகள் (01 வருடம்) | 04ஆம் இலக்க அட்டவணை அலகல்ல வீதி 1457ஆம் இலக்க வரைபடத்திலுள்ள 07 காணித் துண்டுகள் (01 வருடம்) | 05ஆம் இலக்க அட்டவணை பெலுங்கல கேகாலை வீதிக்கு அருகிலுள்ள 06 காணித் துண்டுகள் (01 வருடம்) |
|---|---|---|---|---|
| கடை இலக்கம் மற்றும் ஆகக் குறைந்த விலைக்கோரல் | கடை இலக்கம் / வியாபாரம் வருடாந்த ஆகக் குறைந்த விலைக்கோரல் | துண்டு இலக்கம் மற்றும் வருடாந்த ஆகக் குறைந்த விலைக்கோரல் | துண்டு இலக்கம் மற்றும் வருடாந்த ஆகக் குறைந்த விலைக்கோரல் | துண்டு இலக்கம் மற்றும் வருடாந்த ஆகக் குறைந்த விலைக்கோரல் |
| 41/1 = ரூ. 3800.00 அதன் தரைத்தளம் ரூ. 2200.00 | 07-08 = மாட்டிறைச்சி ரூ. 2010000.00 | து. இல. 01 ரூ. 4500.00 து. இல. 02 ரூ. 5343.00 | து. இல. 01 ரூ. 6600.00 து. இல. 02 ரூ. 6600.00 | து. இல. 01 ரூ. 2870.00 து. இல. 02 ரூ. 2740.00 |
| 41/2 = ரூ. 3800.00 அதன் தரைத்தளம் ரூ. 2200.00 | 09 = ஆட்டிறைச்சி/ கோழியிறைச்சி ரூ. 490000.00 | து. இல. 04 ரூ. 6500.00 து. இல. 05 ரூ. 11000.00 | து. இல. 03 ரூ. 18385.00 து. இல. 04 ரூ. 6600.00 | து. இல. 01 ரூ. 2495.00 து. இல. 02 ரூ. 2495.00 |
| 41/3 = ரூ. 3800.00 அதன் தரைத்தளம் ரூ. 2200.00 | 10 = ஆட்டிறைச்சி/ கோழியிறைச்சி ரூ. 490000.00 | து. இல. 06 ரூ. 6600.00 து. இல. 07 ரூ. 6178.00 | து. இல. 05 ரூ. 6120.00 து. இல. 06 ரூ. 6120.00 | து. இல. 01 ரூ. 2470.00 து. இல. 02 ரூ. 2485.00 |
| 41/4 = ரூ. 3800.00 அதன் தரைத்தளம் ரூ. 2200.00 | 17 = பன்றியிறைச்சி ரூ. 571000.00 | து. இல. 08 ரூ. 5690.00 து. இல. 09 ரூ. 11000.00 | து. இல. 08 ரூ. 4770.00 | -- |
| 41/5 = ரூ. 3800.00 அதன் தரைத்தளம் ரூ. 2200.00 | | து. இல. 11 ரூ. 2590.00 து. இல. 12 ரூ. 6000.00 | 06ஆம் இலக்க அட்டவணை சிறப்பு சந்தைக் கட்டிடத்தொகுதி - கடை இல. 12 ரூ. 6000.00 (நீண்டகால குத்தகை - மாதாந்த விலைக்கோரல்) | |

| 07ஆம் இலக்க அட்டவணை வாரச்சந்தை / பொது மலசலகூடம் மற்றும் பிரவேச வீதிகளை குத்தகைக்கு வழங்குதல் (01 வருடம் - வருடாந்த விலைக்கோரல்) | | | |
|---|---|---|---|
| பிலிமதலாவ வாரச் சந்தை (சனிக்கிழமை) | ரூ. 792000.00 | பிலிமதலாவ பொது மலசலகூடம் | ரூ. 80000.00 |
| கடுகண்ணாவ வாரச்சந்தை (ஞாயிற்றுக்கிழமை) | ரூ. 770000.00 | கடுகண்ணாவ பொது மலசலகூடம் | ரூ. 80000.00 |
| கடுகண்ணாவ ஆயுர்வேத உத்தியோகபூர்வ விடுதிக்கு அருகிலுள்ள காணித்துண்டின் பிரவேச வீதியை குத்தகைக்கு வழங்குதல் | ரூ. 3410.00 | நகர சபை விளையாட்டு மைதானத்தின் எல்லையிலுள்ள காணித்துண்டின் பிரவேச வீதியை குத்தகைக்கு வழங்குதல் | ரூ. 1845.00 |

2022-12-30ஆம் திகதி
**கடுகண்ணாவ நகர சபை அலுவலகத்தில்**

..........................................
**டப். ஏ. அமில ரங்க வேரகொட,**
**தலைவர்,**
**கடுகண்ணாவ நகர சபை.**

## இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு
## போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

# விலைமனுக்களுக்கான அழைப்பு

### தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் கெலனிகம முதல் கொடகம வரையான பகுதி மற்றும் கொடகம (பாலமுவ) முதல் மத்தல ஹம்பாந்தோட்டை வரையான பகுதியில் வீதியின் இரு பக்கங்களிலுள்ள நிலத்தில் மரங்களை நடுதல் மற்றும் தோட்ட அலங்கார வேலைகளைச் செய்வதற்காக தொழிலாளர்களை வழங்குவதற்கான விலைமனு கோரல்

01. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பெறுகைக் குழுத் தலைவரினால், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சார்பில் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் பிரிவில் பின்வரும் செயற்பாட்டிற்காக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| ஒப்பந்த இல | செயற்றிட்டத்தின் பெயர் | ஒரு நாளைக்கான தொழிலாளர் களின் எண்ணிக்கை | ஒப்பந்த காலம் (மாதங்கள்) | மொத்த தொழிலாளர் நாட்களின் அளவு | மீளளிக்கப் படாத பணத் தொகை (ரூபா) | விலை மனுப் பிணை முறித் தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| 01. RDA/ EOM&M/ STDP/ LDS/ 2022/54 | தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் கெலனிகம முதல் கொடகம வரையான பகுதியில் வீதியின் இரு பக்கங்களிலுள்ள நிலத்தில் மரங்களை நடுதல் மற்றும் தோட்ட அலங்கார வேலைகளைச் செய்வதற்காக தொழிலாளர்களை வழங்குதல் | 65 | 12 | 19,500 | 13,000.00 + 2,334.00 (இயைபுடைய வரிகள் சகிதம்) | 650,000.00 |
| 02. RDA/ EOM&M/ ESEP/ LDS/ 2022/48 | தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் கொடகம (பாலமுவ) முதல் மத்தல ஹம்பாந்தோட்டை வரையான பகுதியில் வீதியின் இரு பக்கங்களிலுள்ள நிலத்தில் மரங்களை நடுதல் மற்றும் தோட்ட அலங்கார வேலைகளைச் செய்வதற்காக தொழிலாளர்களை வழங்குதல் | 60 | 12 | 18,500 | 9,000.00 + 1,615.00 (இயைபுடைய வரிகள் சகிதம்) | 450,000.00 |

02. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நெ.செ.பரா.மற்றும் முகாமைத்துவப் பிரிவின் செயற்பாட்டு முகவராகும்.
03. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்
04. ஒப்பந்தத்தை பெறுவதற்கான தகைமைக்காக, விலைமனுதாரர் இவ்வாறான மற்றும் நிகரான எண்ணிக்கையான அளவில் தொழிலாளர்களை வழங்குவதில் அனுபவத்தைப் பெற்றிருத்தல் தகைமையாகக் கவனத்திற் கொள்ளப்படும்.
05. விலைமனுக்கள் சமர்ப்பித்தலின் இறுதித் திகதியிலிருந்து 91 நாட்காட்டி நாட்கள் (2023-04-26) வரை விலைமனுக்கள் செல்லுபடியாகும் வகையிலிருத்தல் வேண்டும்.
06. விலைமனுக்கள் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணை முறியுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். (2023-05-24ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்) செல்லுபடியாகும் விலைமனுப்பிணை முறி இணைக்கப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
07. அனைத்து விலைமனுக்கோரல் ஆவண பக்கங்களும் விலைமனுதாரரினால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையிடப்படல் வேண்டும்
08. மேற்கூறப்பட்ட 01ஆம் இலக்கத்திற்கான விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2023-01-17ஆம் திகதி பி.ப. 1.15 மணிக்கும் 02ஆம் இலக்கத்திற்கான விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2023-01-17ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கும் வீதி அபிவிருத்தி அதிகார சபை, 04ஆம் மாடி, மகநெகும மகமெதுர, இல. 216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்ல எனும் முகவரியில் இடம்பெறும்.
09. இது தொடர்பில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றை மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அந்தந்த ஒப்பந்தத்திற்குரிய மீளளிக்கப்படாத கட்டணத்தை ரொக்கப் பணமாகச் செலுத்தியும் மற்றும் எழுத்துருவிலான விண்ணப்பமொன்றை கஹட்டகஹாஹேன, வல்கம, பண்டாரகம என்ற இடத்திலமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குரித்தான அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடு. பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ அமைப்பின் பணிப்பாளர் அலுவலகத்திற்கு சமர்ப்பிப்பதன் மூலம் 2023-01-02ஆம் திகதி முதல் 2023-01-24ஆம் திகதி வரையும் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 2.00 மணிவரையும் கொள்வனவு செய்யலாம். 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் முகவர் / பிரதிநிதி மற்றும் சித்திகரமான கேள்விதாரர் கம்பனி பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்து கொள்ளல் வேண்டும். 2023-01-25ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் நிகழ்வு நிறைவுறும்.
10. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் 2023-01-25ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பெறுகைக்குழு, வீதி அபிவிருத்தி அதிகார சபை, 01ஆம் மாடி, மகநெகும மகமெதுர, இல. 216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'குறித்த வேலையின் பெயர்' குறிப்பிடப்படல் வேண்டும்.
11. வீதி அபிவிருத்தி அதிகார சபை, 01ஆம் மாடி, மகநெகும மகமெதுர, இல. 216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்ல எனும் இடத்திலுள்ள பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தில் விலைமனுக்கள் பெற்றுக்கொள்ளும் நிகழ்வு முடிந்தவுடன் உடனடியாகவே விலைமனுக்கள் திறக்கப்படும் அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
12. மேலதிக விபரங்களுக்கான தொலைபேசி எண்கள் பின்வருமாறு.
   ➢ பொறியியலாளர் - (பராமரிப்பு - அ.நெ.செ.ப. மற்றும் மு. பிரிவு) வீதி அபிவிருத்தி அதிகார சபை. தொலைபேசி 011 3047806

**தலைவர்**
**வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பெறுகைக் குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை,**
**01ஆம் மாடி, மகநெகும மகமெதுர,**
**இல. 216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**கொஸ்வத்த, பத்தரமுல்ல.**

## இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு
## போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

# விலைமனுக்களுக்கான அழைப்பு

### தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பாலடுவ முதல் பெந்திகம வரையான பகுதி மற்றும் பெந்திகம முதல் பரவாகும்புக்க வரையான பகுதியின் பராமரிப்பு வேலைகளைச் செய்வதற்காக தொழிலாளர்களை வழங்குவதற்கான விலைமனு கோரல்

01. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பெறுகைக் குழுத் தலைவரினால், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சார்பில் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் பிரிவில் பின்வரும் செயற்பாட்டிற்காக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| ஒப்பந்த இல | செயற்றிட்டத்தின் பெயர் | ஒரு நாளைக்கான தொழிலாளர் களின் எண்ணிக்கை | ஒப்பந்த காலம் (மாதங்கள்) | மொத்த தொழிலாளர் நாட்களின் அளவு | விலை மனுப் பிணை முறித் தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 01. RDA/ EOM&M/ MNT/ESEP/SP/ 2022/49 | தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பாலடுவ முதல் பெந்திகம வரையான பகுதியில் பராமரிப்பு வேலைகளைச் செய்வதற்காக ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்களை வழங்குதல் | 45 | 12 | 13,500 | 400,000.00 |
| 02. RDA/ EOM&M/ MNT/ESEP/SP/ 2022/50 | தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பெந்திகம முதல் பரவாகும்புக்க வரையான பகுதியில் பராமரிப்பு வேலைகளைச் செய்வதற்காக ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்களை வழங்குதல் | 45 | 12 | 13,500 | 350,000.00 |

02. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நெ.செ.பரா.மற்றும் முகாமைத்துவப் பிரிவின் செயற்பாட்டு முகவராகும்.
03. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்
04. ஒப்பந்தத்தை பெறுவதற்கான தகைமைக்காக, விலைமனுதாரர் இவ்வாறான மற்றும் நிகரான எண்ணிக்கையான அளவில் தொழிலாளர்களை வழங்குவதில் அனுபவத்தைப் பெற்றிருத்தல் தகைமையாகக் கவனத்திற் கொள்ளப்படும்.
05. விலைமனுக்களின் சமர்ப்பித்தலின் இறுதித் திகதியிலிருந்து 91 நாட்காட்டி நாட்கள் (2023-04-25) வரை விலைமனுக்கள் செல்லுபடியாகும் வகையிலிருத்தல் வேண்டும்.
06. விலைமனுக்கள் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணை முறியுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். (2023-05-23ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்) செல்லுபடியாகும் விலைமனுப்பிணை முறி இணைக்கப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
07. அனைத்து விலைமனுக்கோரல் ஆவண பக்கங்களும் விலைமனுதாரரினால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையிடப்படல் வேண்டும்
08. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2023-01-16ஆம் திகதி பி.ப. 1.45 மணிக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை, 04ஆம் மாடி, மகநெகும மகமெதுர, இல. 216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்ல எனும் முகவரியில் இடம்பெறும்.
09. இது தொடர்பில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றை ஒரு விலைமனுவுக்கு மீளளிக்கப்படாத 7,000.00 + 1,257.00 ரூபா (சகல வரிகள் சகிதம்) கட்டணத்தை ரொக்கப் பணமாகச் செலுத்தியும் மற்றும் எழுத்துருவிலான விண்ணப்பமொன்றை கஹட்டகஹாஹேன, வல்கம, பண்டாரகம என்ற இடத்திலமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குரித்தான அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடு. பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ அமைப்பின் பணிப்பாளர் அலுவலகத்திற்கு சமர்ப்பிப்பதன் மூலம் 2023-01-02ஆம் திகதி முதல் 2023-01-23ஆம் திகதி வரையும் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 2.00 மணிவரையும் கொள்வனவு செய்யலாம். 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் முகவர் / பிரதிநிதி மற்றும் சித்திகரமான கேள்விதாரர் கம்பனி பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்து கொள்ளல் வேண்டும். 2023-01-24ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் நிகழ்வு நிறைவுறும்.
10. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் 2023-01-24ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பெறுகைக்குழு, வீதி அபிவிருத்தி அதிகார சபை, 01ஆம் மாடி, மகநெகும மகமெதுர, இல. 216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'குறித்த வேலையின் பெயர்' குறிப்பிடப்படல் வேண்டும்.
11. வீதி அபிவிருத்தி அதிகார சபை, 01ஆம் மாடி, மகநெகும மகமெதுர, இல. 216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்ல எனும் இடத்திலுள்ள பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தில் விலைமனுக்கள் பெற்றுக்கொள்ளும் நிகழ்வு முடிந்தவுடன் உடனடியாகவே விலைமனுக்கள் திறக்கப்படும் அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
12. மேலதிக விபரங்களுக்கான தொலைபேசி எண்கள் பின்வருமாறு.
   ➢ பொறியியலாளர் - (பராமரிப்பு - அ.நெ.செ.ப. மற்றும் மு. பிரிவு) வீதி அபிவிருத்தி அதிகார சபை. தொலைபேசி 011 3047806

**தலைவர்**
**வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பெறுகைக் குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை,**
**01ஆம் மாடி, மகநெகும மகமெதுர,**
**இல. 216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**கொஸ்வத்த, பத்தரமுல்ல.**

# இந்தியாவை அடைந்த இலங்கை அணியினர் நாளைய போட்டிக்காக வெங்கடேவில் பயிற்சி



மூன்று டி20 மற்றும் மூன்று ஒருநாள் சர்வதேச போட்டிகளில் ஆடுவதற்காக நேற்று (01) இந்தியாவை சென்றடைந்த தசுன் ஷானக்க தலைமையிலான இலங்கை அணி வென்கடே மைதானத்தில் பயிற்சிகளை ஆரம்பித்துள்ளது.

இலங்கை மற்றும் இந்திய அணிகளுக்கு இடையிலான முதலாவது டி20 போட்டி நாளை (03) வென்கடே அரங்கில் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டிகளுக்கான இலங்கை அணியினர் கடந்த சனிக்கிழமை (31) மாலை இந்தியாவை நோக்கி புறப்பட்டுச் சென்றனர்.

புத்தாண்டு தினத்தில் மும்பை நகரைச் சென்றடைந்த இலங்கை அணியின் அங்கு பயணித்த விரைவிலேயே பயிற்சிகளையும் ஆரம்பித்துள்ளனர். இந்தியா புறப்படுவதற்கு முன்னர் இலங்கை அணியினர் ஆர். பிரேமதாச மைதானத்தில் பயிற்சி மேற்கொண்டனர்.

இந்நிலையில் இந்தியாவை எதிர்கொள்ள முழுமையாக தயாராக இருப்பதாக இந்தியா செல்வதற்கு முன்னர் அணித்தலைவர் தசுன் ஷானக்க தெரிவித்தார்.

"கடந்த காலங்களில் இந்தியாவுக்கு எதிரான போட்டிகளில் சிறப்பாக ஆடியுள்ளோம். ஆசியக் கிண்ணத்தில் நாம் அவர்களை வெற்றிக்கொண்டோம். ஆனால், அவர்களும் எமக்கு அதிக சவால்களை கொடுப்பார்கள். எனவே, அணியென்ற ரீதியில் நாம் தயாராக உள்ளோம். அவர்களை சிறப்பாக எதிர்கொண்டு தொடரை வெற்றிக்கொள்ள எதிர்பார்க்கிறோம்" என்று அவர் குறிப்பிட்டார்.

இலங்கை அணி இந்திய மண்ணில் ஒருநாள் அல்லது டி20 இரு தரப்பு தொடர்களில் இதுவரை வெற்றியீட்டியதில்லை. அதிகபட்சம் 1997ஆம் ஆண்டு நடைபெற்ற ஒருநாள் தொடரை இலங்கை அணி சமன் செய்திருந்தது.

மறுபுறம் டி20 இரு தரப்புத் தொடர்களில் இலங்கை அணி இந்தியாவை அதன் சொந்த மண்ணில் ஐந்து முறை எதிர்கொண்டுள்ளது. இதில் நான்கு டி20 தொடர்களை தோற்ற இலங்கை அணி கடந்த 2009ஆம் ஆண்டு நடந்த இரண்டு போட்டிகளைக் கொண்ட தொடரை 1 – 1 என சமன் செய்தது.

இதன்படி இலங்கை அணிக்கு புதிய வரலாறு படைப்பதற்கு இந்தத் தொடர் வாய்ப்பாக அமையவுள்ளது.

# இலங்கைக் கிரிக்கெட்டில் மஹேலவின் பதவி நீடிப்பு



மஹேல ஜனவர்தனவின் இலங்கை கிரிக்கெட் அணி, 19 வயதுக்கு உட்பட்ட அணி மற்றும் ஏ அணியின் அலோசனை பயிற்சியாளர் பதவி ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் ஓர் ஆண்டுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

தேசிய அணியின் கிரிக்கெட் செயற்பாடுகளுக்கு பொறுப்பானவராக கடந்த ஆண்டு நியமிக்கப்பட்ட ஜயவர்தன இலங்கை கிரிக்கெட்டின் உயர் செயல்திறன் மையத்தில் வீரர்கள் மற்றும் முகாமைத்துவ குழுவுக்கு மூலோபாய ஆதரவையும் வழங்கி வருகிறார். போட்டிகளுக்கு, குறிப்பாக 19 வயதுக்கு உட்பட்ட மட்டத்தில் மஹேலவின் பங்களிப்பு தொடர்பில் கிரிக்கெட் சபை திருப்தி அடைவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜயவர்தன இலங்கை தேசிய அணிக்கு பயிற்சிக் குழுவை பணியமர்த்துவதிலும் பெரும் பங்கு வகித்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே மஹேல ஜயவர்தனவுக்கு மும்பை இந்தியன்ஸ் அணியில் பரந்த பொறுப்புகள் கொண்ட பதவி ஒன்று வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கண்டி மீண்டும் வெற்றி

நிப்பொன் பெயின்ட் கழகங்களுக்கு இடையிலான ரக்பி லீக்கில் கண்டி விளையாட்டுக் கழகம் விமானப் படை அணிக்கு எதிரான போட்டியிலும் 24–18 என்ற புள்ளிகளால் வெற்றியீட்டியது.

நித்தவலவில் கடந்த சனிக்கிழமை (31) மாலை நடைபெற்ற இந்தப் போட்டியில் ஆரம்பத்தில் இருந்தே ஆதிக்கம் செலுத்திய கண்டி அணி நான்கு டிரைகளுடன் புள்ளிகளைக் குவித்தது.

நடப்புச் சம்பியனாக உள்ள கண்டி இம்முறை தொடரில் இதுவரை ஆடிய மூன்று போட்டிகளிலும் வெற்றியீட்டி முதலிடத்தில் உள்ளது. இதேவேளை விமானப்படை இதுவரை ஆடிய மூன்று போட்டிகளில் ஒரு வெற்றி மற்றும் ஒரு தோல்வியுடன் புள்ளிப்பட்டியலில் ஐந்தாவது இடத்தில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



கொழும்பு சினெர்ஜி ரக்பி அகடமி அண்மையில் நடத்திய ரக்பி விருது விழாவில் ரக்பி விளையாட்டுக்கு ஆற்றிய பங்களிப்புக்காக முன்னாள் ரக்பி வீரர்களான டோனிஅமித், அசோக ஜயசேன மற்றும் நில்பர் இப்ராஹிம் ஆகியோர் கௌரவிக்கப்பட்டபோது பிடிக்கப்பட்ட படத்தினை காணலாம். *(படம்: ருஸைக் பாரூக்)*

# மருதமுனை மருதம் கழகம் 'ஏ' தரத்திற்கு முன்னேற்றம்

**பெரியநீலாவணை விசேட நிருபர்**



அம்பாறை மாவட்ட கால்பந்து லீக்கின் 'பி' தர சுற்றுப் போட்டியில் வெற்றியீட்டிய மருதமுனை மருதம் விளையாட்டுக் கழகம் 'ஏ' தரத்திற்கு தகுதி பெற்றுள்ளது.

28 அணிகள் பங்குபற்றிய இச்சுற்றுத் தொடரின் இறுதிப்போட்டி கடந்த வெள்ளிக்கிழமை (30) மருதமுனை மசூர் மௌலானா மைதானத்தில் நடைபெற்றது. இதில் மருதம் அணி 2 – 1 என்ற கோல் வித்தியாசத்தில் மருதமுனை யுனிவர்ஸ் அணியை வீழ்த்தியது. இதன்போது மருதம் அணிக்காக எம்.எச்.சுஜைத் இரட்டை கோல்களைப் பெற்று அந்த அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

# சவூதி கழக அணியில் ரொனால்டோ இணைவு




சவூதி அரேபியாவின் அல் நாசிர் கழகத்திற்கு 2025ஆம் ஆண்டு வரை ஆடுவதற்கு கிறிஸ்டியானோ ரொனால்டோ ஒப்பந்தமாகியுள்ளார்.

மன்செஸ்டர் யுனைடட் கழகத்தை விமர்சித்து சர்ச்சைக்குரிய பேட்டி ஒன்றை வழங்கிய பின் அந்தக் கழகத்தில் இருந்து வெளியேறிய போர்த்துக்கல் அணித்தலைவர் ரொனால்டோ ஒரு சுதந்திர வீரராக இருந்தார். எனினும், அவர் தற்போது இணைந்துள்ள கழகத்தின் மூலம் வரலாற்றில் கால்பந்து வீரர் ஒருவரின் மிகப்பெரிய சம்பளமாக ஆண்டுக்கு 75 மில்லியன் டொலர்கள் வரை பெறவுள்ளார்.

# இஸ்ரேல் ஆக்கிரமிப்பு பற்றி நீதிமன்றம் செல்கிறது ஐ.நா



பலஸ்தீன நிலங்கள் மீதான இஸ்ரேலிய ஆக்கிரமிப்புத் தொடர்பில் சட்டரீதியான கருத்தினைத் தரும்படி ஐ.நாவின் உச்ச நீதிமன்றத்தை ஐ.நா பொதுச் சபை கேட்டுள்ளது. இது தொடர்பிலான தீர்மானம் பொதுச் சபையில் வாக்கெடுப்புக்கு வந்தபோது அதற்கு 87 நாடுகள் ஆதரவு அளித்ததோடு பிரிட்டன் மற்றும் அமெரிக்கா உட்பட 26 நாடுகள் எதிர்த்து வாக்களித்தன.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தால் தீர்ப்புகளை வெளியிட முடியும் என்றபோதும் அவைகளை செயற்படுத்த முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேலிய வரலாற்றில் இதுவரை இல்லாத கடும்போக்கு அமைச்சரவையின் பிரதமராக பென்ஜமின் நெதன்யாகு பதவி ஏற்று ஒரு நாள் கடந்த நிலையிலேயே கடந்த வெள்ளிக்கிழமை (30) இந்த வாக்கெடுப்பு இடம்பெற்றது.

மேற்குக் கரை தொடர்ந்து இஸ்ரேலின் ஆக்கிரமிப்பில் இருப்பதோடு காசாவில் இருந்து இஸ்ரேல் வெளியேறியபோதும் அதனை ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியாகவே ஐ.நா கருதுகிறது.

ஒட்டுமொத்த ஜெரூசலமும் தனது தலைநகர் என்று இஸ்ரேல் உரிமை கோருகிறது. எனினும் தனது எதிர்கால பலஸ்தீன நாட்டின் தலைநகராக கிழக்கு ஜெரூசலம் உள்ளது என்று பலஸ்தீனர்கள் கூறி வருகின்றனர். இந்த நகர் இஸ்ரேல் தலைநகர் என்று அமெரிக்கா மற்றும் ஒருசில நாடுகளே அங்கீகரித்துள்ளன.

ஐ.நாவின் இந்த வாக்கெடுப்பை பலஸ்தீன அதிகாரிகள் ஒரு வெற்றியாக வரவேற்றுள்ளனர். எமது மக்களுக்கு எதிரான தற்போது இடம்பெறும் குற்றங்களுக்கு இஸ்ரேல் பொறுப்புக் கூற வேண்டிய நேரம் இது என்று பலஸ்தீன துணை பிரதமர் நபில் அபூ ருதைனி குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இதனை இழிவானது என்று இஸ்ரேல் பிரதமர் வர்ணித்துள்ளார். 'யூத மக்கள் தமது சொந்த நாட்டில் ஆக்கிரமிப்பாளர் அல்ல, எமது நிரந்தரத் தலைநகரின் ஆக்கிமிப்பாளர் அல்ல. வரலாற்று உண்மையை எந்த ஒரு தீர்மானத்தாலும் அகற்ற முடியாது' என்று நெதன்யாகு சனிக்கிழமை (31) வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## சர்வதேச செய்திகள்

# கொவிட் தரவுகளைத் தரும்படி சீனாவுக்கு உலக சுகாதார அமைப்பினால் கோரிக்கை



சீனாவில் அதிகரித்து வரும் கொவிட் பரவல் தொடர்பில் அந்நாட்டு அதிகாரிகள் சமகால தரவுகளை பகிர வேண்டும் என்று உலக சுகாதார அமைப்பு கேட்டுள்ளது.

சீனாவில் கண்டிப்பான கொரோனா கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட நிலையில் அங்கு கொவிட் பரவல் தீவிரம் கண்டிருப்பதோடு சீனாவில் இருந்து வரும் பயணிகள் மீது நோய் சோதனை நடத்த பல நாடுகளும் நடவடிக்கை எடுத்துள்ளன.

இந்நிலையில் மருத்துவமனையில் இருப்போர், அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்படுவோர் மற்றும் உயிரிழப்புகள் பற்றிய தரவுகள் தேவை என்று உலக சுகாதார அமைப்பின் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். தடுப்பூசி வழங்கப்பட்டவர்களின் விபரமும் அவசியம் என்று அவர்கள் வலியுறுத்தி உள்ளனர்.

சீனாவில் இருந்து வரும் பயணிகளுக்கு கொவிட் சோதனை நடத்தும் நடவடிக்கையை அமெரிக்கா, ஸ்பெயின், பிரான்ஸ், தென் கொரியா, இந்தியா, இத்தாலி, ஜப்பான் மற்றும் தாய்வான் நாடுகள் அமுல்படுத்தியுள்ளன. இந்த வைரஸ் புதிதாகப் பரவும் அச்சம் உலகெங்கும் அதிகரித்துள்ளது.

சீனாவில் இருந்து இங்கிலாந்து வரும் பயணிகள் அவர்கள் விமானம் ஏறும் முன்னர் கொவிட் இல்லை என்ற சோதனை முடிவை தர வேண்டும் என கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

சீன அதிகாரிகளை சந்தித்த பின்னர் ஐ.நா சுகாதார நிறுவனம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், 'பெருந்தொற்று நிலை தொடர்பில் குறிப்பிட்ட சமகால சுகாதார தரவுகளை தொடர்ச்சியாக பகிர்வதற்கு உலக சுகாதார அமைப்பு மீண்டும் கேட்டுக்கொண்டது. வழங்கப்பட்ட தடுப்பூசிகள் மற்றும் தடுப்பூசி நிலை, குறிப்பாக 60 வயதுக்கு மேற்பட்ட பாதிக்கக் கூடிய மக்களின் தரவுகள் தேவையாக உள்ளன' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் உதவ விரும்புவதாகவும் தடுப்பூசியில் ஏற்பட்டிருக்கும் தயக்க நிலைக்கு தீர்வு வழங்க உதவுவதாகவும் உலக சுகாதார அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

கொவிட்–19 மதிப்பாய்வு தொடர்பிலான உலக சுகாதார அமைப்பின் தொழில்நுட்ப ஆலோசனைக் குழு கடந்த செவ்வாய் அன்று சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தது. அதில் வைரஸ் நிலை பற்றிய விபரம் அடங்கிய தரவுகளை தரும்படி சீன விஞ்ஞானிகளை அந்தக் குழு கேட்டுக்கொண்டது.

சீனாவில் கொவிட் தொற்றினால் கடந்த டிசம்பர் முழுவதும் 13 பேர் மாத்திரமே இறந்ததாக உத்தியோகபூர்வ தரவு குறிப்பிடுகின்றபோதும், பிரிட்டனைத் தளமாகக் கொண்ட ஆர்பினிட்டி சுகாதார தரவு நிறுவனத்தின் கணிப்பின்படி அந்நாட்டில் ஒவ்வொரு நாளும் சுமார் 9000 பேர் நோய்த் தொற்றினால் உயிரிழப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# அஸாம் காஸிரங்கா சரணாலயம் பிரெஞ்சு அமைப்பினால் அபிவிருத்தி



அஸாமில் உள்ள புகழ்பெற்ற காஸிரங்கா விலங்குகள் சரணாலயம் பிரெஞ்சு அபிவிருத்தி அமைப்பினால் 80.2 மில்லியன் யூரோ செலவில் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது. அடுத்த வருடம் நிறைவு பெறவுள்ள இத்திட்டத்தின் கீழ், வெள்ள அபாயத்தில் இருந்து விலங்குகள் தம்மைக் காத்துக்கொள்வதற்கான செயற்கை மேட்டு நிலங்கள், சட்டவிரோத வேட்டையைத் தடுக்கும் முகாம்கள், கானகத்தை அண்டி வாழும் சமூகங்களுக்கு மாற்று வாழ்வாதார வசதிகள் என்பன செய்துகொடுக்கப்படவுள்ளன. மேலும் 33,500 ஹெக்டேயர் காணி காடு வளர்ப்புக்குள்ளாகும் என்றும் பத்தாயிரம் வனத்தை அண்டி வாழும் மக்களுக்கு மாற்று வாழ்வாதாரங்களில் பயிற்சி அளிக்கப்படும் என்றும் இந்த பிரெஞ்சு அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தியாவின் மிகச் சிறந்த சரணாலயங்களில் ஒன்றாக காஸிரங்கா வனப்பகுதி விளங்குகிறது. இதன் 457 சதுர கி.மீ. பரப்பளவே அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

இப்பூங்காவில் சட்டவிரோத வேட்டையாடுதல் தற்போது மிகவும் குறைந்திருப்பதாகவும் இந்த அபிவிருத்தித் திட்டத்தின் பின்னர் சட்டவிரோதமாக மரம் வெட்டுதலும் குறைந்து காணப்படுவதாகவும் இத்தேசிய பூங்காவின் பிரதான காப்பாளர் ஜதீந்த்ரா சர்மா தெரிவித்துள்ளார்.

# முன்னாள் பாப்பரசருக்கு போப் பிரான்சிஸ் அஞ்சலி



பாப்பரசர் பிரான்சிஸ் தனது முன்னோடியான காலஞ்சென்ற 16ஆம் பெனடிக்ட் பாப்பரசருக்கு அஞ்சலி செலுத்தியுள்ளார்.

பாப்பரசர் பெனடிக்ட் உன்னதமான மற்றும் கனிவானவர் என்றும் ரோமன் கத்தோலிக்க திருச்சபைக்கு கிடைத்த நன்கொடை என்றும் பாப்பரசர் குறிப்பிட்டுள்ளார். அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் மூன்றாம் சார்ல்ஸ் மன்னர் உட்பட உலகத் தலைவர்கள் பலர் முன்னாள் பாப்பரசரின் மறைவுக்கு கவலை வெளியிட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை தனது 95 வயதில் காலமான பெனடிக்ட் பாப்பரசர் 2013ஆம் ஆண்டு மோசமான உடல்நிலையை காரணமாகக் கூறி பாப்பரசர் பதவியில் இருந்து விலகினார். கடந்த 600 ஆண்டுகளில் அவ்வாறு செய்யும் முதல்வராக அவர் இருந்தார்.

பாப்பரசரின் இறுதிச் சடங்கு வரும் ஜனவரி 5இல் வத்திக்கானில் இடம்பெறவுள்ளது.

# உக்ரைனில் புத்தாண்டில் குண்டு மழை

உக்ரைனில் நேற்று புத்தாண்டு தினத்தில் ரஷ்யா சரமாரி ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியுள்ளது. இதன்போது பல நகரங்களில் குண்டு மழை பொழிந்திருப்பதோடு தலைநகரில் பல வெடிப்புகளும் இடம்பெற்றுள்ளன. இதில் குறைந்தது ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். ஹோட்டல் ஒன்று சேதமடைந்துள்ளது.

உக்ரைனில் போர் ஆரம்பித்த பின்னர் ரஷ்யா நடத்திய பாரிய வான் தாக்குதல் இடம்பெற்று இரு தினங்களிலேயே இந்தப் புதிய தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. உக்ரைனியர்கள் புத்தாண்டை இருளில் கொண்டாடுவதற்கு ரஷ்யா மேலும் தாக்குதல்களை நடத்தக்கூடும் என்று உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்யா கடந்த சில மாதங்களாக உக்ரைனின் சக்திவலுத் துறையை இலக்கு வைத்து தாக்குதல்களை நடத்தி வரும் நிலையில் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டு கடும் குளிருக்கு மத்தியில் பல மில்லியன் மக்கள் இருளில் வாடுகின்றனர். ரஷ்யாவின் 20 ஏவுகணைகளில் 12ஐ சுட்டு வீழ்த்தியதாக உக்ரைன் ஆயுதப் படைகளின் தளபதி வெலரி சலுஸ்னி தெரிவித்துள்ளார். வான் தாக்குதல் எச்சரிக்கை விடுக்கும் சைரன் ஒலி எழுப்பப்பட்டதை அடுத்து தலைநகரில் உள்ள மக்கள் பாதுகாப்பான இடத்திற்கு ஓட்டம்பிடித்தனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜனவரி மாதம் 2ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.